கல்கி

KALKI 7.9.2003 ரூ.6.00

F-1 பேட்டி!



கோவை வாசகர்களுக்கு

ஆஹா!

ரூ.50,000 பரிசு!

கோவைச் சிறப்பிதழ்

விக்ரம் மருத்துவமனை & ENT ஆராய்ச்சி மையம்

69, மேற்கு வெங்கடசாமி ரோடு, ஆர். எஸ். புரம், கோயமுத்தூர் - 641 002. தமிழ்நாடு. இந்தியா.
போன் : +91-422- 2550633,2546387, 2550133 மொபைல் : +91-98431-50063
ஃபேக்ஸ் : +91-422 - 2545384 E-mail : vikram_hospital@yahoo.com

முக்கிய உறுப்புகள் மூன்று...



முழுமையான பராமரிப்பின் முகவரி ஒன்று

விக்ரம் மருத்துவமனை, இந்தியாவில் மட்டுமின்றி அமெரிக்கா, ஐரோப்பா, வளைகுடா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளிலும் உள்ள எண்ணற்ற மருத்துவமனைகளால் பரிந்துரை செய்யப்படும் ஓர் ENT மருத்துவமனை. மேலும், இரத்தக்கசிவு மற்றும் காயத் தழும்புகள் இல்லாத அதிநவீன லேசர் சிகிச்சைக்காக, KTP / 532 AURA மற்றும் CARL ZEISS SENSERA மைக்ரோஸ்கோப் கருவிகளை, தென் ஆசியாவிலேயே முதன்முறையாக கோவையில் அறிமுகப்படுத்திய பெருமையையும் பெற்றுள்ளது.



சென்சரா மைக்ரோஸ்கோப்

சிகிச்சைகளில் 32 ஆண்டுகால நிபுணத்துவம் ... அதிநவீன தொழில்நுட்பம் ...
பூரண குணமடைந்த பல தலைமுறைகள்...

சிறப்பு சிகிச்சை முறைகள்

காது : ● காது கேளாமை, தலைசுற்றல், சீழ் வடிதல் மற்றும் முகவாதம் போன்றவற்றிற்கு நுண்ணறுவை சிகிச்சை ● கம்ப்யூட்டர் ஆடியோமெட்ரி (காது பரிசோதனை) மற்றும் டிம்பனோமெட்ரி ● காது கேளாமையை ஆரம்பத்திலேயே கண்டறிய, குழந்தைகளுக்கும் பரிசோதனை ● B.E.R.A. / O.A.E / S.S.E.P ● டிஜிட்டல் ஹியரிங் எய்ட் மையம் ● காக்லியர் இம்ப்ளாண்ட் மையம் ● நீரிழிவு நோயினால் காது கேட்காமல் போவதை தடுக்கும் பரிசோதனை.

மூக்கு : ● சைனஸ் / மூக்கு சதை வளர்ச்சி சிகிச்சை ● எண்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி ● முகம் / மூக்கிற்கான பிளாஸ்டிக் சர்ஜரி ● குறட்டை நீக்குவதற்கு லேசர் சிகிச்சை ● ஸ்லீப் லேப் ● தலைவலி / அலர்ஜி சிறப்பு சிகிச்சை மருத்துவ மையம்.

தொண்டை : ● வீடியோ எண்டோஸ்கோப்பி ● குரல்வளை நுண்ணறுவை சிகிச்சை ● குரல் மாற்று சிகிச்சை / வழக்கமான குரலை தக்க வைக்கும் சிகிச்சை ● தைராய்டு மற்றும் கழுத்து கட்டி சிகிச்சை ● பேச்சு-மொழி சிகிச்சை ● மாஸ்டர் ENT சிறப்பு பரிசோதனை ● முழுமையான புற்று நோய் தடுப்பு பரிசோதனை

● டாக்டர் P. G. விஸ்வநாதன் M. S., F.R.A.C.S., F.I.C.S. D.L.O. ● டாக்டர் அருணா விஸ்வநாதன் M.B., M.S.(E.N.T), F.A.G.E.
● டாக்டர் அஞ்சனா விஸ்வநாதன் M.B., M.S.(E.N.T), F.A.G.E. ● டாக்டர் சுமா சரணம் M.B.B.S., D.L.O.
வருகை மருத்துவர்கள் ● டாக்டர் W.J. கார்னே M.D. (அமெரிக்கா) ● டாக்டர் கார்ல் ஹார்ன் M.D. (அமெரிக்கா) ● டாக்டர் கலோகெரோ சாஞ்சோ M.B., M.S.(இத்தாலி)

PGV ROTARY INTEGRAL EAR INSTITUTE

இண்டக்ரல் காது இன்ஸ்டிடியூட் ரெசிடென்ஷியல் ஸ்கூல் - சிறப்பம்சங்கள் :

● தென் ஆசியாவிலேயே முதலாவது ● பிறந்த குழந்தையின் காது கேளாறுகளை பரிசோதனை மூலம் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கும் வசதி ● நோய் கண்டுபிடிப்பு மற்றும் ஆலோசனை ● ஆம்ப்ளிபிகேஷன் / காக்லியர் இம்ப்ளாண்ட் - கேட்கும் திறன் பயிற்சி ● முழுநேர ஸ்பீச்தெரபிஸ்ட் / ஆடியோலஜிஸ்ட்டுகள் அளிக்கும் பேச்சு பயிற்சி ● அகௌஸ்டிக் எக்விப்மெண்ட் மற்றும் ஆம்ப்ளிபிகேஷன் சிஸ்டம் ● வெளிப்புற சப்தங்கள் புகாத ஒலி அமைப்புடன் கூடிய வகுப்பறைகள் ● மல்டிமீடியா தியேட்டர் ● பேச்சு மற்றும் கேட்கும் திறன் சாப்ட்வேருடன் கூடிய நூலகம் ● பெற்றோர்-குழந்தைகள் தங்கும் வசதி.

லாப நோக்கமின்றி நல்ல உள்ளம் கொண்டோர் வழங்கும் நிதி உதவியுடன் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சிகிச்சையின் பலன் பெற்று வருகிறார்கள்.

தாங்கள் வழங்கும் நிதி உதவிக்கு 80-G-ன்படி வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்



ஹம்மா! புரட்டியதுமே
கொங்குநாட்டு
வாசனை வீசுதே!

நரேன்!
நரேன்!
விரைந்து
வா!
4-6



தராசு: 56-58

சுமி: 95

முக்கூர்: 84-87

முத்துக்குமார்: 92-94

பா.ராகவன்: 76-79



காக்க...
காக்க...
விமர்சனம் 88-89



"தித்திக்கும் திருப்பம் நிச்சயம்!"
ப.சிதம்பரம் பேட்டி 8-9

கோவை மாவட்டச்
செய்திகள், கட்டுரைகள் :
ஆர்.சி.ஜெயந்தன், திருநாவுக்கரசு
அட்டைப் படங்கள்: டி.ஜி.சண்முகம்

கல்கி

7.9.2003

ஆஹா! ரூ. 50,000 பரிசு!

குவிஸ் போட்டி கூப்பன் - 5

1. பாண்டிச்சேரியிலுள்ள மெகா ஸ்டேடியத்தின் பெயர் ....

2. பாண்டிச்சேரியில் உள்ள தாவரவியல் (பொட்டானிகல்) பூங்கா...............ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பாண்டிச்சேரியின் ....சாலையில் உள்ளது.

4. மாஹே.................மாநிலத்திற்குள் அமைந்திருக்கிறது.

5. ஒரு காலத்தில் சுதந்திரப்போராட்ட வீரராகவும் விளங்கிய மகான் அரவிந்தர் .... மாநிலத்தைச் சேர்ந்தவர்.

6. பாண்டிச்சேரிக்கு .... மக்களவைத் தொகுதி மட்டுமே உள்ளது.

பாண்டிச்சேரி வாசகர்களே! கடந்த நான்கு வாரக் கல்கி இதழ்களில் இடம் பெற்ற கூப்பன்களைப் பூர்த்தி செய்து வைத்துக் கொண்டிருக் கிறீர்களா...?

இதோ ஐந்தாம் கூப்பன். இதில் உள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி



வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 14 செப்டெம்பர் இதழிலும் இதே போன்று குவிஸ் கூப்பன் இடம்பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் செப்டெம்பர் 20ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக வானதி பதிப்பகம் வழங்கும் ரூபாய் பத்தாயிரம் பெறுமானமுள்ள புத்தகங்கள் நூறு பேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

பாண்டி
வாசகர்களே....
இனி ஒரே ஒரு
கூப்பன்தான்!
சேர்த்து வைச்சு
அனுப்புங்க!
அதிர்ஷ்டம்
காத்திருக்கு!

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



நரேன்! நரேன்! விரைந்து வா!

பிபிசியிலும் சிஎன்என்னிலும் வருகிற சர்வதேசப் பிரபலம்! 'ஃபார்முலா' என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் நினைவுக்கு வந்துவிடுகிற சிரித்த முகம்! 'எக்ஸ்செப்ஷனல் டேலண்ட்', 'ஃபென்டாஸ்டிக் - ஸ்பீட்', 'எக்ஸ்ட்ரீம் கார் - கண்ட்ரோல்', 'அன்பீட்டபிள் ஸ்டைல்' என்றெல்லாம் பன்னாட்டு பத்திரிகைகள் எழுதித் தள்ளும் ஹாட்டஸ்ட் பரபரப்பு! இதற்கு முன் ஒரு இந்தியன்கூட தொட இயலாது போன ஃபார்முலா ஒன் (F-1) காற்று வேக கார் பந்தயத்தில் வெற்றியை எட்டக் காத்திருக்கும் கோவை மக்களின் கண்மணி - உலகின் அதிவேக இந்தியர் எனப் புகழப்படும் நரேன் கார்த்திகேயன் அளித்த பிரத்யேகப் பேட்டி!

பல கார் பந்தய வீரர்களை உருவாக்கிய ஊரைச் சேர்ந்தவர், அப்பாவும்கூட ஒரு கார் பந்தய வீரர் போன்ற காரணங்களைத் தவிர ஃபார்முலா பந்தயங்களை முழுநேர வாழ்க்கையாக்கிக் கொள்ள நரேனுக்கு வேறு காரணங்கள் இருந்ததா?

இரண்டு காரணங்களைச் சொல்ல வேண்டும். சிறு வயது முதலே வேகம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். மற்றொன்று, கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்தியர் யாரும் ஃபார்முலா ஒன் பந்தயத்துக்குள் நுழைய முடியவில்லை. மேற்கத்தியர் ஆதிக்கம் அதிகமுள்ள ஃபார்முலா ஒன்றில் நுழைந்து, அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று நினைத்தேன்.

எஃப் ஒன்னில் இந்தியர்கள் நுழைவதை ஐரோப்பியர்கள் விரும்புவதில்லையா?

அப்படிச் சொல்ல முடியாது! ஆனால் இந்தியர்களின்

திறமையைச் சந்தேகிக்கிறார்கள். F-1ல் பங்கேற்க இந்தியர்களுக்கு ஸ்பான்சர்கள் கிடைப்பதில்லை! காரணம் போட்டிக்கு மிகப் பெரிய தொகை செலவாகும். இதுவே அவர்களுக்கு மிகப் பெரிய கிண்டல். ஜென்ஸ் பட்டன் என்ற வெள்ளைக்காரரை எஃப் 3-ல் வென்று காட்டினேன். அவர் இப்போது F-1 போய்விட்டார். அவருக்குச் சுலபமாக ஸ்பான்சர்ஷிப் கிடைத்துவிட்டது.

கிரிக்கெட் போல ஃபார்முலா கார் பந்தயம் ரசிகர்கள் மத்தியில் அதிகம் பிரபலமாகாததுதானே ஸ்பான்ஸர்ஷிப் கிடைக்காததற்குக் காரணம்?

ஆமாம்! ஆனால் கடந்த ஐந்து வருடங்களில் ஃபார்முலா கார் பந்தயங்களுக்கு மவுசு கூடியிருக்கிறது. இப்போது F-2 வரை ஸ்பான்சர்கள் கிடைப்பதில் பிரச்னைகள் இல்லை. தவிர இந்தியா முழுக்க நாற்பது கோ- கார்டிங் சர்க்யூட் மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம், இளைய தலைமுறையிடம் ஃபார்முலா கார் பந்தயம் குறித்த ஆர்வமும், நாட்டமும் அதிகரித்திருக்கிறது.



அடுத்த இருபது வருடங்களில் இந்தியாவிலிருந்து ஓரளவு F-1 டிரைவர்களை உலக அரங்கில் எதிர்பார்க்க முடியும்!

உங்களது தற்போதைய ஸ்பான்சரான டாடா குழுமம் உங்களது F-1 முயற்சியை ஆதரிக்க முன் வருவார்களா?

எனது லட்சியத்தின் மீது என்னைவிட தீவிர கவனம் செலுத்துகிறார்கள். டாடா மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்!

F-1 பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

ஃபார்முலா கார் பந்தயங்களில் அது தான் இறுதியானது. உலக சாம்பியன் பட்டத்திற்கான போட்டி! இதில் இருபது டிரைவர்களுக்கு மட்டுமே ஸ்லாட் கிடைக்கும். அந்த இருபதில் ஒருவனாக வருவதுதான் எனது லட்சியம். கடந்த 2000-ல் F-3யை எட்டினேன். ஏசியன் ஃபார்முலா சாம்பியன்ஷிப்பை வெல்ல முடிந்தது. இப்போது F-2 பந்தயங்களில் பங்கேற்று வருகிறேன்.

F-1 ல் வெற்றியை உறுதி செய்யும் காரணிகள் பற்றிச் சொல்லுங்களேன்?

ஸ்பீட்தான் முதலில். நாம் பயன்படுத்தும் கார், அதன் உதிரிப் பாகங்களிலும்கூட வெற்றி அடங்கியிருக்கிறது. ஆனால் இவை எல்லாவற்றும் அடிப்படையானது உடல் தகுதி. இது மிக மிக முக்கியம்.

உடலைத் தகுதி

—கோவை மக்களின் வந்தே மாதரம்!




''இந்த ஆபீஸ்ல அநியா யத்துக்கு லஞ்சம் வாங்க றாங்க...''

''எப்படி சொல்றே?''

''கிளார்க்குகிட்ட மானேஜர் யாருன்னு கேட் டேன். ஆளை காட்டறதுக் குக்கூட காசு கேட்கறாங் கன்னா பாரேன்!''


– மலர் சூர்யா



''நீங்கதான் இந்த ஹோட்டல் முதலாளியா? சாப்பாட்டுல கல்லுங்க!''

''நீங்க 'அன்-லிமிடெட் மீல்ஸ் சாப்பிட்டிருப்பீங்க.''

– யமுனா ரெங்கநாதன்



''கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு மான் நின்று கொண்டே இருக்கே...''

''பக்தி மானாக இருக்கும்...''

– சங்கரன்கோவில் மோகன்

யுடன் வைத்துக் கொள்ள என்னென்ன பயிற்சிகளை மேற் கொண்டு வருகிறீர்கள்?

இதயத்துக்கான பயிற்சி ரொம்ப முக்கியம். இப்போது ஐரோப்பாவில் F-2 முதல் சுற்றுப் பந்தயங்களில் ஓட்டித் திரும்பியிருக்கிறேன். அங்கே மே-ஜூன் சீசன்களில் உடல் வெப்பம் மிக அதிகம். இதனால் இரண்டு கிலோ உடல் எடை குறைந்து விடும். காரில் உட்கார்ந்து ஒரு சுற்று வந் தாலே மயக்கம் வந்துவிடும். இதற்காகத்தான் கார்டியோ வாஸ்குலர் பயிற்சிகளைச் செய்து வருகிறேன். இந்தப் பயிற்சிகளை மோண்டையா என்ற சிறப்பு நிபுணர் சொல் லித் தருகிறார். அடுத்து அப்பர் பாடியை வலிமையாக்கும் பயிற்சிகளையும், கழுத்துக்கான சிறப்பு உடற்பயிற்சியையும் ஜெரால்டு என்ற ஆங்கிலேயரிடம் கற்று வருகிறேன். இதயப் பயிற்சியைப் போலவே இவையும் மிக முக்கியம். ஓட்டுவதற்கான பயிற்சியில் ராம்வில்சன் ஆலோசனை தருகிறார்.

ஒவ்வொரு பந்தயத்திலும் சுற்றுப் பாதையில் மின்ன லாய் விரைந்து வருகிறபோது உங்கள் மனநிலை எப்படியிருக்கும்?

முன்பெல்லாம் இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்வது சவாலாக இருந்து வந்தது. மனம் எப்போதும் டிராக்கில் ஒரு கண்ணையும், இதயத்தில் ஒரு கண்ணை யும் வைத்திருக்கும். இப்போது அந்த அவஸ்தையிலிருந்து தியானம் என்னை முழுவதுமாக விடுவித்து விட்டது. மனத்தை ஒருமுகப்படுத்தவும், தவறுகளை மீண்டும் செய் யாதிருக்கவும் தியானம் அற்புதமாய் உதவுகிறது. எனது உடலை நெகிழ்வுடன் வைத்திருக்க யோகா உதவு கிறது.

இப்போது நீங்கள் பங்கு பெற்று வரும் போட்டிகள்?

F-2 உலகப் போட்டிகள். பிப்ரவரியில் தொடங்கி, நவம் பர் வரை நடைபெற்று வருகின்றன. மொத்தம் பதி னெட்டுப் போட்டிகள். ஒன்பது நாடுகளிலிருந்து இருபத்து இரண்டு டிரைவர்கள் கலந்து கொண்டு வருகிறார்கள். ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் தென் அமெரிக் காவில் நடந்து வருகிறது. இதுவரை பத்து போட்டிகள் முடிந்து விட்டன. கடைசியாக நடந்த போட்டி ஜெர் மனியில். அதில் நான் நான்காவது இடத்தைப் பிடித் தேன்.

F-1 ல் உலக சாம்பியன் போட்டியில் பங்கேற்பது எப்போது?
நரேன் பார்வையில் அஜித் எப்படி?
நரேனின் ரகசியக் காதல்?
F-1க்கு கேர்ள் ஃபிரெண்டை அழைத்துச் செல்ல இயலுமா?
இந்தியாவில் ஏன் ஓட்டுவதில்லை?...

இன்னும் பல சூடான கேள்விகளுக்கு நரேன் அளித்த ஸ்பீடு பதில்கள் அடுத்த இதழில்.

Ramakrishna Mission Students' Home,

66, P.S. Sivasamy Salai, Mylapore, Chennai - 4. Ph : 24990264, 24992537, 52107550
Fax : 24660589 E-mail : rkmshome@vsnl.com Website : www.rkmshome.org

ஓர் வேண்டுகோள்

1905ல் துவங்கப்பட்ட ராமகிருஷ்ண மாணவர் இல்லமானது. ராமகிருஷ்ண மிஷன் பேலூர் மடம். ஹெளரா. மேற்கு வங்காளத்தின் கிளையாகும். இது 2005 பிப்ரவரியில் 100 ஆண்டுகளை பூர்த்தி செய்கிறது. கடந்த 98 ஆண்டுகளில் இலவச உணவு, உடை இருப்பிடம் மற்றும் உறைவிட உயர்நிலைப்பள்ளி & உறைவிட பாலிடெக்னிக் மூலம் குருகுல கல்வி அளித்து ஆயிரக்கணக்கான மாணவர்களின் மேன்மையான வாழ்விற்கு பணியாற்றியுள்ளது. இல்லத்தின் வசதிகளுடன் எண்ணற்ற மாணவர்கள் மேல்நிலைக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் பெற்று வாழ்வில் முன்னேறியுள்ளனர். தற்சமயம் இல்லத்தில் 400 மாணவர்கள் கல்வி பெறுகின்றனர். இல்லமானது இப்பகுதி சிறார்களின் முன்னேற்றத்திற்காக ஆரம்பப்பள்ளியும் நடத்துகிறது.

1930களில் கட்டப்பட்ட "சில்வர் ஜூப்பிளி ஒர்க்ஷாப்." "அப்துல் ஹகீம் வார்டு" மற்றும் குருகுலத்தின் இன்றியமையாத "ஆசிரியர் / அலுவலர் குடியிருப்பு" கட்டிடங்கள் காலப் போக்கினால் பழுதடைந்து புதிதாக கட்ட வேண்டிய நிலையிலுள்ளன. இவை புதிதாக கட்ட சுமார் ரூ.5.22 கோடி தேவைப்படுகிறது.

இந்த இல்லத்தின் உன்னத சேவையை ஊக்குவிக்கும் வகையில் மேற்படி நற்பணிக்கு நன்கொடை வாரி வழங்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். இந்த நன்கொடைக்கு இந்திய வருமான வரி சட்டம் 80ஜி-ன்படி வரிவிலக்கு உண்டு. நன்கொடைகளை Ramakrishna Mission Students' Home, Chennai - 4 என்ற பெயரில் காசோலை / டிமாண்ட் டிராப்ட் ஆக செயலாளர் ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்திற்கு கடிதத்துடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுவாமி வீதபயாநந்தா
செயலாளர்

21.07.2003




காது கேளாதவர்களையும், ஊமைத் தன்மை உள்ளவர்களையும் சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்துகிறார்.

டாக்டர் சாமிகிரி சித்தர்

காது கேளாதவர்களே வாருங்கள்


உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் வாருங்கள்.

காதில் வலியா? இரைச்சலா? சீழ் வடிகிறதா?
சரியாக காது கேட்கவில்லையா?



டாக்டர். எஸ். சீனிவாசன்

- 2 வேளை சிகிச்சை பெற்று 3 மணி நேரத்தில் சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள்.
- அறுவை சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.
- காது கருவி உபயோகித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில்லை.
- பரிசோதனைக்கு பிறகே சிகிச்சைக்கு ஏற்கப்படும்.



டாக்டர். எஸ். சிராஜன்

ஊமைதன்மையுள்ள 7 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 3½ வருடம் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

பரிசோதனை நேரம் : மதியம் 2.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விபரங்களுக்கு போன் மருத்துவமனை 0422 - 2234215 வீடு : 2473291

டாக்டர் சாமிகிரி சித்தர்

காதொலி நிலைய சித்த மருத்துவனை, பு.எண்.383, ப.எண்.401,
கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோவை - 12. www.hearinghome.com Email : info@hearinghome.com

ராஜ் டி.வி.யில் செவ்வாய்கிழமை தோறும் காலை 8.45 முதல் 9.00 மணி வரை
தமிழன் டி.வி.யில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.55 முதல் 9.00 மணி வரை சிகிச்சை பற்றி டாக்டர் விளக்கம் அளிக்கிறார்.

இன்றைய தமிழக சூழலில் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அவதூறு வழக்குகள் பாதிக்காத வகையில் ஆளுங்கட்சியை விமர்சிப்பதற்கு ஒரு தனித் திறமை வேண்டும். அந்த வகையில் மேடைகளில் மிக கண்ணிய மாகவும், ஆணித்தரமாகவும் தமது கருத்துக்களை எடுத்து வைக்கிறார் ப. சிதம்பரம். 2006ம் ஆண்டுக்குப் பிறகு தி.மு.க. அ.இ.அ.தி.மு.க என்ற இரண்டையும் ஓரங்கட்டி விட்டு மாற்று ஆட்சி அமைக்கும் முயற்சியில் இறங்கியிருப்பவரின் திட்டங்கள் என்ன..?

"தி.மு.க.வையும், அ.இ.அ.தி.மு.கவையும் ஒப்பிட்டு விமர்சனம் செய்யும் உங்கள் பேச்சு, தி.மு.க.வினரால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறதே!"

தி.மு.கவை விமர்சிக்கும் முதல் நபர் நானல்ல, ஏற் கெனவே தி.மு.கவை இதர கட்சிகளின் தலைவர்கள் கண்டித்துள்ளார்கள், விமர்சித்துள்ளார்கள். 2001ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கூட இந்த ஐந்து கட்சிகளும் அ.இ.அ.தி.மு.க. மேடையிலிருந்து கொண்டு கடுமையாக, தி.மு.க.வை வசை பாடினார்கள். இந்தக் கட்சிகளைத் தவிர, இப்போது மிகவும் தோழமையுடன் இருக்கும் ம.தி.மு.க. பிரமுகர்களும் தி.மு.கவை விமர்சித்து வந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் விமர்சித்த நிலைக்கும், என் அணுகு முறைக்கும் வித்தியாசமிருக்கிறது. தி.மு.கவைப் பற்றி நான் பேசும்போது அதன் கடந்த கால செயல்பாடுகளைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்கிறேன். தமிழகத்தின் எதிர் காலம், தமிழர் நலன் என்று வரும் போதுதான், தி.மு.க.வையும் அ.இ. அ.தி.மு.கவையும் ஒப்பிட்டு விமர்சிக் கிறேன்; எடை போடுகிறேன். தி.மு.க. தலைவரின் கடந்த கால பாதை அல்லது பார்வை எப்படி இருந்த போதிலும் 2006ம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில் அவரது தலை மையில் ஆட்சி அமைந்து தமிழகத்தை வழி நடத்திச் செல்ல முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. அதே போல அ.இ.அ.தி.மு.கவுக்கும் 2006ம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிடைக்காது என்று உறுதியாக நம்புகிறேன். அதற்கான தகுதியை அக்கட்சி இழந்து விட்டது. எனவே, தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. அல்லாத ஒரு கட்சியே 2006ம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று வேலை செய்கிறேன். அந்த அடிப்படையில் பார்க்கும்போது தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பேச வேண்டிய அவசியம் உண்டாகிறது. எனவே பேசு கிறேன்.

"ஆனால் சில இடங்களில் பேசும் போது, அ.இ. அ.தி.மு.கவை விட தி.மு.க. எவ்வளவோ மேல் என்றும் பேசியிருக்கிறீர்கள்!"

தமிழகத்தின் எதிர்கால அரசியலில் ஆட்சிப் பொறுப்புக்கு தி.மு.க. அல்லது அ.இ.அ.தி.மு.க. என்ற நிலையே ஏற்படக் கூடாது என்பது என் விருப்பம். இந்த இரு கட்சி களை விட்டால் தமிழகத் துக்கு நாதி இல்லை என்ற நிலை மாற வேண்டும். அந்த மாற்றத்துக்காக நான் இப்போது உழைத்துக் கொண்டிருக்கிறேன். என் முயற்சியின் பலன் மக்களை அடையத் தாமதமாகும் பட்சத்தில், அ.இ.அ.தி. மு.கவை விட, தி.மு.கவை ஓரளவு ஏற்றுக் கொள்ள முடியும். காரணம், தி.மு.க. தலைமை, ஜனநாயகப் பண்புகளை மதிக்கிறது. கலைஞர் முதல்வராக இருந்த போது எந்தப் பிரச் னையானாலும், அவரை நேரில் சந்தித்துப் பேசலாம், விவாதிக்கலாம். சட்டமன்





"தித்திக்கும்

றத்தில் எடுத்து வைக்கலாம். பத்திரிகைகளுக்கு முழுச் சுதந்திரம் இருந்தது. ஆனால் ஜெயலலிதா ஆட்சி செய்த கடந்த காலமாகட்டும், தற்போதும்கூட, நான் சொன்ன ஜனநாயகப் பண்புகள் அவரால் காட்டப்படவில்லை. இந்த அளவுகோல்கள் காரணமாக, என் தராசில் தி.மு.கவின் மீது நான் வைத்துள்ள மதிப்பு கூடுகிறது.

"காங்கிரஸ் பாரம்பரியத்தில் மதிப்புமிக்கத் தலைவராக இருக்கும் நீங்கள் கோஷ்டிப் பூசல்களில் சிக்கித் தவிக்கும் தமிழக காங்கிரஸுக்கு நல்ல இமேஜை உருவாக்கி மக்கள் நம்பிக்கையைப் பெறும் வண்ணம் செய்யலாமே...?

எங்களுக்கு காங்கிரஸ் கட்சியுடன் மிகச் சுமுகமான உறவு இருக்கிறது. அகில இந்திய காங்கிரஸின் தலைவர் சோனியா காந்தியுடன் நல்லுறவு வைத்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர்களுடனும் நல்ல நட்பு இருக்கிறது. எங்கள் உழைப்பு, சக்தி ஆகியவற்றை காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையை வளர்ப்பதில் செலவிடுகிறோம். இந்தச் சுதந்திரம் எங்களுக்குப் பிடித்திருக்கிறது. எங்களுடைய இந்த நிலை பற்றி அகில இந்திய காங்கிரஸ் தலைமையிடம் தெளிவாக, திருப்தியடையும்படி எடுத்து வைத்திருக்கிறோம். எனவே இப்போதிருக்கும் நிலைமையிலிருந்து மாறி காங்கிரஸுடன் ஐக்கிய



மீண்டும் மலரச் செய்ய நாங்களும், காங்கிரஸும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படுவோம். நான் இப்போது செய்யும் பணி காங்கிரஸின் பணிதான். அதை காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்தே செய்ய முடியும் என்ற என் நிலைப்பாடு சரி என்றே எனக்குத் தோன்றுகிறது.

தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ஆளுக்கொரு கோஷ்டி என்று வைத்துக்

திருப்பம் நிச்சயம்!"

மானால், அதன் உட்கட்சிப் பிரச்னைகளில் சிக்கிக் கொண்டு விடுவோமா என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது.

இந்தச் சூழலில், 2004ம் ஆண்டு வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் சோனியாகாந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்கவும், 2006ம் ஆண்டு தமிழகத்தில் மாபெரும் திருப்பமாக திராவிடக் கட்சிகள் அல்லாத மாற்று அரசைக் கொண்டு வரவும் தீவிரமாக உழைக்கிறோம். குறிப்பாக 2006ல் காமராஜ் ஆட்சியை தமிழகத்தில்

கொண்டிருந்தால் 2006ம் ஆண்டு தேர்தலில் அந்தக் கட்சியின் தலைமையில் அமையும் மூன்றாவது அணி மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா?

2006 சட்டமன்றத் தேர்தலில் அமையப் போகும் மூன்றாவது அணியின் தலைமைப் பொறுப்பைப் பற்றி பேச இன்னமும் நேரம் கனிந்து வரவில்லை. ஆனால் அந்த அணியில் காங்கிரஸின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும்.

– ப.சிதம்பரம்

சந்திப்பு: ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு

வழங்கும்

நூல்கள்



என்றும் உள்ள தென்றல்
போல் **'கல்கி'** அவர் தம்
எழுத்துக்களால் வாழ்கிறார்.
என்றும் வாழ்வார். காலத்தை
வென்று நிற்கும் கல்கியின்
படைப்புக்கள் ஒவ்வொருவர்
இல்லத்தையும்
அலங்கரிக்கட்டும்.

- வானதி திருநாவுக்கரசு

வாழ்க சுதந்திரம் வாழ்க நிரந்தரம்	(தொகுப்பாசிரியர் : சுப்ர பாலன்)	110.00
எழுத்துலகில் அமரதாரா	(தொகுப்பாசிரியர் : சுப்ர பாலன்)	75.00
கல்கியின் கடிதங்கள்	(தொகுப்பாசிரியர் : சுப்ர பாலன்)	60.00
கல்கி களஞ்சியம்	தி.ஸ்ரீ. ரங்கராஜன்	150.00
கல்கி வளர்த்த சிரிப்பலைகள்	(தொகுப்பாசிரியர் : வாதூலன்)	28.00
கதைச் சக்கரவர்த்தி கல்கி	வி.ர. வசந்தன்	35.00
கல்கியின் வரலாற்று நாவல்கள்	டாக்டர் பூவண்ணன்	அச்சில்

★ தங்களது தேவைக்கு அன்புகூர்ந்து ஆர்டர் அனுப்பவும்.

★ முன்பணம் அனுப்புவோர் புத்தக விலையோடு தபால் செலவு சேர்த்து **"VANATHI PATHIPPAKAM"** என்ற பெயருக்கு Draft அல்லது MO அனுப்பவும்.

★ இலவச விலைப்பட்டியலுக்கு கடிதம் எழுதவும்.

★ *V.P.P.* மூலமும் பெறலாம். *V.P.P.* தபால் செலவு தனி.

விவரங்களுக்கு :

வானதி பதிப்பகம்,

23 (பழைய எண்.13), தீனதயாளுதெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017. தொலைபேசி எண் : 24342810




கோவை ருசி! கொள்ளும் வரை புசி!

* கே. தாமோதரசாமி நாயுடு

முப்பத்து ஏழு ஆண்டுகளுக்கு முன் கோவையில் நடந்த 'சுவை'யான சம்பவம் இது.

சுதந்திரப் போரில் பங்கெடுத்துக் கொண்ட ஆலைத் தொழிலாளி அவர். தேச விடுதலைக்குப் பிறகு சொந்தத் தொழில் செய்ய விரும்பினார். இதற்காக இருநூறு ரூபாயைக் கஷ்டப்பட்டுத் திரட்டினார். அதனோடு தமது கடின உழைப்பு, தன்னம்பிக்கை இரண்டையும் சேர்த்து முதலீடு செய்து ஒரு கேண்டீனைத் துவக்கினார். கேண்டீனுக்கு அவர் தேர்ந்தெடுத்த இடம் சென்ட்ரல் திரையரங்கம். அதற்கு முன் அந்தக் கேண்டீனில் யாரும் சுவைத்திராத உணவு வகையை ரசிகர்களுக்கு அறிமுகம் செய்தார்.








திரையரங்கில் படத்தை ரசிக்க வருபவர்களைக் காட்டிலும், அந்தக் கேண்டீன் ஈரை வடையையும் ஃபில்டர் காஃபியையும் ருசிக்க வருபவர்கள் அதிகரித்தனர். ஒரு கட்டத்தில் ''உங்கள் கேண்டீன் சிற்றுண்டிக்காக தலைவலிப் படங்களையெல்லாம் பார்த்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது! நீங்கள் ஏன் திரையரங்குக்கு வெளியே உணவகம் தொடங்கக் கூடாது?'' என்று சுவைஞர்களே கேட்க, இன்று கோவை முழுவதும் பதின்மூன்று கிளைகளோடு கமகமக்கும் அன்னபூர்ணா உணவகங்களுக்கான முதல் விதை விழுந்தது. தமது சகோதரர்கள் கே. இராமசாமி, கே. லட்சுமணன் துணையோடு கோவை ருசியை விதைத்த ருசியின் முதல் ரசிகர் கே. தாமோதரசாமி நாயுடு.

சட்னியோ, புதுவித ஐட்டமோ எப்படி எல்லாக் கிளைகளிலுமே சுவையும் தரமும் அப்படியே நிரந்தரமாகக் கிடைக்கிறது என்று சப்புக் கொட்டி வியக்காதவர்களே இல்லை. அதற்குக் காரணம் கோவை மேட்டுப்பாளையம் சாலையில் ஒரு ஏக்கர் பரப்பளவில் மிகப் பிரம்மாண்டமாக விரிந்திருக்கும் சென்ட்ரல் கிச்சன்... தாமோதரசாமியின் நேரடிப் பார்வையில் இங்கே எல்லா உணவுகளும் தயாராகின்றன. முதல் டேஸ்டர் தாமோதரசாமியேதான்!

"எனக்குத் திருப்தி இல்லை என்றால் அந்த உணவு வாடிக்கையாளரைச் சென்றடைய ஒருபோதும் நான் அனுமதிப்பதில்லை" என்கிறார் தாமோதரசாமி நாயுடு.

அன்னபூர்ணாவின் வெற்றி ரகசியம் தெரிஞ்சு போச்சு!



அறிக்கை குண்டுகளால் அமைதி பிறக்காது!

இஸ்லாமிய தீவிரவாதிகளின் திட்டமிட்ட சதி மீண்டும் நிகழ்ந்திருப்பது மிகுந்த வருத்தம் அளித்தாலும் வியப்பளிக்க வில்லை. வியாபாரம் கொழிக்கின்ற மும்பை நகரை அவர்கள் தேர்வு செய்து தாக்கியதும் ஆச்சர்யமில்லை. இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே அங்கு இஸ்லாமிய பயங்கரவாதம் சிறிதும் பெரிதுமாகத் தடம் பதித்து வந்திருக்கிறது.

ஜமியத் அமைப்பின் தலைவர்கள் நீங்கலாக வேறு எந்த இஸ்லாமிய மதத் தலைவரும் இந்த குண்டுவெடிப்புகளைக் கண்ட னம் செய்யவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியது.

“ ‘ஜிஹாத்’ என்ற பெயரில், ஒரு பாவமும் அறியா ஏழை - எளிய மக்கள் கொல்லப்படுவதை அமைதி விரும்பும் இஸ்லாமி யர்கள் ஒரு போதும் ஆதரிக்க மாட்டார்கள்; அத்தகைய கொடு ரங்களில் ஈடுபடுவோர் மெய்யான இஸ்லாமியரே அல்ல...” என்ற பிரகடனம் இஸ்லாமிய அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து வருவது மிக அவசியம். இதற்குக் கட்டுப்பட்டு பயங்கரவாதிகள் மனம் மாறிவிடமாட்டார்கள்; ஆனால், ஹிந்து - முஸ்லிம் நல்லி ணக்கம் மேலும் சீர்குலையாமலிருக்க இது உதவும்.

‘மஹாராஷ்டிர காவல் துறை தூங்கி விட்டது; மாநில அரசு




கல்கி



2003 செப்டெம்பர் 7
சுபானு ஆவணி 21
மலர் : 62
இதழ் : 6

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



டிஸ்மிஸ் செய்யப் படவேண்டும்; அங்கு ஜனாதிபதி ஆட்சி கொண்டுவர வேண்டும்' என்று பா.ஜ.கவினர் அலறுவது அர்த்தமற்ற வெற்றுப் பேச்சு.

தற்கொலைக்கும் அஞ்சாத பயங்கரவாதத்தைக் காவல் துறையோ உளவுத் துறையோ ராணுவமோ எதிர்கொண்டு ஜெயிப்பது நடவாத காரியம். உலகிலேயே பலம் பொருந்திய நாடான அமெரிக்கா கூட பயங்கரவாதத்தின் முன் தோற்றுப் போயிருக்கிறது. ஆஃப்கானிஸ்தானைக் கைப்பற்றினாலும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை அமெரிக்காவால் அடக்க முடியவில்லை. ஈராக்கை ஜெயித்தாலும் அங்கு கொரில்லா வன்முறைகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை.


இஸ்லாமிய பயங்கரவாதம் ஒரு சர்வதேச, ரகசிய விஷ வலைப் பின்னல் என்பது மிகத் தெளிவு.

இந்தியாவில் இயங்கும் அந்த வலைப் பின்னலின் கிளைக்கு ஆதரவும் தூண்டுதலும் பாகிஸ்தானிலிருந்துதான் வருகின்றன என்பதும் ஊரறிந்த ரகசியம். இதை பாகிஸ்தானே கூட ஒப்புக் கொண்டதால்தான் அந்த பயங்கரவாத அமைப்புகளுக்குத் தடை விதிப்பதாக பாவலா காட்டியது!

அணு ஆயுதப் பெருக்கத்துக்குப் பிறகு, பாகிஸ்தான் மீது யுத்த தாக்குதல் நடத்தி ஒடுக்குவதென்பது இரு தரப்புக்கும் அபாயகரமானதாகிவிட்டது. பின் விளைவுகள் பல தலைமுறைகளை பாதிக்கும். பொருளாதாரமும் சீர்குலையும்.

ஆகவே இந்தோ-பாகிஸ்தான் நல்லுறவுக்கு முயற்சி செய்வதுதான் உத்தமம்.

நிலைமை இவ்வாறிருக்க, மும்பை குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நம் தலைவர்கள் பேசியிருப்பது வேதனையைத் தான் ஏற்படுத்துகிறது. 'இது பயங்கரவாதி களின் சதி' என்று பிரதமர் புதிதாக எதையோ கண்டுபிடித்தது போல் கூறியிருக்கிறார்.



துணைப் பிரதமர் - பாதுகாப்பு அமைச்சர், "நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது; குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விடுவோம்" என்கிறார். பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு பயங்கரவாத தடைச் சட்டத்தை மேலும் தீவிரமாக்க வேண்டும் என்கிறார். மற்றொரு பா.ஜ.க. தலைவரான மோடியோ "நாட்டை பலவீனப்படுத்த நடந்த இச்சதி அதிர்ச்சி தருகிறது..." என்கிறார்.

ஆளுங்கட்சித் தலைவர்களின் இந்த அறிக்கைகளால் புண்களும் ஆறாது; பயங்கரவாதமும் தீராது. சட்டத்தை எத்தனை கடுமைப்படுத்தினாலும் ரகசிய சதிகளைத் தடுக்க முடியாது. "குற்றவாளிகளைக் கண்டுபிடித்து பொதுவிடத்தில் தூக்கிலிட வேண்டும்" என்று வி.எச்.பி. தலைவர்கள் பேசுவதோ, வன்முறையை மேலும் தூண்டுவதற்குத்தான் உதவும். முன்பு நடந்த மதக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இப்போதைய சதியில் ஈடுபட்டதாகத் தெரிய வந்துள்ளது. ஆகவே விரோத பாவம் தவிர்க்கப்படவேண்டியது மிக அவசியம்.

கௌரவம் பாராமல், இந்து மத அடிப்படைவாதத்தைக் கைவிட வேண்டும்; அனைத்து மதத்தினரையும் சமமாகக் கருத வேண்டும். அத்துடன் பாகிஸ்தானைப் பேச்சு வார்த்தைக்கு அழைப்பதும், ஒரு மூன்றாவது நாட்டை சாட்சியாக்கி அமைதி ஒப்பந்தம் செய்து கொள்வதும் மட்டுமே பிரச்னைக்குத் தீர்வுகள். சில அம்சங்களில் ஓரளவு விட்டுக் கொடுப்பதும் கூட நல்லதுதான். இது தேச துரோகம் ஆகிவிடாது.

'பயங்கரவாதம் ஒய்ந்தால்தான் பாகிஸ்தானுடன் பேசுவோம்' என்று காத்திருப்பது, அலை ஒய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்யக் காத்திருப்பதைப் போன்றது. இந்தக் கொள்கையால் பயங்கரவாதமும் ஒயாது. நாட்டில் அமைதியும் நிலவாது. ○

மணக்குதய்யா பவளமல்லி!



✉ என்ன வேணுமானாலும் சமாதானம் சொல்லுங்கள். சுமி இல்லாத 'கல்கி' - வெளிநடப்பே இல்லாத பார்லிமெண்ட், சட்டசபை கூட்டங்கள் போல 'டல்'லடித்தது உண்மைதான்.
ஈரோடு - 1, சாந்தி கல்யாண்குமார்.

✉ பூச்சி மருந்து - கூல்டிரிங்ஸ் பற்றிய முதல் பக்க டைம்லி ஜோக் மிக அருமை! சிரிக்க வைத்த பொன் முருகனுக்குப் பாராட்டு!
புளியரை, கணேசன்.

✉ தமிழக அரசின் விபரீத போக்கு உழைப்பாளர்களின் பாதுகாப்பு வளையத்திற்கே வேட்டு வைக்கிறது! ஊழியர்களை நசுக்கும் போக்கினால் ஊழியர்களின் விசுவாசத்தையும் ஒத்துழைப்பையும் திரும்பப் பெறவே முடியாது என்று நச்சென்று எழுதி, உழைக்கும் வர்க்கத்தின் ஒரு கோடி நன்றியைப் பெற்று விட்டீர்கள்.
சென்னை - 92, ச. உமா.

✉ அச்சு அசலாக மலர்ந்து, மணந்து, கை நிறைய அள்ளிக் கொள்ளும் ஆவலை ஏற்படுத்திவிட்டது பத்ம வாசனின் நடுப்பக்க பவள மல்லி ஓவியம்.
ஈரோடு - 1, ரேவதிப்பரியன்.

✉ அப்துல் கலாம் - சிவ சங்கரி பேட்டியில் ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானியையோ, ஜனாதிபதியையோ பார்க்க முடியவில்லை. நம்மில் ஒருவர், நமது அண்டை வீட்டுக்காரர் ஒருவரைச் சந்திப்பது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது.
அறந்தாங்கி, பிரகதீஸ்வரி இராஜப்பன்.

✉ 'All truly great things are simple' இது ஆல்பர்ட் ஐன்ஸ்டின் சொன்னது. நம் ஜனாதிபதியின் பேட்டியைப் படித்ததும் அவர் எத்தனை எளிமையானவர் என்பதை நன்றாகவே உணர முடிந்தது. அனைத்து வாசகர்களின் மனத்திலிருந்த ஐயங்களையே சிவசங்கரி கேள்விகளாகக் கேட்டு அசத்திவிட்டார்.
திருச்சி - 9, எஸ். வாசுகி.

✉ நாட்டு நடப்பைப் பாட்டாக்கி, பறை சாற்றியது 'கடலோரக் கவிதை!'
மதுரை - 1, என். பாலகிருஷ்ணன்.

✉ நடிப்பில் வேகம் காட்டினாலும், படங்களில் வசூல் வேகம் இல்லாததால், காரை வேகமாக ஓட்ட முடிவெடுத்திருக்கும் அஜீத்தின் முடிவு வரவேற்கப்பட வேண்டியதுதான்.
வீரன்வயல், வீ. உதயக்குமாரன்.

✉ 'பித்ரு சிராத்தம் ஏன் செய்யப்பட வேண்டும்?' என்பதற்குச் சரியான விளக்கம் 'குறையொன்றுமில்லை' மூலம்தான் கிடைத்தது. மிக்க நன்றி.
ஆடுதுறை, கோ. ராமதாஸன்.

✉ 'கஜானா நிரம்ப கலக்கல் யோசனைகள்' படித்தேன், சுவைத்தேன், சிரித்தேன்.
ஈரோடு - 7, ஜி. ரகுநாதன்.

செல்வ சுபிச்ச சம்பத்தை தரும்
ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜைகள் 36

(தபால் வழி போதனா முறை)

அன்றைய சித்தர்கள் அனைத்தும் அறிந்து அன்னை ஸ்ரீ தேவியின் பூரண கடாக்ஷத்தை முழுமையாக அடைவதற்குரிய 36 அங்க பூஜைகளாக வகுத்து அன்னையின் அதிசக்தி பெற்ற நாமங்களை ஆக்கம் செய்து, மனித வாழ்வின் தேவைகளை வகைப்படுத்தி ஒவ்வொரு தேவையும் முழுமையாக பூர்த்தியடைய 36 பூஜைகளை வரிசைப்படுத்தி சிறப்பான முறையில் செய்து வைத்து இவற்றை உரியபடி மனம் ஒன்றுபட தமிழாக்க மந்திரங்களை கண்களை மூடிய நிலையில் மனதில் அன்னையின் உருவத்தை அப்படியே நிறுத்தி செய்திட எண்ணிய காரியம் எதுவாயினும் இடைதடையின்றி நிறைவேறிடும்.

தொழில்வழி அதிலாப விர்த்தி, குடும்ப ஒற்றுமை, பெருமைடி சேர்க்கும் குழந்தைகள், இனிதான இல்லறம், எவராலும் போற்றப்படும் குடும்பம், மாட மாளிகை கூட கோபுரம், என்றும் நோய் நொடி இல்லா வாழ்வு, ஆரோக்கிய நிறைவு, அனைவரும் மதிக்கும் செல்வச் சிறப்பு, உற்றார் உறவினர் போற்றும் மகத்துவ வாழ்க்கை, எவராலும் பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை என்று செய்து துன்புறுத்த முடியாத தெய்வத்திருவருள், கடன் வழி தொல்லையற்ற செல்வ பெருக்கு, கோடீஸ்வர வாழ்வு என்று அனைத்து வழி நலங்களையும் அள்ளித்தரும் பூஜைகள்.

இதனை செய்து நிச்சய நலன் அடைய விரும்புவோர் காலை, மாலை பூஜை செய்யும் பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். அடுத்து இந்த பூஜை வழி அருள்நிலை வராமல் தடுக்கும் - மதுபானம் செய்தல், புகை பிடித்தல், பொடி, புகையிலை போடுதல் என்ற தீய வழி பழக்கமில்லா நறுங்குண இயல்பு உடையவராக இருக்க வேண்டும். இவ்விரு வழி கட்டுப்பாடு உடையவராயின் நிச்சயமாக இந்த பூஜைகள் வழியாக நினைத்த வாழ்வை அடைந்து நெஞ்சம் மகிழும் தெய்வானுகிரகத்தை அடைந்தே தீரலாம் என்பது தெய்வத்தீர்வு.

எனவேதான் பூஜை செய்யும் பழக்கம் என்பது வாழ்வில் நிச்சய மேன்மை தரத்தக்கதான அமைப்பு என்றும் - அந்த விதி அமைப்பு உடையவர்கள்தான் அன்றைய நாளில் - அவதார புருஷர்களாக அட்டமாசித்திகள் பெற்று அரிதான நலங்களையும் ஆயுள் நிறைவையும் பெற்றனர். ஜாதக அமைப்பின்படி இப்பூஜை செய்வதற்குரிய வியாழ பார்வை பெற்று இருந்தால்தான் இந்த பூஜை வழியாக நிச்சய உயர்வினை அடைகின்ற 'விதி' அமைப்பு உடையவராய் இருப்பார். அவர் கண்களில் தான் இந்த விளம்பரம்படும். அவர்தான் தனது ஜாதக நகல் ஒன்றுடன் இந்த' லக்ஷ்மி குபேர பூஜையை கற்றிட விரும்புகின்றேன்' என்று எழுதி **15-10-2003** தேதி மாலைக்குள் மனு அனுப்பிட வேண்டும்.

இவ்வரிதான பூஜையை செவ்வனே செய்து பெண்களும் மிக உயர்வான நலங்களை அடைந்து இருக்கின்றனர். ஆதலால் அவர்களும் ஜாதக நகலுடன் 'லக்ஷ்மி குபேர பூஜையை கற்றிட விரும்புகின்றேன்' என எழுதி உரிய தேதிக்குள் மனுச்செய்யலாம்.

ஜாதகப்படி இந்த பூஜையில் அமர்ந்தவுடன் நிச்சயமாக அருள் நிலை ஏற்பட்டு அன்னையின் பூரண கடாக்ஷத்திற்கு ஆளாகிடும் நிலை இருக்கின்றதோ அவருக்குத்தான் உரிய விபர படிவம் அனுப்பி வைப்போம். ஜாதகப்படி அந்த அருள்நிலை வரும் அமைப்பு இருந்தால்தான் இந்த பூஜையை செய்யும் ஆவல் ஏற்படும். இந்த விளம்பரமும் கண்ணில்படும். எனவே எமது விபரப்படிவம் உங்களுக்கு கிடைத்த உடனேயே நல்ல அறிகுறிகள் தென்படும். நல்ல காரியங்கள் நடைபெறும். உங்கள் ஜாதகப்படி ஒரு பெரும் செல்வ நிறைவான மன்னவரைப் போன்ற வாழ்வை அடைகின்ற விதி அமைப்பு இருப்பின் இது நிச்சயமாக உங்களை உயர்வை அடைந்திட செய்யும். எமது பூரண நல்லாசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர் தபால் பெட்டி எண்: 55

பிளாட்எண்:204, அண்ணாநகர் மதுரை - 625 020 தமிழ்நாடு

(0452) 2533412 2650576



டிஷ்யூம் டிஷ்யூம் திருப்பூர்!

கோவை வாசிகளில் இருபது சதவிகிதம் பேர் தமிழும், தெலுங்கும் அறிந்த மலையாளிகள். இதனால் கோவையில் உள்ள ஒரு டஜன் தியேட்டர்களில் வருடம் முழுக்க மலையாளப் படம்தான் திரையிடுகிறார்கள். (கவனிக்க! மலையாளப்படமென்றால், மோகன்லால், மம்முட்டி மாதிரி பெரிய நடிகர்கள் நடித்த நல்ல கதைப் படங்கள்.)

ஷகிலா மேனியா கேரளத்தை ஆட்டுவித்தபோது, கோவையையும் விட்டு வைக்கவில்லையாம். ஆனால் ராயல், ஹர்சினி ஆகிய இரு திரையரங்குகள் மட்டும் இன்னமும் 'கெட்டு'ப் போய்விடாமல் தொடர்ந்து தரமான மலையாளப் படங்களை மட்டுமே வெளியிட்டு வருகின்றன. தற்போது 'ராயல்' தியேட்டரில் திலீப் - காவ்யா மாதவன் நடித்த 'சதானந்தன்டே சமயம்' இருபத்து ஐந்து நாட்களைக் கடந்து வெற்றி நடைபோடுகிறது.



• ஜெகந்நாதன்

ஆனால் கோவை ரசனைக்கு நேரெதிராக பொழுது போக்கு, அடிதடி, ஆக்ஷனை அதிகம் விரும்புகிறவர்கள் என்றால் திருப்பூர் ரசிகர்கள்தான்.

"திருப்பூர் ரசிகர்கள்தான் எங்களைக் காப்பாற்றுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். 'ஜெமினி'க்குப் பிறகு 'சாமி' படத்தின் மூலம் திருப்பூரில் ஐம்பது லட்ச ரூபாய் வசூல் ஆனது பெரிய ரெக்கார்டு பிரேக்" என்கிறார் கோவை பாக்ஸ் ஆபீஸ் வீதியான கோபாலபுரத்தைச் சேர்ந்த சினிமா விநியோகஸ்தர் என். ஜெகந்நாதன்.



மூன்று மில்லியன் பேரம்!

ரெ. கார்த்திகேசு

அட்டையை நுழைத்தான். சமிக்ஞை விளக்கு சிவப்பாக இருந்தது. கதவைத் தள்ளினான். திறக்கவில்லை. கதவின் கைப்பிடியை ஆட்டிப் பார்த்தான். ஊஹூம்.

என்ன செய்வதென்று தெரியாமல் அந்த கருநீலக் கம்பளம் விரித்த காரிடோரில் யாராவது வருகிறார்களா என்று பார்த்தான். அந்தக் கடைசியில் ஹோட்டல் சீருடை அணிந்த பையன்.

"உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமா சார்?" தேய்த்து விளக்கிய ஆங்கிலத்தில் கேட்டான்.

"கதவைத் திறக்க முடியவில்லையே!" பிராந்தி மணக்கும் வார்த்தைகளில் பையனுக்கும் விஷயம் பட்டென்று புரிந்திருக்கும். கார்டை மரியாதையுடன் வாங்கி, தலை கீழாகத் திருப்பி அம்புக்குறி காட்டிய பகுதியை நுழைத்தான். பொட்டென்று பச்சை விளக்கு மினுக்கியது. கதவு திறந்தது.

"நல்லிரவு" பையன் போய்விட்டான்.

உள்ளே அறை ஒரு ஃபிரிட்ஜின் உட்புறம் போல குளிரில் உறைந்திருந்தது. போய் அறையின் தட்பவெப்ப மானியைக் குறைத்து வைத்தான்.

போக்கெட்டிலிருந்த பொருள்களை வெளியே எடுத்த பொழுது கைத் தொலை பேசியைப் பார்த்தான். மூன்று தவறிய அழைப்புகள். எப்படி விடுபட்டிருக்கும்?

என்ன எண்கள் என்று பார்த்தான். ஒன்று அவனுடைய மானேஜிங் டைரக்டர். "என்னடா ஆச்சு நம்ம புதிய வியாபார ஒப்பந்தம்?" என்று நூறாவது முறையாகக் கேட்டிருப்பார். இரண்டாவது மூன்றாவது எண்கள் அவன் மனைவி சரோஜா. சரோ அப்படி அனாவசியமாக அழைக்க மாட்டாள். ஏதோ செய்தி இருக்க வேண்டும்.

என்ன மணி என்று கைத் தொலைபேசி எல்சிடி சதுரத்திலேயே பார்த்தான். காலை 2.30 கடவுளே. இந்த நேரத்தில் கூப்பிட்டால், அவள் எழுவது இருக்கட்டும். செல்லப் பெண் சகுந்தலாவின் தூக்கத்தையும் கலைத்ததாக ஆகிவிடும்.

மூன்று வயதுப் பெண். இப்போதுதான் நர்சரி போக ஆரம்பித்திருக்கிறாள். அவனுடைய கண்ணின் மணி. அவனுடைய ஜீவனை ஒளிப்படுத்திக் கொண்டிருப்பவள்.

காலையில் கூப்பிடலாம்.

குளியலறைக்குப் போனான். அதில் தெரிந்த அவன் பிம்பம் கலங்கியிருந்தது. குடி இன்னும் தெளியவில்லை. நாளைக்கு ஹேங் ஓவர் இருக்கும். ஆனால் காலைச் சந்திப்பைத் தவிர்க்க முடியாது. கட்டாயம் போக வேண்டும். அவனுடைய கம்பெனியின் எதிர் காலம் அதில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

நிர்வாக இயக்குநர் சோமநாதன் போன மாதம் அவரது சென்னைப் பயணம் முடிந்து பினாங்கு வந்தவுடன் அவனைக் கூப்பிட்டுத் தெளிவாகச் சொல்லியிருந்தார்.

"குமரன்! இப்ப வந்திருக்கிற இந்த 'சுகந்த காமதேனு' தைலத்துக்கு இந்தியாவில பெரிய டிமாண்ட் இருக்கு.

"இப்ப ஏஜன்சி கேட்டிருக்கிறவங்க ஒரு கே.எல். கம்பனி. மலேசிய விளம்பரத்துக்கு ஒரு மில்லியன் பட்ஜெட் போட்டிருக்காங்களாம். நாம் ஒன்றரை மில்லியன் போடத் தயாரா இருக்கிறோம். ஒரு வருஷத்துக்கான பொருளோட கொள்முதல் விலை ஒரு மில்லியன். ஆகவே இரண்டரை மில்லியன். 300 விழுக்காடு லாபத்தில் நாம் விக்கலாம். ரீடேய்லர் கமிஷன் போனாலும் நமக்கு 3 மில்லியன் நிகர லாபம் இருக்கு. இப்ப நீ மார்க்கெட்டிங் மேனேஜராக இருக்க. இந்த வியாபாரம் கைகூடினா உன்னை டைரக்டர் ஆக்கிடுறேன். எல்லாம் உன் கையில தான்!"

வர்த்தகத்தை நம்பி இறங்கிவிட்டவனுக்கு

இதைவிட வேறென்ன வேண்டும்? இதை முடிப்பதுதான் தனது வாழ்க்கையின் உச்ச இலட்சியம் என அன்றே தீர்மானித்து விட்டான்.

அதற்காகத்தான் கே.எல். வந்து கடந்த மூன்று நாட்களாக இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ராம் என்னும் ராமசாமி ரெட்டி ஜூனியருடன் கழிக்க வேண்டிய தாயிற்று. ஆள் இரவெல்லாம் அன்னியன் காசில் கூத்தடித்தாலும் பகலில் வியாபாரம் பேசும்போது ரொம்பக் கூர்மையாக இருக்கிறான்.

தடித்த ஜன்னல் திரைகளின் சிறிய நீக்க லில் சூரிய வெளிச்சம் கண்ணின் இருளைக் கலைக்க அவன் எழுந்தபோது முதலில் வந்த ஞாபகம் நேற்றிரவு தொலை



பேசியில் அலாரம் வைக்க மறந்து விட்டோம் என்பதுதான். ஒரு திகிலுடன் படுக்கைப் பக்கத்தில் இருந்த ஹோட்டலின் டிஜிட்டல் கடிகாரத்தைப் பார்த்தான். 7.55.

டேம்மிட்! எட்டரை மணிக்கு ரெடியாக வேண்டும். ஷவருக்குக் கீழ் நின்ற ஐந்தே நிமிடங்களில் மனைவியின் நேற்றைய தொலைபேசி அழைப்பு நினைவுக்கு வந்தது.

உடை அணிந்து கொண்டே கைத் தொலைபேசி எடுத்து நம்பரைத் தேடினால்..

பாட்டரி செத்துப் போயிருந்தது. இனி சார்ஜரைத் தேடி எடுத்து... நேரமில்லை. அப்புறம் கூப்பிடலாம்.

கோஃபி ஹௌஸில் வசதியான மேஜையைப் பிடித்து வைத்து உட்கார்ந்தான். சரியாக 8.30க்கு ஜூனியர் ராமசாமி ரெட்டி நுழைந்தான். எமகாதகன். ராத்திரி இரண்டு மணி வரை அப்படிக் குடித்து ஆடிவிட்டு காலையில் தெளிவாக இருக்கிறான்.

"குட் மோர்னிங் குமரன் சார்!"

"மோர்னிங் ராம்! எப்படித் தூக்கம்?"

"பரவாயில்லை!"

டோஸ்டும் பிரட்டிய முட்டையும் ஆர்டர் செய்தான். கோப்பை விரித்து வைத்துக் கொண்டு தீவிரமாக பிசினஸ் பேசினான்.

"சரி குமரன் சார். ப்ரொப்போசல் பார்த்திட்டேன்."

குமரனின் நெஞ்சுக்குள் சில உருண்டைகள் புரண்டன.

"அப்பாவுக்கு நம்பிக்கையூட்ட புதிய அம்சங்கள் வேணும். நான் நினைக்கிறேன். இப்ப நம்ப 'சுகந்த காமதேனு'வ மற்ற பொருள்களோட சேர்த்து விக்காம தனியா இதுக்கென அவுட்லெட் அமைச்சு விக்கிற மாதிரி யோசியுங்க. தனிக்கடை, ஸ்டாஃப், ஒரு டெமோன்ஸ்ட்ரேஷன் ரூம். மூணு மாசத்துக்குள் கேஎல்-லில ஆரம்பிங்க. ஆறு மாசத்துக்குள்ள கிள்ளான், பினேங், ஜோகூர்ல. அப்புறம் வசதிபோல... இதுக்கு நீங்க தயாரா இருந்தீங்கனா அப்பா கிட்ட பேசி இன்னைக்கு மத்தியானம் ஒரு தற்காலிக ஒப்பந்தம் போட்டிடலாம்."

டோஸ்டும் முட்டையும் வந்தன. குமரனைத் திகைக்க விட்டு ஜூனியர் சாப்பிட ஆரம்பித்தான்.

கடைசி நேரத்தில் தன் வியாபாரப் பெருக்கத்திற்காக சில வசதிகளைத் தன்னிடமிருந்து பிழிந்து எடுக்கிறான் என்று தோன்றியது. முன்னமே திட்டமிட்டிருக்கிறான். ஆனால் கடைசி நிமிடத்தில் யோசிப்பதற்கு நேரம் கொடுக்காமல் அழுத்துகிறான். எம்.பி.ஏ.வில் இதைச் சொல்லித் தருகிறார்களா?

யோசித்துக் கொண்டிருந்த வேளையில் சீருடை அணிந்த ஹோட்டல் அலுவலர் அவர்களை நோக்கி வந்தார்.

"மிஸ்டர் குமரன், ரூம் 1604?" என்று கேட்டார். ஒரு செய்திக் காகிதத்தை அவனிடம் கொடுத்தார்.

'தயவுசெய்து சோமாவுக்குப் போன் செய்க. அவசரம்!'

அருகிலிருந்த பூத்துக்குள் சென்று போனை எடுத்தான்.

"குமரன், என்னப்பா ஹேண்ட் போன்ல பேசினா எடுக்க மாட்டேங்கிற? பல முறை கூப்பிட்டிட்டேன்!"

"பேட்டரி செத்துப் போச்சு சோமா! நல்ல நேரத்திலதான் போன் பண்ணியிருக்கீங்க! ப்ரப்போசலை ஏத்துக்கிறேன்னு ஜூனியர் சொல்றாரு, ஆனா சில புது கண்டிஷன் போட்றாங்க சோமா! அதாவது.."

"நிறுத்து நிறுத்து! நான் அதுக்காகக் கூப்பிடல. வேற விஷயம். பதற்றப் படாம கேளு! உன் குழந்தை சகுந்தாலவ நேத்து ராத்திரி ஒரு கார் மோதிடிச்சிப்பா! பயப்படாத! உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்ல! கால் எலும்பு முறிஞ்சிருக்கு. ஒப்பரேட் பண்ணிக் கிட்டு இருக்காங்! ஐலண்ட் ஹோஸ்பிட்டல்! உடனே புறப்பட்டு வா!"

உலகம் அழிந்ததுபோல் அதிர்ந்தான்.

போனை வைத்துவிட்டு எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் திகைத்து நின்றான். கோஃபி ஹௌஸுக்குப் போனான். சுருக்கமாக விஷயத்தைச் சொன்னான்.

ஜூனியர் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு கைகுலுக்கினான். "சார்! ஐ ஆம் சாரி! அதான் எல்லாம் கவனிச்சிக் கிறோம்னு உங்க எம்.டி. சொல்றாரே! நீங்க மத்தியானம் வரைக்கும் இருந்து போக லாமே! அப்பா வரும்போது நீங்க இல் லேன்னா இது நடக்கும்னு நான் உத்திர வாதம் கொடுக்க முடியாது!"

ஒரு நிமிடம் யோசித்தான். எதற்கு உத்தர வாதம் கொடுக்கிறான்? என் குழந்தையின் நலத்துக்கு யார் கொடுப்பார் உத்திரவாதம்?

"மன்னிச்சிடுங்க ராம்! நான் போகணும்!"

குடைராட்டினத்தில் தலை தெறிக்கச் சுற்றியதுபோல் அடுத்த மூன்று மணி நேரச் சம்பவங்கள் நடந்தேறின.

பிரயாணத்தின் போதெல்லாம் குழந்தை சாவுப் படுக்கையில் இருப்பது போன்ற உருவகம்தான் வந்து கொண்டிருந்தது. வியாபாரம் - மூன்று மில்லியன் ஆதாயம் தரும் வியாபாரம் - போயிற்று டைரக்ட ராகும் வாய்ப்பு போயிற்று. குழந்தை போனால் வாழ்வில் மீதியிருக்கும் நிம்மதியும் போய்விடும்.

ஐலண்ட் மருத்துவமனையை அடைந்த போது அவனை எதிர்பார்த்து ஒரு சிறிய கூட்டம் இருந்தது. சரோ, சோமா, சோமாவின் மனைவி, உறவினர்கள் சிலர்.

"சர்ஜரி முடிஞ்சு வார்டுக்குக் கொண்டு வந்திட்டாங்க. இன்னும் மயக்கம் தெளியல! எத்தனை முறை போன் பண்ணினேன் தெரியுமா?" சரோ அழுதாள்.

"தெரியும், தெரியும் என் தப்புதான். அழுவாத, ப்ளீஸ்!"

சகுந்தலா துவண்டு கிடந்தாள். முகத்தில் சற்றே அசைவு. "ம்.. ம்.." என்று முனகினாள். கண்கள் இலேசாகத் திறந்தன. அவனைப் பார்த்து மலர்ந்தாள். "அப்பா! வந்திட்டிங்களா?" என்றாள். உதடுகளில் ஒரு நிம்மதியான புன்னகை. அயர்வோடு கண்ணை மூடிக் கொண்டாள்.

குமரனுக்குச் சிரிப்பு வருவதை விட அழுகையே அதிகம் வந்தது. நெஞ்சத்தில் அடைத்துக் கிடந்தது வெளியேறியதுபோல். நிம்மதிக் கண்ணீர்.

சோமா முதுகில் தட்டிக் கொடுத்தார். "மன்னிச்சிக்குங்க சோமா!" என்றான்.

"எதுக்கு?" என்று கேட்டார்.

"போன காரியத்தைச் சாதிக்க முடியல! மூணு மில்லியன். கைவிட்டுப் போச்சு!"

"விட்டுத் தள்ளு. பொண்ணு முகத்தில் உன்னைப் பார்த்ததும் ஒரு சிரிப்பு வந்தது பார். அது மூணு மில்லியன் பெறும்!"

சிரித்து அவனது தோளை அணைத்துக் கொண்டார்.



''மன்னர், தளபதியை, எப்பவும், 'தளபாதி'ன்னு அழைக்கிறாரே, ஏன்?''

''யுத்த தளவாடங்கள் வாங்கியதுல கிடைத்த கமிஷனில், தன்னுடைய பாதி பங்கு இன்னும் வந்து சேரலேன்னு நினைவூட்டறார்!''

- ரேஸ். கிருஷ்ணரத்னம்

நல்லி : உங்க அப்பா கே. சுப்ரமண்யம் ஒரு பிரபல சினிமா டைரக்டர்னு தெரியும். 'பவளக் கொடி'ன்ற படத்திலே தொடங்கிய அவரது சினிமாத் தொடர்பு பல வெற்றிப் படங்களுக்குத் தொடர்ந்ததும் தெரியும். ஆனா அவருக்கு நாட்டியத்திலே எப்படி இவ்வளவு ஆர்வம் வந்தது? அதுவும் அதற்காகவே ஓர் அமைப்பைத் தொடங்குகிற அளவுக்கு?

பத்மா : ஒரு சின்னத் திருத்தம். 'பவளக் கொடி'க்கு முன்பாகவே அப்பா கல்கத்தாவில் சில மௌனப்





படங்களை இயக்கியிருக்கிறார். கல்கத்தாவிலிருந்து வந்த போதே அங்கிருந்து பல கலைஞர்களைச் சென்னைக்கு அழைத்து வந்தார். இசை, நடனம் போன்ற கலைகளில் சின்ன வயதிலிருந்தே அப்பாவுக்கு நிறைய ஆர்வம் உண்டு. அப்போதே பாகவத மேளத்தை கிஞ்சின் கோதண்டராம ஐயரிடம் கற்றுக் கொண்டார். பாபநாசத்தில் வீட்டுத் திண்ணையில் நிறைய நாடகங்கள் போட்டிருக்கிறார். ஆனால் அவர் கலையைத் தொழிலாகக் கொள்ள என் தாத்தா அனுமதிக்கவில்லை. தம்மைப் போல தமது மகனும் பிரபல வக்கீல் ஆக வேண்டுமென்று ஆசை அவருக்கு.

நல்லி : ஆனால் கலைதானே உங்க அப்பாவின் வாழ்க்கையாக அமைந்தது!

பத்மா : அது அப்புறம். ஆனால் வக்கீலாகத்தான் முதலில் தன் பணியைத் தொடங்கினாரு. ராஜா சாண்டோவின் அறிமுகத்தைத் தொடர்ந்து, சினிமாவில் வெற்றிகரமான இயக்குனரானார். அதற்குப் பிறகுதான் நிருத்யோதயா தொடங்கியது. அது துவங்கப்பட்டதற்குச் சுவையான பின்னணி ஒன்று உண்டு. 1942ல் இரண்டாவது உலகப் போரின் போது சென்னை நகரின் மீது குண்டுவீச்சுகள் நடைபெற, அதைத் தொடர்ந்து நகரமே காலியானது. அப்பா மெட்ராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தார். சுமார் 90 இசைக் கலைஞர்கள் அதில் மாதச் சம்பளத்துக்குப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.



பவளம் வைரம் பட்டு பாரதம்!

நல்லி சில்க்ஸ் தொடங்கி எழுபத்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. செல்வி பத்மா சுப்ரமண்யத்தின் 'நிருத்யோதயா' நடன அமைப்பு தொடங்கி அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. இதற்கான வாழ்த்துகளை நல்லி குப்புசாமியும், பத்மா சுப்ரமணியமும் பரிமாறிக் கொள்ள, 'கல்கி' இதழுக்கான அவர்களது கலந்துரையாடல் இனிதே துவங்கியது.

குழுவைக் கலைத்து விட்டு கணிசமான தொகையை ஒவ்வொருவருக்கும் கொடுத்து அவரவர் ஊருக்குத் திரும்பச் சொன்ன போது அவர்கள் அத்தனை பேருமே ஒரே குரலில் மறுத்து விட்டார்கள். 'செத்தாலும் ஒன்றாக உங்களுடன்தான் சாவோம்' என்றார்கள். முதலில் திகைத்துப் போன அப்பா பிறகு அவர்களை மூன்று பஸ்களில் ஏற்றி பாபனாசத்துக்கு அனுப்பி வைத்தார். (தாத்தா வழி ஊர்) சில மாதங்கள் கழிந்தன. ஒன்றும் செய்யாமலிருந்தால் அவர்களது திறமை துருப்பிடித்து விடும் என்று தீர்மானித்து அந்தப் பகுதியிலுள்ள மக்களை அவர்கள் தங்கள் கலையின் மூலம் மகிழ்விக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். பாட்டு மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முதல் நிகழ்ச்சி அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடந்தது. அதில் (பின்னாளில் எம்.ஜி.ஆரின் மனைவியான) வி.என். ஜானகி, எஸ்.டி. சுப்புலட்சுமி ஆகியோரும் பங்கு பெற்றனர். அப்போதே அப்பாவின் மனத்தில் நிருத்யோதயாவுக்கான விதை விழுந்து விட்டது. யுத்த நிலை சரியாகி மீண்டும் சென்னை வந்தவுடன் நிருத்யோதயாவைத் தொடங்கினார். ஆமாம் நல்லி என்பது எதைக் குறிக்கிறது?

நல்லி : நானூறு வருடங்களுக்கு முன்பு விஜயநகரத்தில் வாழ்ந்த குடும்பங்களுக்கு சில பரம்பரைப் பெயர்கள் உண்டு. நாதெள்ளா, உம்மிடி என்பது போல். நல்லியும் அவற்றில் ஒன்று. அவர்கள் தென்னகத்தின் பல இடங்களில் பிரிந்து செட்டில் ஆகிவிட்டனர். அப்படி ஒரு பின்னணி கொண்டது எங்கள் குடும்பம் என்றுதான் நம்புகிறேன். இது தொடர்பான இன்னொரு சுவாரஸ்யமும் உண்டு. 1970ல் நானும் என் சித்தப்பாவும் கலவைக்குச் சென்று காஞ்சிப் பெரியவாளைத் தரிசித்தோம். அப்போது அவர் "அஞ்சு மைல்

தள்ளி ஒரு கிராமம் இருக்கு. அதன் பேர் நல்லி தெரியுமா? அங்க போய்ப் பாரேன்" என்றார். போய்ப் பார்த்தோம். ஒரு கோவில், அக்ரஹாரம் என்று சிறியதாக இருந்தது அந்தக் கிராமம். என்றாலும் நெகிழ்ச்சியாக இருந்தது.

பத்மா : காஞ்சிப் பெரியவாள் சொன்னால் அதற்கு அர்த்தம் இருக்கும். ஒருமுறை என்னைப் பார்த்து, "நீ இந்தோனேஷியா போனியோ?" என்றார். பலகாலம் கழித்து தான் போக முடிந்தது. ஆனால் அந்த் நாட்டிற்கும் நாட்டிய சாஸ்திரத்துக்கும் உள்ள தொடர்புகளைக் கண்டுபிடித்த போது சிலிர்ப்பாக இருந்தது. நீங்க கூட அந்த நல்லின்ற கிராமத்தில் உங்க பேர் விளங்கற மாதிரி ஏதாவது செய்யணும். ஒரு வேதபாட சாலையாவது கட்டணும்.

நல்லி : பகவானின் அருள் இருந்தால் நடக்கும்.

பத்மா : உங்க ஜவுளி வியாபாரம் எப்படி சிறு புள்ளியில் ஆரம்பிச்சுப் பிரமாதமா வளர்ந்ததுன்றது பத்திச் சொல்லுங்களேன்.

நல்லி : 1916ல் காஞ்சிபுரத்தில் என் தாத்தா ஒரே தறியோடு தொடங்கின வியாபாரம் இது. அப்போது காஞ்சிபுரத் துக்கு வர்றவங்க, சற்றே உள்ளடங்கி இருந்த தெரு ஒன்றிற்குள் நுழைவாங்க. அங்குதான் பட்டுத் தறிக் கடைகள் உண்டு. புடைவைக்கு ஆர்டர் கொடுத்த பிறகு வரத ராஜப் பெருமாளைத் தரிசித்து விட்டுப் போவாங்க. 'மெயின் சாலையிலேயே தனது கடையை அமைச்சுக்கிட்டா வியாபாரம் பெருகுமே' என்று தாத்தா யோசித்துச் செயல்பட, வெற்றி தொடங்கியது.

பத்மா : சென்னைக்கு வந்தது எப்படி?

நல்லி : காஞ்சிபுரத்தில் வந்து ஆர்டர் கொடுத்துடுவாங்க. ஆனால் நாங்களாக வந்துதான் சென்னையில் டெலிவரி கொடுக்க வேண்டும். பெரும்பாலும் மைலாப்பூரில்தான் டெலிவரி. டாக்டர்கள், ஜட்ஜ்கள், வழக்கறிஞர்கள் என்று பல கனவான்களும் அங்கேதான் குடியிருந் தாங்க. பட்டுப் புடைவைக்கு ஆர்டர் கொடுத்தால் டெலிவரி ஒரு வாரமாகும். காலை ஆறரைக்குக் காஞ்சிபுரத்திலிருந்து கிளம்பும் ரயிலில் (இப்போதும் ஓடும் அதை ஆபீஸ் ட்ரெய்ன் என்றே சொல்வார்கள்) வந்து டெலிவரி கொடுத்துவிட்டு வருவார். புடைவைகளின் தரம் சிறப்பானதாக இருக்க, வாரத்துக்கு ஏழு புடைவைகள் வரை டெலிவரி கொடுக்க வேண்டி யிருந்தது. எனவே சென்னையில் டிப்போ ஒன்றைத் துவக்கத் தீர்மானிச்சாரு. தி. நகர் கடையை 1956ல் நிறுவினோம்.

பத்மா : அட, அதே வருடம்தான் எனக்கு அரங்கேற்றமாச்சு.

நல்லி : அப்போது எல்லா ஜவுளி கடைகளும் ஜார்ஜ் டவுனில்தான் இருக்கும். அப்புறமா (சின்னத்தறிப்பேட்டை என்ற பெயர் மாறிய) சிந்தாதிரிப்பேட்டைக்கு மாறிச்சு. அதற்குப் பிறகு ஜவுளி மார்க் கெட்னாலே திநகர்னு ஆயிடுச்சு.

பத்மா : உங்கள் கடை மிகவும் பாப்புல ரானது எதனால்? எதற்குக் கேட்கிறே னென்றால் அந்தக் காலத்தில் மைலாப் பூரில்தான் சம்பூர்ணசாஸ்திரி என்ற பிரபல பட்டு ஜவுளிக்கடை இருந்ததாம்.

நல்லி : ஆமாம், மைலாப்பூரில் அந்தக் கடையும், சிவராமன் கடையும் ரொம்பப் பிரபலம்.

பத்மா : அம்மாவின் கல்யாணத்துக்கான கூறைப் புடைவையைக் கூட சம்பூர்ண சாஸ்திரியில்தான் எடுத்தார்கள். அதன் தலைப்பில் விதவிதமான விலங்குகள் இருக்கும் அழகான ஜூ மாதிரி.

நல்லி : அந்தப் புடைவைக்கு 'வனசிங் காரம்'னு பேர்.

பத்மா : அதன் ஜரிகை முழுக்க நிஜமான தங்க இழை!

நல்லி : எங்கள் கடை பிரபலமானதின் பின்னணியைக் கேட்டீங்க. தரமான பட்டு என்பதோடு வேறொரு சுவையான காரண மும் உண்டு. இரண்டாம் உலகப் போரின்

"அந்த தடியன் என்னை சீரணி அரங்கம்னு நினைக்கிறான் போல..."

"ஏன், போற போக்குலே இடிச்சுட்டுப் போறானா?"

— தஞ்சை தாமு



போது சென்னையில் உள்ள பல கடைகள் மூடப்பட்டு விட்டன. அப்போது ஒரு மாத்வ வாடிக்கையாளர், என் அப்பா நாராயணசாமியிடம், "போக வேண்டாம். இங்கேயே இருங்கள்" என்று கூறி சுவாமி ராகவேந்திரர் படத்தையும் கொடுத்தார். அதைத் தொடர்ந்த மூன்று வாரங்களில் சென்னையில் திருவொற்றியூரிலிருந்து தாம்பரம் வரை அத்தனை ஜவுளிக் கடைகளும் மூடப்பட்டிருக்க, ஒரு நாலு முழ வேஷ்டி தேவையென்றால் கூட எங்கள் கடையில்தான் வாங்க வேண்டும் என்ற நிலை. நல்லியின் பெயர் அந்தக் கால கட்டத்தில் வெகுவேகமாகப் பரவியது... எவ்வளவு மாணவர்களுக்குக் கத்துத் தர்றீங்க உங்கள் பள்ளியில்?

பத்மா : வருஷத்துக்கு அதிகபட்சம் பத்து புது மாணவர்கள்தான்னு வச்சிருக்கேன். எந்தக் காலகட்டத்திலும் மொத்தம் அறுபது பேருக்கு மேல் இருக்காது. அப்போதான் தனிக் கவனம் செலுத்த முடியும். நான் நடத்துவது டான்ஸ் ஃபேக்டரி இல்லை. இங்கே நான் உருவாக்கிய கோர்ஸ் உண்டு, சிலபஸ் உண்டு. நடனத்தில் பி.எச்.டி. வரை படிக்கலாம். இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்லிடணும். நிருத்யோதயா நாட்டியம் சொல்லிக் கொடுக்கும் அமைப்பு. அதே சமயம் 'நடன கலா சேவா'ன்ற டான்ஸ் கம்பெனியையும் அப்பா துவக்கியிருந்தார். நன்றாக ஆடுபவர்களுக்கு மேடை வாய்ப்பு அளிக்கும் அமைப்பு அது. லலிதா, பத்மினி, வி.என். ஜானகி எல்லாரும் அதிலே வாய்ப்பு கிடைச்சவங்கதான். என்னுடைய முதல் குருவான கௌசல்யா கூட இந்த அமைப்பின் முதல் செட்டிலே இருந்தவர்... உங்கள் புடைவை டிசைன்களுக்குப் பெயர் வைக்கும் போது கூட கலைக்குத் தொடர்புள்ள பெயரா தேர்ந்தெடுப்பது எதனால்...?

நல்லி : கல்கியின் தியாக பூமியை உங்கள் அப்பா இயக்க, அது மிகப் பெரிய வெற்றிப் படமாச்சு. 'தியாக பூமி உமாராணி' என்று ஒரு டிசைனுக்குப் பெயர் வைக்க, அது மிகவும் பிரபலமாச்சு. பிறகு ஒரு விழாவின் போது எம்.எஸ். அம்மா ஒரு புதுமாதிரி நீலவண்ணத்தில் அமைந்த பட்டுப் புடைவையைக் கட்டியிருந்தார். அதைப் பார்த்த சிலர் அதே போன்ற புடைவை தங்களுக்கு வேண்டும் என்று



"உனக்கு வயசு ஏற ஏற உன் வீட்டுக்காரருக்கு உன்னை ரொம்பப் பிடிக்குதா, அது எப்படி...?"

"அவர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஆச்சே!"

– அஜித்லால்

கேட்க, நெசவாளிகளிடம் இதுகுறித்து விளக்கினோம். அப்போதிலிருந்து இன்னமும் அந்த நிறம் 'எம்.எஸ். ப்ளூ' என்றே அழைக்கப்படுகிறது. உங்க பேரிலே கூட புடைவை இருக்கு. பரத நாட்டியத்தின் 32 கரணங்களை பார்டரில் அமைச்சிருந்தேன். டிசைன் போட்ட பிறகு உங்களிடமும் அதைக் காண்பித்து உறுதி செய்துக்கிட்டேன்.

பத்மா : நினைவிருக்கு.... பரத நிருத்யத்தில் அபிநயம் காண்பிக்கும் கைகள் தானே. அதில் ஒவ்வொரு புட்டாவுக்கும் பதிலாக ஒரு சலங்கை இருந்தது. என் உறவினர் சமீபத்தில் உங்கள் கடைக்குப் போன போது, "பத்மா சுப்ரமண்யம் டிசைன் புடைவை வேணுமா?" என்று கேட்டுக் காண்பிச்சாங்களாம்.

நல்லி : ஒரு விஷயம் தெரியுமா? கர்நாடகத்தில் உள்ள சிட்லகட்டா என்ற கிராமத்தில் உருவாகும் பட்டுதான் மிகவும் பளபளப்பாக இருக்கு. காரணம் அந்தக் கிராமத்தின் தண்ணீர். போட்டியாளரின் கைக்குப் போய்விடக்கூடாது என்று அங்கே கிணறுகளைப் பூட்டி வைப்பாங்க!

பத்மா: கங்கை தண்ணீரில் செய்யப்படும் பொம்மைகள் கூட அற்புதமாக அமையும்னு சொல்வாங்க. பாருங்களேன், சூரத் ஜரிகை, சிட்லகட்டா பட்டு, காஞ்சிபுரத்தில் நெசவு என்று ஒரு தேசிய ஒருமைப்பாடே பட்டுப் புடைவையில் இருக்கு!

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

படங்கள் : **யோகா**

ஜீவநதி

காட்சி : 61

பாத்திரங்கள்:
ரேணுகா, கண்ணன், செல்வம்.

பகல் / தெரு / வீடு

கண்ணன், ரேணுகாவின் முகவரியைத் தேடித் திரிகிறான். ஒரு பேட்டையிலிருந்து வேறு ஒரு பேட்டைக்குச் செல்கிறான். ஆற்றோரங்களில், குடிசைப் பகுதிகள் பலவற்றிலும் தேடுகிறான். சுமாரான, குடிசைகளும், செங்கல் வீடுகளும் உள்ள பகுதி ஒன்றில், முட்டுச் சந்தின் கடைசி வீட்டின் மாடியில் அவளைக் கண்டு பிடிக்கிறான். உடம்பு சுகம் இன்றி இருப்பதாகத் தோற்றம் தருகிறாள் அவள். மிகவும் குறுகிய மாடிப்படியில் ஏறி மாடிக்கு வருகிறான் அவன். கதவைத் தட்டுகிறான். மூன்று முறை தட்டிய பிறகு, இலேசாகத் திறக்கப்பட்டு, பார்க்கப்பட்டு அதன் பிறகு கதவைத் திறக்கிறாள் ரேணுகா.

ரேணுகா: வா. வா. உள்ள வா கண்ணா. உக்காரு.

அங்கிருந்த ஒற்றை பிளாஸ்டிக் நாற்காலியில் அமர்கிறான், கண்ணன். அவனுக்கு முன், சுவரில் சாய்ந்து கொண்டு அமர்கிறாள் ரேணுகா. ஒரு சின்ன ஹால். ஒரு அறை. குளியல் அறை.

ரேணுகா: வீட்டைக் கண்டுபிடிக்க ரொம்பக் கஷ்டப்பட்டியோ?

கண்ணன்: ஆமாக்கா. இந்த ஊரோட பேட்டை, சந்து முடுக்கு எல்லாத்தையும் இன்னைக்குத்தான் பார்க்க முடிஞ்சது. சாக்கடை ஓரம் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க ஜனங்க. சகிக்க முடியலை. ஆரோக்கியம், சுற்றுச் சூழல் அப்படி இப்படின்னு ரொம்ப ஆடம்பரமாப் பேசிக்கிட்டு இருக்கோம்...

(ரேணுகா சிரிக்கிறாள்)

ரேணுகா: முதல் முதல்ல பார்க்கிறே இல்லையா. ரொம்பக் கஷ்டமா இருக்கும்தான். நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே இங்கதாம்பா. எனக்குச் சாக்கடை பழகிப் போச்சு. என்னோட கூடப் பிறந்தது நாலு குழந்தைங்கப்பா. இதைத் தாங்கிக்க முடியாமே, மத்த மூணு குழந்தைங்களும் போய்ச் சேர்ந்துட்டாங்க. நான் மட்டும் தான் பிழைச்சேன். எங்க அப்பாவுக்கு யானைக்கால். சாராயத்தை குடிச்சு நாப்பது வயசுக்கு முன்னால போய்ச் சேர்ந்துட்டார். அம்மா, வீட்டு வேலை, அப்படி இப்படி வாழ்ந்து என்னை வளர்த்துச்சு.

கண்ணன்: இருக்காங்களா?

ரேணுகா: இல்லை. கடைசியா, சினிமாக் கொட்டாயில டிக்கட் கிழிக்கிற ஒரு ஆளோட இருந்துச்சு. ஏதோ சண்டை. ஆம்படையான் பெண்டாட்டி சண்டை. அந்த ஆள், கத்தியால குத்திட்டு ஜெயிலுக்குப் போயிடுச்சு. அதுல அம்மா போயிட்டா... குடி... யார் மேலயோ இருக்கிற கோபத்தை, புருஷன் பெண்டாட்டி மேல காட்டறான். வேற எங்கயும் அவன் கோபம் செல்லுபடியாகாதே. பாவம்.

கண்ணன்: யார், பாவம்கா?

ரேணுகா: எல்லாரும்தான். நான், நீ. எல்லாம் தான். கஷ்டப்படறதுக்கும், கஷ்டப் படுத்தறதுக்குமா பிறந்தோம்? நமக்கு விதிச்சது அதுதான். கோயில்ல சுண்டல் கொடுக்கிற மாதிரி. ஒரு வாட்டி நிறைய கிடைக்குது. சில சமயம் குறைவா. சில சமயம், கிடைக்கவே கிடைக்கிறதில்லை.

கண்ணன்: சரி. அது இருக்கட்டும். உங்களுக்கும் உங்க கணவருக்கும் என்ன பிரச்னை? எனக்கு நேத்துதான்கா தெரியும். கஷ்டம் வந்த போது என் ஞாபகம் உங்களுக்கு வரல்லை. இல்லையா?

ரேணுகா: உனக்கும் கஷ்டம் கொடுக்கக் கூடாதுன்னு தான் சொல்லலை. சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கலாம். துக்கத்தைப் பகிர்ந்துக்க முடியுமா.

22



சொல்லு.

கண்ணன்: துக்கத்தைப் பகிர்ந்துக்கதானே சினேகம் எல்லாம்.

ரேணுகா: எல்லாருக்கும் அது பிடிக்காது. கண்ணா, என்ன சாப்பிடறே? வெயில்லே வந்திருக்கே?

கண்ணன்: ஒண்ணும் வேண்டாம். தண்ணி மட்டும் கொடு. போதும். (அவள் எழுந்து போய், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறாள்.)

ரேணுகா: உனக்கு யார் சொன்னா?

கண்ணன்: செல்வத்தோட சினேகிதர்.

பிரபஞ்சன்

அவர்தான் சொன்னார்.

ரேணுகா: எதேச்சையாகச் செல்வத்தைப் பார்த்தேன். அவர் தெரிஞ்சுக்கிட்டு இங்க இடம் பார்த்துக் கொடுத்தார்.

கண்ணன்: என்ன நடந்துச்சு, சொல்லு.

ரேணுகா: வேற என்ன? ஒரு மனுஷனோட செட்டில் ஆனோம்னு சந்தோஷமா இருந்தேன். அவர், அப்படியொன்றும் சட்டபூர்வமான வாழ்க்கை வாழுறவர் இல்லை. அது எனக்கும் தெரியும். நம்ம வரைக்கும் சரியா இருந்தா சரிந்து சரின்னு நினைச்சேன். அவருக்கு நிறைய பிரச்னை. நிறைய மனுஷங்களைச் சரிப்படுத்தணும். திருப்திப் படுத்தணும். அந்த நிறைய விஷயங்கள்லே நானும் ஒண்ணா யிட்டேன். யாரோ ஒரு பெரிய மனிதனைத் திருப்திப் படுத்தணும்கிற கட்டாயம் அவருக்கு. என்னை அதுக்கு நியமிச்சாரு. நான் முடியாதுன்னேன்....

காட்சி மாறுகிறது.

(ரேணுகாவும், அந்த மனிதரும் பேசிக் கொள்கிற காட்சி தொடர்கிறது)

அவர்: ஏன் முடியாது?

ரேணுகா: என்னால் முடியாது.

ரேணுகா: சரி. என்னாலயும் முடியாது.

அவர்: சும்மா உக்கார வச்சு, உனக்குச் சோறு, புடைவை, நகை கொடுக்க என்னால முடியாது.

ரேணுகா: என்கிட்ட காளின்னு ஒருத்தன் இருந்தான். அவன் இதைத்தான் எனக்குச் செய்துகிட்டு இருந்தான். உங்ககிட்டயும் நான் இதை எதிர்பார்க்க முடியாது.

அவர்: உன் இஷ்டம்.

(அவர் போகிறார்.)

(காட்சி திரும்புகிறது)

ரேணுகா: அப்போ போனவர்தான். அப்புறம் திரும்பி வரலை. வீட்டு உரிமையாளர் வந்து, காலி பண்ணச் சொன்னார். அந்த ஆள்கிட்ட, அவர் சொல்லி காலி பண்ணச் சொல்லி இருக்கார். எங்க போறதுன்னு தவிச்சுக் கிட்டு இருந்தேன். திரும்பவும் நீ சொன்ன சாக்கடை ஓரம் போக முடியாது. அப்போ செல்வம் கேள்விப்பட்டு வந்தார்.

"அதுக்காக, 'தித்திக்குதே' படத்தைக் கூட நான் பார்க்கக் கூடாதுன்னு நீ கண்டிஷன் போடறது, டூ மச் விமலா!"

– ஸ்ரீரங்கம் கோபாலன்

"உங்களுக்கு டயாபடீஸ் இருக்கு, மறந்துடாதீங்க!"

அவர்: எப்படி முடியாதுங்கிறே. அதைத்தானே செய்துகிட்டு இருந்தே.

ரேணுகா: இருந்தேன். நீங்க அழைக்கும் போது, மீண்டும் அந்த வாழ்க்கை வேண்டாம்னு, அந்தக் கதவை மூடிட்டு வந்திருக்கேன். திரும்பவும் அதைத் தொடங்க என்னால ஆகாது.

அவர்: உன்னைத் தொழில் பண்ணவா சொல்றேன். நான் ரொம்ப இக்கட்டுல இருக்கேன். இந்தச் சின்ன உதவியை நீ செய்யக் கூடாதா எனக்காக?

ரேணுகா: இந்த மோதிரம், பணம், நீங்க போட்டிருக்கிற செயின் இதுகளைத் தர முடியும். நான் மறந்துட்டேன். இனிமேல் அதைத் தொடர முடியாது.

அவர்: இதைக்கூட எனக்காக...

ரேணுகா: இதை உங்க மனைவிகிட்ட கேட்க முடியுமா?

அவர்: அவளைப் பத்திப் பேசாதே.

கண்ணன் : பரவாயில்லைக்கா. செல்வம் இருக்கார். அவர் மட்டும்தான் உனக்கு சொந்தம்னு நினைக்க வேண்டாம். நான் இருக்கேன். இதோ இருக்கு.

(ரேணுகா சிரிக்கிறாள். இலேசாக இருமுகிறாள்.)

என்னக்கா உடம்பு சரி இல்லையா?

ரேணுகா: ஆமா. எல்லாம் நாளைக்குச் சரியாயிடும். வீடு மாத்தம், கவலை. பயம், எல்லாம் சேர்ந்து இலேசா ஜுரம். இப்போ பரவாயில்லை.

கண்ணன்: அக்கா, இந்தா, என்கிட்ட இப்ப ஆயிரம் இருக்கு. அப்புறமா இன்னும் தர்றேன். உனக்குத் தேவைப்படும்.

ரேணுகா: நீ இருக்கிற எனக்குன்ற நினைப்பே, எனக்கு ஆயிரம் யானை பலம்பா. பணம், இப்போதைக்குத் தேவைப் படாது. என்கிட்ட கொஞ்சம் இருக்கு. செல்வம், வீட்டுக்குத் தேவையானதை வாங்கப் போயிருக்கிறார்.

வாசலில் சப்தம் கேட்கிறது. ஆட்டோ. பெரிய அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு செல்வம் வருகிறார்.

செல்வம்: வாங்க... கண்ணன்... நாளைக்கு உங்களை வந்து பார்க்கலாம்னு இருந்தேன்.

(பொருள்களைச் சமையல் அறைக்குள் வைத்துவிட்டு வருகிறான்)

ரேணுகா, நீங்க எழுதிக் கொடுத்ததை எல்லாம் வாங்கி வந்திருக்கேன். இருபத்தைஞ்சு நாளைக்குப் போதும்னு நினைக்கிறேன். *(தன் சட்டைப் பையிலிருந்து மாத்திரையை எடுக்கிறான்.)*

ஒண்ணு இப்ப சாப்பிட்டிருங்க. ஒண்ணு படுக்கப் போறதுக்கு முன்னால.

(ரேணுகா உள்ளே போய் மருந்து



சாப்பிட்டு வருகிறாள்.)

செல்வம்: கிதா சௌக்யமா?

கண்ணன்: நல்லா இருக்காங்க.

நீங்க செய்தது பெரிய உதவி செல்வம்.

செல்வம்: ரேணுகா, எனக்கும், என் மாணவர்களுக்கும் செய்திருக்கிறதை விடவா இதெல்லாம். அதுக்காக இல்லை.

ரேணுகா: அவரோட இருந்த காலத்துல, அவர் எனக்குச் செய்த ஓர் உதவி அதுதான்.

செல்வம்: எந்த மோசமான ஆள்கிட்டேயும், ஒரு நல்ல குணம் இருக்கும்.

கண்ணன்: சரி. இனிமே என்னக்கா?

செல்வம்: கண்ணன், ரேணுகாவுக்குத் தகுந்த வேலை பார்க்கணும். யாரையும் எதிர்பார்க்காத, சுயமா வாழத்தக்க வேலை.

கண்ணன்: என்ன மாதிரியான வேலைக்கா?

ரேணுகா: ஒரு கவர்னர் வேலை, அட்லீஸ்ட் ஜனாதிபதி வேலையாவது கிடைச்சா போதும்.

(சிரிப்பு)

கண்ணன்: யோசிப்போம். இருக்கவே இருக்கு அம்சா மாமி. நிச்சயம், ஏதாவும் பண்ணுவாங்க.

ரேணுகா: நானும் வர்றேன். எனக்கும் வெளியே போகணும் போல இருக்கு. அடைஞ்சே கிடக்கிறேன்.

செல்வம்: சரி, முகத்தைக் கழுவிட்டு வாங்க. காபி சாப்பிடுவோம். காலாற நடந்துட்டும் வரலாம்.

(புறப்படுகிறார்கள்)

(ஒரு குடும்ப அறையில் அவர்கள் மூவரும் அமர்ந்திருக்கிறார்கள்) சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணன்: இப்போ, உங்க பள்ளிக்கு பிரச்னை இல்லையே...?

செல்வம்: இடத்தை மாற்றலாம்னு இருக்கேன். அங்க பேருந்து நிலையம் வருது. பொதுக்காரியம். நாம் தடையா இருக்க வேண்டாம்.

கண்ணன்: அதுவும் சரிதான். பணம் தேவைப்படுமே..

செல்வம்: என் பாகமா கொஞ்சம் நிலம் இருந்தது ஊரிலே. வித்துட்டேன். மழையும் இல்லை. கீழே தண்ணியும் இல்லை. எனக்கு விவசாயமும் தெரியாது... கொஞ்சம் விசாலமா இடம் வாங்கி, பள்ளியும் வீடும் ஒண்ணா இருக்கற மாதிரி.

கண்ணன்: தெய்வநாயகி ஊரிலே இருந்து வரத் தாமதம் ஆகும் போல இருக்கே.

செல்வம்: ஆமா, இன்னிக்குக் காலைல டெலிபோன்ல பேசினேன்.

கண்ணன்: அப்பா பிழைச்சுக்குவாராமா?

செல்வம்: கஷ்டம்னு தோணுது.

(அமைதி)

நம் நண்பர்கள் எல்லார்க்கும் இது பிரச்னையான நேரம் போல.

ரேணுகா: பிரச்னை வரும்போதுதான் நண்பர்கள் சரியா அறிமுகம் ஆறாங்க....

(தொடரும்)



கோவைச்
சிறப்பிதழ்



கோவையின் மெரினா!

சென்னை மெரினா கடற்கரையில் ஞாயிறன்று எவ்வளவு கூட்டம் வருகிறதோ அதைவிட அதிகமாகக் கோவையில் கூட்டம் வரும் ஒரு 'கிக்'கான இடமுண்டு:

கோவை நேரு ஸ்டேடியம் அருகிலுள்ள வ.உ.சி. பூங்கா... மற்ற தினங்களில் ஈ அடித்தாலும் ஞாயிறன்று நிரம்பி வழிகிறது. பாதி பசுமையைத் தொலைத்து விட்டு நிற்கும் புல் தரைகள், ஆங்காங்கே கொஞ்சம் பூஞ்செடிகள் என வறட்சியாக இருந்தாலும் பூங்காவில் விண்ணை முட்டும் அடர்ந்த மரங்கள் குடை பரப்பி நிற்பதில் கூட்டம் கூடிவிடுகிறது.

மாநகராட்சி பராமரித்து வரும் இந்தப் பூங்காவில், டயனோசர் பிரிவும், அருகிலிருக்கும் மிருகக் காட்சி சாலைக்குள் புகுந்து புறப்பட்டு வரும் குட்டி ரயிலும் ஸ்பெஷல் அட்ராக்ஷன்கள்! பூங்காவின் வாசலில் பானிபூரி, கோபி மஞ்சூரியன் மற்றும் காளான் உணவுகள் படுஜோராக விற்றாலும் சுண்டல்காரர்களுக்குத்தான் செம பிஸினஸ்! காரணம்?.... வேறு யார், மாண்பு மிகு கோவைக் காதலர்கள்தான்!

கோவை மாநகருக்குள் ஏகப்பட்ட பூங்காக்கள் இருந்தாலும் காதலித்தவர்கள், காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள், காதலித்துக் கொண்டிருப்பவர்கள் என்று அனைத்துப் பிரிவினருக்கும் ஒன் அன்ட் ஒன்லி லேண்ட் மார்க் இந்த வ.உ.சி. பூங்காதான்.

மாநகராட்சியும் மாநகரக் காவல் துறையும், காதலர்களை விரட்ட பலமுறை நடவடிக்கை எடுத்தும் பலன் இல்லாததால் நிரந்தர லவர்ஸ் பார்க்காகிவிட்டது!



தித்திக்குதே...

பளபள பணக்காரர்கள் அதிகமுள்ள கோவை நகரில் மினரல் வாட்டர் விற்பனை என்பது சும்மா ஒப்புக்குச் சப்பாணி தான். காரணம் கோவைக் குடிநீர்! செவ்விளநியைச் சீவும்போது பீறிடும் இளநீர்த் துளிகள், உதட்டோரம் தெறித்து, நாவை எட்டும் போது உணரும் அதே தித்திப்பு இந்த ஊர் தண்ணீருக்கு உண்டு. தித்திப்பின் ரகசியம் சிறுவாணி அணை.

மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் தென் மேற்கு மழையின் விளைவாக உருவாகும் சிறுவாணி,





• ஆட்டோ டிரைவர் நாசர்

மலைப்பகுதியிலேயே ஓடி வந்து, சிறுவாணி அணையில் தங்கிவிடுகிறது. கொஞ்சமும் மாசற்ற சிறுவாணியின் தித்திப்புச் சுவைக்கு, இதுதான் முழு முதற் காரணம் என்கிறார்கள் சிறுவாணி ரசிகர்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவைக் குடிநீரில் சுவை குறைந்து கொண்டே வருகிறது'' என்று குறைபட்டுக் கொள்கிறார்கள் கோவைப் பெரிசுகள்.

“சிறுவாணியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பருவ மழை இல்லை. மிக மோசமான வறட்சி. இதனால் சிறுவாணியிலிருந்து கோவை நகரின் ஒரு சில பகுதிகளுக்கே தண்ணீர் தர முடிகிறது. எஞ்சிய பகுதிகளைக் காப்பாற்றுவது பில்லூர் அணைக் கட்டிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீர்தான். பில்லூர் அணைக்கு வரும் தண்ணீரில் மாசுக்குப் பஞ்சமிருக்காது. அதனால்தான் சுவை குறைந்துவிட்டது'' என்று கோவை குடிநீர் வாரிய அதிகாரி ஒருவர் ரகசியம் உடைத்தார்.

''அவ்வளவு ஏங்க? நல்லா பசிக்கிற நேரத்துலே சும்மா இரண்டு தம்ளர் தண்ணீர் குடிச்சா போதும். ஒரு மணி நேரத்துக்குப் பசிக்காது. குளிச்சா, ஆண்ட்டியும் அக்கா ஆயிடுவா! சிறுவாணித் தண்ணியிலே சாதம் பொங்கினா உஜாலாவுக்கு மாறின மாதிரி டாலடிக்கும்'' என்கிறார் கோவை ரத்தினபுரி நாசர்.

கோவைச் சிறப்பிதழ்

குழந்தை பெற முக்கூட்டு மருத்துவம்

“குழந்தை பேறு இல்லாத தம்பதியரில், குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, அவர்களை இயற்கையாகவே குழந்தை பேற்றுக்கு தகுதி உள்ளவர்களாக ஆக்கும் - பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை. நாங்கள் கடைப்பிடிக்கும் 'ஹோமியோபதி - சித்திர - ஆயுர்வேதம்' என்ற முக்கூட்டு மருத்துவ முறையாகும்'' என்று கூறுகிறார். 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னை வடபழனியில் 100 அடி சாலையில், கவுரி சங்கர் திருமண மண்டபம் எதிரிலும் சிகிச்சை நிலையங்கள் நடத்திவரும் டாக்டர் ஏ. அர்ஜுனா.



• சென்னை மாங்காட்டைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் - சுசீலா தேவி தம்பதியர் - உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்று டாக்டருடன் உள்ளார்கள். சுசீலாதேவி மீண்டும் 5 மாத கர்ப்பவதியாக உள்ளார்.

“கடந்த 43 ஆண்டுகளுக்கும் மேலான என் மருத்துவ அனுபவத்தில் ஆயிரக்கணக்கான தம்பதியர்களுக்கு சிகிச்சை அளித்திருக்கிறேன்.

என்னிடம் வரும் தம்பதியரிடம் சிகிச்சைத் தொடங்கும் முன் கணவனின் உயிரணு உற்பத்தி சரியாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய விந்துப் பரிசோதனை செய்யச் சொல்வோம். அதில் குறைபாடு இருந்தால் எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் சரியாகும் வரை அவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளுடன் சிகிச்சை அளித்து, உயிரணுக்கள் உற்பத்தி செய்து அணுக்களின் எண்ணிக்கை - உயிரோட்டத்தை அதிகரிக்கச் செய்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

ஆண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள் :

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், இந்திரிய நரம்புகள் இல்லாமல் பிறந்திருந்தாலும், அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு எங்கள் முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்ய முடியும்.

பெண் மலட்டுத்தன்மை காரணங்கள் :

கருப்பை வளர்ச்சியே இல்லாமல் இருக்கும் பெண்களின் கர்ப்பப்பையை வளர்ச்சியடையச் செய்கிறோம். சில பெண்களுக்கு வீட்டு விலக்கு ஒழுங்கில்லாமல் இருக்கும். அதை ஒழுங்குபடுத்துகிறோம். சில பெண்களுக்கு மாதந்தோறும் வீட்டு விலக்கின் போது சூதக வயிற்றுவலி வரும். இதனால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையையும் எங்கள் முக்கூட்டு மருந்துகளால் குறைபாடுகளை நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. எங்கள் முக்கூட்டு மருத்துவத்தால் கருமுட்டை உண்டாக்கி, கருவுறச் செய்கிறோம். இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

பெண்களுக்குள்ள பிரதான பெரிய பிரச்சினை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி விடுகிறோம்.



• உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் முக்கூட்டு சிகிச்சையால் 20.8.03-ல் குழந்தை பெற்ற விழுப்புரம் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த முருகன் - தமிழரசி தம்பதியர்.

கடந்த ஆண்டு துபாயில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு கருக்குழாய் அடைப்பு நீங்கி, ஆண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை போரூரைச் சேர்ந்த ஒரு தம்பதியரில் ஆணுக்கு 25.9.2000-ல் செமன் டெஸ்ட் செய்ததில் கவுண்ட் 1 மில்லியனும் மொட்டிலிட்டி 20%ம் இருந்தது. 16.11.2000ல் டெஸ்ட் செய்ததில் கவுண்ட் 78% மில்லியனும், மொட்டிலிட்டி 20%ம் ரிசல்ட் கிடைத்துள்ளது. இது ஒரு பெரிய சாதனை. எங்களிடம் 4 வார மருந்து சாப்பிட்டதிலேயே இந்த சாதனைக்குரிய ரிசல்ட் கிடைத்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுகாவில் செபாஸ்டின் - மேரி தம்பதியருக்கு ஏழு வருடம் குழந்தை இல்லாதிருந்து முக்கூட்டு மருத்துவத்தால் உயிரணு உற்பத்தியாகி, மேரி தற்போது 5 மாத கர்ப்பவதியாக உள்ளார்.

தஞ்சாவூரில் திருமணமாகாத அறவே உயிரணு இல்லாத ராஜாஜி என்பவருக்கு முக்கூட்டு மருத்துவத்தால் தற்போது உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

தஞ்சாவூர் ராஜமன்னார்குடியில் நடராஜன் என்பவருக்கு உயிரணு உற்பத்தி ஆகி அவர் மனைவி தற்போது 4 மாத கர்ப்பவதியாக உள்ளார்.

வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளியில் மணி - ரோஜாமலர் தம்பதியருக்கு 3.6.2003ல் முக்கூட்டு மருத்துவத்தால் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

முக்கூட்டு மருத்துவத்தால் மலேசியாவில் வசிக்கும் ஜீனத் - அபுபக்கர் தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

சவுதி அரேபியாவில் சுப்ரமணி - கிருஷ்ணவேணி தம்பதியருக்கு சென்ற மாதம் ஆண் குழந்தை பிறந்துள்ளது - முக்கூட்டு மருத்துவத்தால்.

திருவண்ணாமலை நகரத்தில் ஒரு செல்வந்தர் குடும்பத்தில் 12.2.2003ல் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலில் கணேசன் - தேவிகா தம்பதியருக்கு 2 பெண் குழந்தைகள் பிறந்துள்ளன.

சென்னை சி.ஐ.டி. நகரில் சுமதி - ஆனந்தவேலு தம்பதியருக்கு இந்த ஆண்டு மகன் பிறந்துள்ளான்.

கடலூர் மாவட்டம் சேத்தியா தோப்பைச் சேர்ந்த அருள்தாஸ் - மேரிக்கு முக்கூட்டு மருத்துவத்தால் இந்த மாதம் (ஆகஸ்டு) பெண் குழந்தை பிறந்துள்ளது.

எங்கள் மருத்துவமனையில், தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும், அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை,



மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்'' என்றார் டாக்டர் அர்ஜுனா.

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்கும் இடம் : எண் : 65, நெற்குன்றம் பாதை, 100 அடி ரிங் ரோடு, (டி.எஸ். கவுரிசங்கர் திருமண மண்டபம் எதிரில்), வடபழனி, சென்னை - 600 026. போன் : 23623464 STD 044.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம் : நெ. 30, பிராமணர் தெரு, (ஈஸ்வரன் கோயில் அருகில்), வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் - 604 408. போன் : 225208, 226180. STD 04183.

ADVT

நம் உடலில் ஒவ்வொரு பாகத்தையும், ஒவ்வொரு தேவர்கள் ஆளுகின்றனர். நமது கொப்பூழ் - மணிபூரகம் - சூரியனுடன் சம்பந்தப்பட்டது. அதனால் இது சூரியனுடைய சக்கரம் என அழைக்கப்படுகிறது. சூரியனின் முதல் கிரணங்கள், இந்தச் சக்கரத்தின் மேல் பட்டால் உடலுக்கு மிகவும் நல்லது. அதனால்தான் சூரிய நமஸ்காரம் எனும் யோக சாதனையை, விடியற்காலையில் செய்தல் மிக நல்லது.


இந்த மணிபூரகச் சக்கரம் நமது மத்திய நரம்பு மண்டலம், கண் நரம்புகள், வயிறு, ஆறாவது அறிவு எனப்படும் 'அதீத உணர்வு' இவற்றுடன் நெருங்கிய, ஆழ்ந்த தாக்கம் கொண்டிருக்கிறது. இது நமது உடலில் இரண்டாவது மூளை. சாதாரணமாக இந்த மணிபூரகம் ஒரு பாதாம் பருப்பைவிடச் சற்றுப் பெரிதாக இருக்கும். யோகசாதனை, தியானம், சுதர்சனக்ரியா போன்ற சாதனைகள் செய்வதால், அதன் அளவு ஒரு நாவல் பழம் அளவுக்குப் பெரிதாகும். அப்போது அதன் இயக்கம் சிறப்பாகிறது; உடல் உறுப்புக்களின் வேலைகளைச் சீர்படச் செய்கிறது.

மணிபூரகச் சக்கரம் சுருங்கும் பொழுது பயம், சோகம், மனச் சோர்வு போன்ற எல்லா எதிர் மறை உணர்ச்சிகளும் ஏற்படுகின்றன.

மணிபூரகச் சக்கரம் விரிவடையும் பொழுது, விஷயங்களை உணர்ந்து கொள்ளும் அதீதமான ஆற்றல் விழித்தெழுகிறது, மனம் தெளிவாகிறது, ஒருமுனைப்படுகிறது. மலர் போல மலர்கின்றது!

கிருஷ்ணருக்குப் பத்மநாபன் என்ற பெயர் உண்டு. ஒரு தாமரை மலர் அளவு மணிபூரகச் சக்கரம் உடையவர் எனப் பொருள். நீ பத்மநாபனாக ஆவாயானால், ஆக்கபூர்வமான சக்தியை முழுமையாகப் பெறுவாய். பிரம்மா - படைப்பவர், மலர்ந்து விரிந்த மணிபூரகச் சக்கரத்திலிருந்து உண்டானவர்.

இப்பொழுதெல்லாம் மணிபூரகம் சிறியதாகவே இருக்கிறது. ஆனால் வயிறு மட்டும் பெரிதாகிக் கொண்டு வருகிறது!



குருஜி

எப்போதாவது ஒருமுறை சடங்குகள் சிலவற்றைச் செய்வேனே தவிர, மதம், ஆன்மிகம் போன்ற விஷயங்களில் சிறு வயதிலிருந்தே நான் ஈடுபாடு கொண்டதில்லை. அதற்காக என்னை நாத்திகன் என்றும் கூறிக் கொள்ள மாட்டேன். பல அற்புத நிகழ்வுகளை, பல சந்தர்ப்பங்களில் கண்டு அனுபவித்துத் திளைத்தவன் நான். அவற்றை எப்படி விளக்குவது என்று திணறியதும் உண்டு. சுருக்கமாக, 'ஆன்மிகம்' என்று சொல்லிவிடுகிறேன்...

எனக்கென்னவோ சாதுக்கள், பண்டிதர்கள், முல்லாக்கள், உபதேசியார்கள் என்றாலே அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பதே நலம் என்று தோன்றும். தங்களை அறிவாளிகள் என்றும், அறிவை ஊட்டுபவர்கள் என்றும் காண்பித்துக் கொள்ளுவதில் அவர்களுக்கு அதீத ஆசை. கலைகளிலும், எழுத்திலும்,

அன்பின் ஊற்று-12



• மணிப்பூரகச் சக்கரத்திலிருந்து பிரம்மா மலர்கிறார்

மலரே... மனமே...!

இசையிலும் உன்னத இன்பம் காணும் என்னைப் போன்றவர்களுக்கு, அவர்களது நட்பு அச்சமூட்டுவதாகவே தோன்றுகிறது.

இந்தப் பின்னணியில்தான் நான் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்களைச் சந்தித்தேன். பேசப் பேச, இவர் மற்ற 'குரு'க்கள் போல அல்ல என்று கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது. இவர் வேடிக்கைகளை ரசித்தார். நிறையப் புன்னகை செய்தார். சிரித்து மகிழ்ந்தார். நகைச்சுவையாகப் பொழிந்தார். அவருடைய ஞானம் அற்புதமாக வெளிப்பட்டது. திடீரென்று பாடினார். மனிதநேயமோ பளிச்சிட்டது. அவருடைய சீடராகித்தான் அவரை மதிக்க வேண்டும் என்று இல்லை; நல்ல நண்பராகவே இருந்தால்கூடப் போதும் அவருக்கு.

இந்த நட்பின் காரணமாக, நான் அவருடன் எதை வேண்டுமானாலும் பேச முடிகிறது. சில விஷயங்களில் அவர் எனக்கு ஆசானாகவே தெரிகிறார். சாத்திரங்களில் புலமை மிகப் பெற்றவர் என்பதோடு, பிற கருத்துகளையும் திறந்த மனத்தோடு ஏற்கிறார். இதுவே அவரை நவீன மனம் கொண்டவராகக் காண்பிக்கிறது. இப் பூமியில் நடமாடும் மிக உன்னத மனிதராக ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை இக் குணங்களே நினைக்க வைக்கின்றன.

திலிப் பட்காங்கர்,
ஆசிரியர்: 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

உதட்டில் ஜெ! உள்ளத்தில் சோனியா!



அவரது அலுவலகத்தில் நுழையும்போதே ஜெயலலிதாவின் படம் நம் கண்களில் படுகிறது. நமக்குள் மெல்லிய அதிர்ச்சி அலை! இருக்காதா பின்னே?! கோவை மேற்குத் தொகுதியின் காங்கிரஸ் எம்.எல்.ஏ வழக்கறிஞர் எஸ். மகேஸ்வரியின் அலுவலகமல்லவா அது!

வசீகரத் தோற்றம், துணிச்சல், துடிப்பு போன்றவை மகேஸ்வரியின் அடையாளங்கள். இதனால்தானோ என்னவோ தொகுதி மக்கள், இந்த காங்கிரஸ்காரரை கோவை ஜெயலலிதா என்றும் காங்கிரஸிலிருக்கும் அ.தி.மு.ககாரர் என்றும் முத்திரை குத்துகிறார்கள்! ஆத்தி! விஷயம் ரொம்ப சீரியஸா இருக்கே!

"உங்கள் கட்சித் தலைவி சோனியாவை, ஜெயலலிதா கடுமையாகத் தாக்கிப் பேசி வருகிறார். ஆனால், நீங்கள் ஜெவின் விசுவாசியாகவே உங்களை வெளிப்படுத்தி வருவதாக பரவலான பேச்சு எழுந்துள்ளதே!" என விஷயத்தைச் சட்டென்று ஓப்பன் செய்தோம்.

"மாற்றுக் கட்சி எனக் கருதாமல் சட்டமன்றத்தில் நான் முன் வைக்கும் என் தொகுதியின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றி வருகிறார் முதல்வர். அந்த வகையில் முதல்வருக்கு நன்றியும், மரியாதையும் உள்ள சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன். அதேசமயத்தில் அரசியல் என வரும்போது அன்னை சோனியா காந்திக்குத்தான் விசுவாசியாக இருந்து செயல்படுவேன்!" என்று தடாலடியாக டைவடிக்கிறார் எஸ். மகேஸ்வரி.

கோவைச் சிறப்பிதழ்


அடுத்த இதழிலும் தொடரும்... கோவை மாவட்ட அதிரடிகள்!

- **கலவரக் காயங்கள் மீது மறுபடியும் கல்லடியா?** - ஓர் உண்மை ரிப்போர்ட்!
- **பூனை முதல் யானை வரை!** - பொள்ளாச்சி சந்தைக்கு விசிட்
- **தனியார் மயமாகும் தண்ணீர் விநியோகம்!** - திருப்பூர் திகில்!
- **'சொல்ல முடியாத' அவமானம்!** - நாஞ்சில் நாடன் குமுறல்

வாசகர் பங்களிப்பு உள்ளிட்ட திருவிழாத் தோரணமாக கோவை சிறப்புப் பக்கங்கள்



எல்லாவித புற்று நோயாளிகளும் உடல் ரீதியான முன்னேற்றமடைய தெய்வீக மூலிகை மருத்துவம்!



ஞானோதய வைத்தியர் C.K.மாணிக்கவாசகம் அவர்கள் ஆராய்ச்சியில் எளிய மக்களும் பயனடைய தக்க வகையில் தெய்வீக மூலிகைகளை கொண்டு நீண்ட நேர இருமல், சளியுடன் இரத்தம் கலந்து வருதல் மூச்சு வாங்குதல், அடிக்கடி காய்ச்சல், இரவில் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் கொண்ட நுரையீரல் புற்று நோயாளிகள், கை, கால் எலும்புகளில் வலி, வீக்கம், அழுத்தி பார்த்தல் அதிக வலி போன்ற அறிகுறிகள் கொண்ட எலும்பு புற்று நோயாளிகள், இரத்தம் இரத்தமாக வாந்தி எடுத்தல், மூக்கில் அடிக்கடி இரத்தம் வருதல் போன்ற அறிகுறிகள் கொண்ட இரத்த புற்று நோயாளிகள், மார்பில் கட்டி போல் காணப்பட்டு அழுத்தினால் அதிக வலி கொடுக்கும் மார்பக புற்று நோயாளிகள், அஜீரணப் பசியின்மை, வாந்தி எடுத்தல், தலை சுற்றல் போன்ற அறிகுறிகள் கொண்ட கல்லீரல் புற்று நோயாளிகள் மலகுடல் புற்று நோயாளிகள், மாதவிடாய் தள்ளி போகுதல், கருப்பையில் வலி, அதிக இரத்த போக்கு போன்ற அறிகுறிகள் கொண்ட கருப்பை புற்று நோய் மற்றும் வாயில் புற்று நோய் கொண்டவர்கள் அனைவரும் பின் விளைவு பக்க விளைவு இல்லாத தெய்வீக மூலிகை சிகிச்சை பெறலாம்.

மற்றும் **இதயக் கோளாறுகள், சிறுநீரகக் கோளாறு, எய்ட்ஸ், ஆண்மைக் குறைவு, குழந்தையில்லாத குறை, ஆஸ்துமா, சர்க்கரை வியாதி, அல்சர், மூட்டுவலி, சொரியாசிஸ், மாத விடாய் கோளாறு, உயிரணுக்கள் குறைவு** போன்றவைகளுக்கும் தரமான மூலிகை சிகிச்சையும் & ஆலோசனைகளும் பெறலாம். அணுக வேண்டிய முகவரி :



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696

தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி S/o Dr.C.K.மாணிக்கவாசகம்**

P.B.No:30, No.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.)-635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 26424285, 26427638

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க செல் : 98423 69696

வேலூர்	காஞ்சிபுரம்	கடலூர்	விழுப்புரம்	திருவண்ணாமலை
2ந் தேதி - 12 pm to 2 pm (N.S.R.காட்டு) 26/A, ஆரணி ரோடு, (கண் ஆஸ்பத்திரி அருகில்) ✆ : 0416 - 2213159	2ந் தேதி - 5 pm to 6 pm ராஜம் காட்டு, (பஸ் நிலையம் அருகில்) காமராஜர் தெரு. ✆ : 04112 - 222519	4ந் தேதி - 9 am to 11 am ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142-2330707, 230717	4ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் ஆனந்த, பஸ் நிலையம் எதிரில், ✆ : 04146 - 222962, 228626	4ந் தேதி - 5 pm to 6 pm ராஜா காட்டு, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 - 222536
மும்பை	**பெங்களூர்**	**ஓசூர்**	**சேலம்**	**ஈரோடு**
7 & 8ந் தேதி - 10 am to 8 pm The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), ✆ : 022-24083879, 24011589	9ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் பிளாட்டோ, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பகடை ரோடு. ✆ : 080-2266374,2873013	9ந் தேதி - 4 pm to 5 pm சீனிவாசா காட்டு, பாகலூர் ரோட், ✆ : 04344 - 242899, 243321	12ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 - 2334491,93,94	12ந் தேதி - 2 pm to 4 pm ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்ட்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424-2226611/12/13/14
திருப்பூர்	**கோயம்புத்தூர்**	**உடுமலைபேட்டை**	**மதுரை**	**திருநெல்வேலி**
12ந் தேதி - 6 pm to 8 pm ராமகிருஷ்ணா காட்டு, ஈஸ்வரன் கோவில் தெரு. ✆ : 0421 - 2240418	13ந் தேதி - 9 am to 1 pm சேரன் பேலஸ் காட்டு (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆:0422-2302211,12,13,14,15	13ந் தேதி - 5 pm to 6 pm ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 - 224353	14ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 - 2343941	14ந் தேதி - 5 pm to 7 pm ஹோட்டல் ஸ்ரீ சித்தபதி, மதுரை ரோடு, ✆ : 0462 - 2333312
விருதுநகர்	**தஞ்சாவூர்**	**திருச்சி**	**கரூர்**	**நியூடெல்லி**
15ந் தேதி - 8 am to 10 am அண்டன் காட்டு, மதுரை ரோடு, ✆ : 04562 - 245537	15ந் தேதி - 4 pm to 6 pm அசோகா காட்டு, தஞ்சாவூர். ✆ : 04362-2330022, 276940	16ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ✆ : 0431 - 2415545	16ந் தேதி - 3 pm to 5 pm அரசி காட்டு, ஜவகர் பஜார் ✆ : 04324 - 263763, 262663	20 & 21ந் தேதி - 10 am to 8 pm South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 011 - 25717126, 25723651

தகவல் : SUN, RAJ, VIJAY, DD T.V. களில் எமது பேட்டியை காணத் தவறியவர்கள், டாக்டரின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ.200/- மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

ஆஹா!

ரூ.50,000 பரிசு!





கோவை வாசகர்களுக்காக மட்டுமே

கல்கி

வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

ரூ. 50,000 மெகா பரிசு பெற நீங்கள் செய்ய வேண்டியது ரொம்ப ரொம்ப சிம்பிள்!

கீழே உள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 14, 21, 28 செப்டெம்பர் மற்றும் 5, 12 அக்டோபர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய கோவை மாவட்ட வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக, சென்னை, தி. நகர் P.R. ஜுவல்லரி வழங்கும் ரூ.120/- மதிப்புள்ள வெள்ளி காமாட்சி விளக்கு நூறு பேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (கோவை)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி கோவை மாவட்ட கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.



ரூ. 50,000 பரிசு!

குவிஸ் போட்டி கூப்பன் - 1

1. 'தென்னக ....' எனக் குறிப்பிடப்படுகிறது கோயமுத்தூர். (கோடிட்ட இடத்தில் நிரப்ப வேண்டியது ஒரு பிரபல பிரிட்டிஷ் நகரின் பெயர்.)
2. பிரபல காவியக் காதலி ஒருத்தியின் பெயர் கொண்ட கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள அணை..................................
3. கோயமுத்தூருக்குக் கிழக்கே அமைந்துள்ளது பெரியார் பிறந்த ....மாவட்டம்.
4. படப்பிடிப்புகளுக்குப் பெயர் பெற்ற ஐந்தெழுத்து நகரம்..............................
5. சத்யமங்கலத்தில் உள்ளது பிரபல..............................அம்மன் கோவில்.
6. வெட்கிரைண்டரைக் கண்டுபிடித்த பெருமை..............................நகருக்கு உண்டு.



சிவகாமியின் சபதம்

இருபத்தைந்தாம் அத்தியாயம்

மகேந்திரர் சொன்னார்!

சிவகாமி விம்மி ஓய்வதற்குச் சிறிது நேரம் கொடுத்து விட்டுக் குண்டோதரன் "தாயே! தென் தமிழ்நாட்டில் 'ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப் பொறுக்கவில்லையா?' என்று ஒரு பழமொழி உண்டு. தாங்களும் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்கள். இத்தனை நாள் பொறுத்திருந்தவர்கள், காரிய சித்தியடையப் போகும் சமயத்தில் பொறுமையிழக்கலாமா?" என்றான்.

"குண்டோதரா! எனக்கா நீ பொறுமை உபதேசம் செய்கிறாய்? ஒன்பது வருஷ காலம் பகைவர்களின் நகரில் நிர்க்கதியாய், நிராதரவாய் உயிரை வைத்துக் கொண்டிருந்தவளுக்கா பொறுமையை உபதேசிக்கிறாய்?" என்று சிவகாமி தாங்காத மனக் கொதிப்புடன் கேட்டாள்.

"தாயே! தங்களுக்குப் பொறுமையை உபதேசிக்கவில்லை. என்னுடைய சக்தியின்மையைத்தான் அவ்விதம் வெளியிட்டேன். இராமாயணக் கதையில் இன்னொரு கட்டத்தைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமார், பிராட்டியைத் தன்னுடன் புறப்பட்டு வந்து விடும்படி கோரினார். இராமனிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகச் சொன்னார். ஆனால், சீதாதேவி அனுமாருடன் வருவதற்கு மறுத்து விட்டார்...!" என்றான் குண்டோதரன்.

"குண்டோதரா! சீதாதேவியின் உபமானத்தை எதற்காகச் சொல்லுகிறாய்! நான் சீதாதேவி அல்ல; மிதிலையை ஆண்ட ஜனக மகாராஜாவின் புத்திரியும் அல்ல. ஏழைச் சிற்பியின் மகள்...!"

"அம்மா! நானும் அனுமார் அல்ல, உரு

வத்திலே ஏதோ அந்த இராம தூதனை ஒத்திருக்கிறேன்! ஆனால், அவருடைய சக்தியிலே லட்சத்தில் ஒரு பங்கு கூட எனக்குக் கிடையாது. இந்த வாதாபி நகரத்தைத் தனியாகக் கொளுத்தி எரித்து விட்டுத் தங்களை அழைத்துப் போகும் சக்தி எனக்கு இல்லையே! என் செய்வேன்?"

"ஆ! மறுபடியும் என் பாழும் சபதத்தைக் குறிப்பிடுகிறாய். அதைத்தான் நான் கைவிட்டு விட்டேன் என்று சொன்னேனே? என்னை உன்னோடு அழைத்துப் போகும்படிதானே சொல்கிறேன்...?"

"அம்மா! இதே வீட்டில் இதே இடத்தில் நின்று, மாமல்லர் தம்முடன் வந்து விடும்படி தங்களை வருந்தி வருந்தி அழைத்தார். தாங்கள் பிடிவாதமாக மறுத்து விட்டீர்கள். 'என் சபதத்தை நிறைவேற்றி விட்டு என்னை அழைத்துப் போங்கள்' என்றீர்கள். அதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தேன். இப்போது மாமல்லர் சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். அம்மா! நாளை விஜயதசமியன்று கிளம்புவதற்கு நாள் பார்த்திருக்கிறது. எல்லாம் உத்தேசப்படி நடந்தால் சரியாக இன்னும் ஒரு மாதத்துக்குள் வாதாபி கோட்டையைப் பல்லவ சைனியம் சூழ்ந்து முற்றுகையிடும். தங்கள் கண் முன்னால் தங்களுடைய சபதம் நிறைவேறுவதைப் பார்ப்பீர்கள். அதைரியத்துக்கு இடங்கொடாமல் இன்னும் சிறிது காலம் பொறுமையாயிருங்கள்..!"

"குண்டோதரா! நான் சொல்வதை நீ புரிந்து கொள்ளவில்லை. என் மனத்தையும் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. அதைரியத்தினாலோ, அல்லது பொறுமை இழந்தோ நான் பேசவில்லை. எனக்காக இன்னொரு பயங்கர யுத்தம் நடப்பதைத் தடுக்க விரும்புகிறேன். என் வாழ்க்கையில் நான் அனுபவித்ததெல்லாம் போதாதா? அந்தச் சமயம் ஏதோ ஆத்திரமாயிருந்தது; அதனால் அப்படிச் சபதம் செய்து விட்டேன். இப்போது நினைத்துப் பார்த்தால் அது மூடத்தனம் என்று தோன்றுகிறது. யுத்தம் என்றால் என்னென்ன பயங்கரங்கள் நடக்கும்? எத்தனை பேர் சாவார்கள்? எத்தனை குற்றமற்ற ஜனங்கள் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள்? வெற்றி தோல்வியைப் பற்றித்தான் நிச்சயம் என்ன சொல்ல முடியும்? இந்தத் துரதிர்ஷ்டக்காரியின் மூடப் பிடிவாதத்துக்காக அம்மாதிரிக் கஷ்டங்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனாலேதான் என்னை உன்னோடு அழைத்து போகச் சொல்லுகிறேன்!" என்றாள் சிவகாமி.

இதற்கு என்ன மறுமொழி சொல்லுவது என்று தெரியாமல் குண்டோதரன் திகைத்து நின்றான். சிறிது நேரம் யோசித்து, "அம்மா! இனிமேல் தங்களுடைய சபதத்தைத் தாங்கள் மாற்றிக் கொண்டபோதிலும், மாமல்லர் வாதாபிப் படையெடுப்பைக் கைவிட முடியாது. மகேந்திர பல்லவர் மரணத் தறுவாயில் மாமல்லருக்கு இட்ட கட்டளையை அவர் நிறைவேற்றியே தீருவார்!" என்றதும், சிவகாமி, "ஆ! மகேந்திரர் என்ன கட்டளையிட்டார்?" என்றாள்.

"ஆயனச் சிற்பியின் மகள் செய்த சபதத்தை எப்படியாவது நிறைவேற்றியே தீர வேண்டும் என்று கட்டளையிட்டார்! வாதாபியைச் சுட்டு எரித்துச் சிவகாமி அம்மையைக் கொண்டு வந்தால்தான் பல்லவ குலத்துக்கு நேர்ந்த அவமானம் தீரும் என்று வற்புறுத்திக் கூறினார். அதற்காக இடைவிடாத பிரயத்தனம் செய்யும்படி மாமல்லரையும் மந்திரிமார்களையும் கேட்டுக் கொண்டார்!" என்று குண்டோதரன் கூறியதும், "ஆகா! சக்கரவர்த்திக்கு என் பேரில் அவ்வளவு கருணை இருந்ததா! அவரைப் பற்றி என்னவெல்லாம் நான் தவறாக எண்ணினேன்?" 'என்று கூறிச் சிவகாமி மறுபடியும் கலகலவென்று கண்ணீர் விட்டாள்.

பிறகு மகேந்திர பல்லவரின் மரணத்தைப் பற்றியும் இன்னும் காஞ்சியில் சென்ற ஒன்பது வருஷமாக நடந்த சம்பவங்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லும்படி கேட்-

அமரர் கல்கி

டாள்.

குண்டோதரன் எல்லாச் சம்பவங்களையும் பற்றிக் கூறினான். ஆனால், ஒரு சம்பவத்தைப் பற்றி மட்டும் அவன் பிரஸ்தாபிக்கவே இல்லை. அதைச் சொல்ல அவனுக்குத் துணிச்சல் ஏற்படவில்லை.

குண்டோதரன் விடை பெற்றுக் கிளம்ப வேண்டிய சமயம் வந்தபோது, சிவகாமி ஏக்கம் நிறைந்த குரலில், "அப்பனே! மாமல்லர் நிச்சயம் வருவாரா? அல்லது எனக்கு வீண் ஆசை காட்டுகிறாயா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக வருவார். அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவசியம் வந்தே தீருவார்!" என்றான் குண்டோதரன்.


"உண்மைதான்! பல்லவ குலத்தின் கௌரவந்தான் அவருக்குப் பெரிது. அதற்காகத்தான் இவ்வளவு காலம் கழித்து வருகிறார். என் பேரில் உள்ள அன்புக்காக வருவதாயிருந்தால், முன்னமே வந்து என்னை அழைத்துப் போயிருக்க மாட்டாரா?" என்றாள்.

குண்டோதரன் தன் மனத்திற்குள், "ஆ! ஸ்திரீகளைத் திருப்தி செய்வது மிகவும் கடினமான காரியம். இப்படி திருப்தி செய்ய முடியாத ஸ்திரீகளுக்காகச் சிலர் இத்தனை சிரமம் எடுத்துக் கொண்டு இப்படி உயிரை விடுகிறார்களே? என்ன பைத்தியக்காரத்தனம்?'' என்று எண்ணினான்.

பிறகு, ''அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காட்டிலும் தங்களுடைய அன்பே பெரிதென்று கருதி மாமல்லர் இங்கு ஒருநாள் மாறுவேடத்தில் வரவில்லையா? அவருடன் புறப்பட்டு வந்து விடும்படி தங்களை எவ்வளவோ மன்றாடி வேண்டிக் கொள்ளவில்லையா?" என்று வெளிப்படையாகக் கேட்டான்.

''ஆம், குண்டோதரா! அப்போது நான் செய்தது பெரிய தவறுதான். அந்தத் தவறுக்காக ஒன்பது வருஷம் என்னைத் தண்டித்தது போதும் என்று மாமல்லரிடம் சொல்லு! அவரை மீண்டும் ஒருமுறை பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்காகத்தான் இத்தனை நாள் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் சொல்லு!" என்றாள் சிவகாமி.

நல்லவேளையாக, அந்தப் பேதை தனக்கு இன்னும் எவ்வளவு கடூரமான தண்டனைகள் காத்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கவில்லை.



அறிந்திருந்தால் எந்தக் காரணத்துக்காகவேனும் உயிரை வைத்துக் கொண்டிருக்க உடன்பட்டிருக்கக் கூடுமா?

குண்டோதரன் கடைசியாகப் புறப்பட வேண்டிய சமயத்தில் தயங்கித் தயங்கி நின்றான். அவனைப் பார்த்தால் ஏதோ சொல்ல விரும்பியவன் போலவும், அதற்குத் துணிச்சல் வராமல் சங்கடப்படுவதாகவும் தோன்றியது.

சிவகாமி அவனைத் தைரியப்படுத்தி, "இன்னும் ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா? தயங்காமல் சொல்லு!" என்றாள்.

''தேவி வேறு ஒன்றுமில்லை. 'ஸ்திரீகளிடம் இரகசியம் தங்காது'



என்பதாக ஒரு வழக்கு உண்டு. மகாபாரதத்திலே கூட, அந்த மாதிரி ஒரு கதை இருக்கிறது. அம்மா! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வந்து போன விஷயமோ, மாமல்லர் படையெடுத்து வரும் விஷயமோ இங்கே பிரஸ்தாபம் ஆகக் கூடாது!''

சிவகாமியின் முகத்தில் சோகம் கலந்த புன்னகை அரும்பியது.

''குண்டோதரா! மாமல்லருக்கு இத்தனை நாளும் என்னால் ஏற்பட்ட சங்கடமெல்லாம் போதாதா? இந்த வஞ்சகப் பாதகர்களிடம் இன்னமும் அவரை நான் காட்டிக் கொடுப்பேனா? இங்கே எனக்குத் தெரிந்தவர்கள் நாகநந்தி பிக்ஷுவைத் தவிர யாரும் இல்லை. அவரும் அஜந்தாவுக்குப் போகிறார். ஆகையால் நீ கவலையில்லாமல் திரும்பிச் செல்!'' என்றாள் சிவகாமி.

பிறகு, ''குண்டோதரா! நீ உன்னை அனுமார் என்று சொல்லிக் கொண்டாய்.

அந்தப் பெயருக்குத் தகுதியாக நடந்து கொள். மாமல்லரை விட்டு ஒரு க்ஷணமும் பிரியாமல் இருந்து அவரைக் காப்பாற்று! இந்தப் பாவிகள் நெஞ்சிலே விஷம் உள்ளவர்கள். விஷம் தோய்ந்த கத்தி எறிந்து கொல்கிறவர்கள். ஐயோ! என்னுடைய மூடப் பிடிவாதத்தினால் அவருக்கு மறுபடியும் ஆபத்து வர வேண்டுமா?" என்றாள் சிவகாமி.

சிவகாமி ஏன் யுத்தத்தை விரும்பவில்லை என்பது அப்போதுதான் குண்டோதரனுக்குத் தெளிவாயிற்று. மாமல்லருக்குப் போர்க்களத்தில் ஏதாவது அபாயம் வரப் போகிறதோ என்று அவள் கவலைப்பட்டதுதான் காரணம் என்று தெரிந்து கொண்டான். சிவகாமி தேவியிடம் அவனுடைய பக்தியும் அபிமானமும் முன்னை விடப் பன்மடங்கு அதிகமாக வளர்ந்தன.

இருபத்து ஆறாம் அத்தியாயம்

நீலகேசி உதயம்!

குண்டோதரன் வந்துவிட்டுப் போனதிலிருந்து சிவகாமியின் சித்தக் கடலில் கொந்தளிப்பு அதிகமாயிற்று. மலை போன்று எண்ண அலைகள் எழுந்து விழுந்து நாற்புறமும் மோதிப் பாய்ந்து அல்லோலகல்லோலம் செய்தன.

பொழுது போவது மிகவும் சிரமமாகி, ஒவ்வொரு கணமும் ஒரு ம்டிவில்லாத யுகமாகத் தோன்றியது.

குண்டோதரன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்தாள். அவனிடம் நாம் உசிதமான முறையில் பேசினோமோ இல்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி தோன்றியது. மாமல்லரிடம் போய் அவன் என்ன சொல்கிறானோ என்னவோ என்ற கவலையும் அடிக்கடி ஏற்பட்டது.

மாமல்லர் வரப் போவது பற்றிய இரகசியத்தை வெளியிட்டு விட வேண்டாம் என்று குண்டோதரன் தனக்கு எச்சரிக்கை செய்ததைப் பற்றி நினைத்துக் கொண்ட போது மட்டும் சிவகாமியின் சோகம் குடி கொண்ட வதனத்தில் புன்னகை தோன்றிற்று.

ஆயினும், அந்த எச்சரிக்கை எவ்வளவு அவசியமானது என்பது வெகு சீக்கிரத்திலே அவளுக்குத் தெரிய வந்தது.

குண்டோதரன் வந்து சென்ற மூன்றாம் நாள் வாதாபி நகரம் அளவில்லாத அல்லோலகல்லோலத்துக்கு உள்ளாகியிருந்தது. அன்றைய தினம் புலிகேசிச் சக்கரவர்த்தி அஜந்தா கலை விழாவுக்காகப் பயணமாகிறார் என்பதும், பக்கத்திலுள்ள இராஜவீதி வழியாக அவருடைய ஊர்வலம் போகும் என்பதும் சிவகாமிக்குத் தெரிந்திருந்தது. தன் வீட்டின் பலகணியின் வழியாகவே மேற்படி ஊர்வலக் காட்சியைக் காணலாம் என்று அவள் அறிந்திருந்தாள்.

கடைசியாக, பிற்பகலில் மூன்றாவது ஜாமத்தில் சக்கரவர்த்தியின் பிரயாண ஊர்வலம் வந்தது.

பட்டத்து யானை மீது புலிகேசிச் சக்கரவர்த்தி கம்பீரமாக வீற்றிருந்தார். அவருக்குப் பின்னால் சிவிகைகளில் நாகநந்தி பிக்ஷுவும் சீன யாத்திரிகரும் சென்றார்கள்.

அழகிய தங்க ரதத்தில் சக்கரவர்த்தியின் இளம் புதல்வர்கள் மூவரும் அமர்ந்திருந்தார்கள்.

இன்னும், சக்கரவர்த்தியின் முன்னாலும் பின்னாலும் சாம்ராஜ்யத்தின் பிரதான அமாத்தியர்கள், மந்திரிமார்கள், சாமந்தர்கள், சேனா நாயகர்கள் முதலியோர் பலவித வாகனங்களில் பெருமிதத்துடன் அமர்ந்து சென்றார்கள்.

பொது ஜனங்களின் கோலாகல கோஷங்களோடு வாத்திய முழக்கங்களும் சேர்ந்து காது செவிடுபடும்படிச் செய்தன.

இதையெல்லாம் பார்த்த சிவகாமிக்குக் காஞ்சியில் மகேந்திர பல்லவர் மாமல்லபுரத்துக்குக் கலை விழாவிற்கு கிளம்பும் காட்சி நினைவுக்கு வந்தது. ஆகா! முன்னொரு காலத்தில் இந்தப் புலிகேசி எத்தகைய கலை உணர்வே இல்லாத மூர்க்கனாயிருந்தான்! இப்போது எப்பேர்ப்பட்ட

மாறுதல் ஏற்பட்டு விட்டது? இதற்கெல்லாம் என்ன காரணம்? - காஞ்சியைப் பார்த்து விட்டு வந்ததுதானோ?

அந்த ஊர்வலக் காட்சியைப் பற்றி பிறகு நினைத்தபோதெல்லாம் சிவகாமிக்கு எரிச்சல் உண்டாயிற்று. "இந்தப் புலிகேசியின் ஆடம்பரமும் இறுமாப்பும் கூடிய சீக்கிரத்தில் அடங்கப் போகிறதல்லவா?' என்பதை எண்ணியபோது ஓரளவு ஆறுதல் உண்டாயிற்று.

இவர்கள் அஜந்தாவிலிருந்து திரும்பி வருவதற்குள்ளே மாமல்லர் இங்கு வந்து விடக் கூடுமல்லவா? அதை அறிந்தவுடனே இவர்களுக்கெல்லாம் எத்தகைய திகில் உண்டாகும்!

"யுத்தம் வேண்டாம்" என்று தான் குண்டோதரனிடம் சொன்னது தவறு என்று சிவகாமிக்கு அப்போது தோன்றியது. அவளுடைய ஆத்திரத்தை அதிகப்படுத்த இன்னொரு காரணமும் சேர்ந்தது.

பட்டத்து யானைக்குப் பின்னால் சிவிகையில் சென்ற பிக்ஷு சிவகாமி இருந்த வீட்டின் பக்கம் ஒருகணம் முகத்தைத் திருப்பிப் பார்த்ததாகத் தோன்றியது. ஆனாலும், நாகநந்தி பிரயாணம் கிளம்புவதற்கு முன்னால் தன்னிடம் மறுபடியும் வந்து விடைபெறுவார் என்று அவள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. "ஆ! இந்தக் கள்ளப் பிக்ஷுவுக்கு இவ்வளவு அகங்காரமா?" என்று எண்ணி ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டிருந்தாள்.

எனவே, அன்று மாலை இருட்டுகிற சமயத்தில் நாகநந்தி அவள் வீட்டு வாசலில் குதிரை மீது வந்து இறங்கி, உள்ளேயும் பிரவேசித்து வந்த போது சிவகாமி எல்லையற்ற வியப்பு அடைந்தவளாய், "சுவாமி! இதென்ன? தாங்கள் அஜந்தா மார்க்கத்தில் போய்க் கொண்டிருப்பதாக அல்லவா நினைத்தேன்? போகவில்லையா என்ன?" என்றாள்.

"கட்டாயம் போகிறேன், சிவகாமி! அஜந்தாவில் எனக்கு மிகவும் முக்கியமான காரியம் இருக்கிறது. அதில் உனக்குச் சம்பந்தம் உண்டு. அதைப் பற்றி உன்னிடம் சொல்லி விட்டுப் போக வேண்டும் என்று தான் திரும்பி அவசரமாக வந்தேன். இன்றிரவே சக்கரவர்த்தி தங்கியிருக்கும் இடம் போய்ச் சேர்ந்து விடுவேன்!" என்று சொல்லிவிட்டு, சிவகாமிக்குப் பேச இடங் கொடாமல், "இன்று பிற்பகலில் அந்தப் பக்கம் போன ஊர்வலத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார் நாகநந்தி பிக்ஷு.

"ஓ! பார்த்தேன். மகேந்திர பல்லவர் கலைத் திருநாளுக்காகக் காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் புறப்படும் காட்சி ஞாபகம் வந்தது. ஏதேது? புலிகேசிச் சக்கரவர்த்தி மகேந்திர பல்லவரைக் கூடத் தோற்கடித்து விடுவார் போலிருக்கிறதே?" என்றாள் சிவகாமி.

"நிச்சயமாகத் தோற்கடிப்பார்; சந்தேகமில்லை! வாதாபிச் சக்கரவர்த்தி இப்போது பழைய இரத்தவெறி கொண்ட புலிகேசி அல்ல. கலை மோகமும் ரஸிகத்தன்மையும் கொண்ட புதிய புலிகேசி!" என்றார் நாகநந்தி.

"அப்படியானால் அஜந்தாவிலும் கலை விழா கோலாகலமாய்த்தானிருக்கும்" என்றாள் சிவகாமி.

"அதிலும் சந்தேகமில்லை. அஜந்தாவின் புத்த பிக்ஷுக்கள் சக்கரவர்த்தியை ஒப்பற்ற முறையில் வரவேற்று உபசரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வைபவத்தை முன்னிட்டு புகழ் பெற்ற நாலந்தாவிலிருந்தும் ஸ்ரீபர்வதத்திலிருந்தும் இன்னும் பல புத்த பீடங்களிலிருந்தும் ஆசாரிய புருஷர்கள் பலர் வந்திருக்கிறார்களாம். உனக்குத் தெரியுமோ, இல்லையோ! வாதாபிச் சக்கரவர்த்தி இளம் பிராயத்தில் அடைக்கலம் தந்து காப்பாற்றியது அஜந்தா சங்கிராமம்தான். ஆயினும் வெகு காலம் வரையில் அஜந்தா சங்கிராமத்துக்குச் சக்கரவர்த்தி எந்தவித உதவியும் செய்யவில்லை. அதற்கு ஜைன முனிவர்கள் இடம் கொடுக்கவில்லை. இராஜாங்கத்திலிருந்து செய்யும் உதவியெல்லாம் சமண மடங்களுக்கும் சமணக் கோயில்களுக்கும்தான் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். ஆனால், இப்போது சக்கரவர்த்தியின் மனம் மாறி விட்டது. சமணர், பௌத்தர், சைவர், வைஷ்ணவர், சாக்தர் ஆகிய எந்த மதத்தினரானாலும், சிற்ப - சித்திரக் கலைகளை வளர்ப்பவர்களுக்கெல்லாம் இராஜாங்கத்திலிருந்து மானியங்களைக் கொடுத்து வருகிறார். இது காரணமாக

இப்போது இந்தச் சளுக்க சாம்ராஜ்யம் இந்தியாவிலேயே கலை வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. கன்யாகுப்ஜத்தையும் காஞ்சியையும் வாதாபி தோற்கடித்துவிட்டது!'' என்று நாகநந்தி பெருமிதத்தோடு கூறியதைச் சிவகாமி உண்மையான ஆவலோடு கேட்டுக் கொண்டு வந்தாள்.

''சிவகாமி! வாதாபிச் சக்கரவர்த்தியின் இந்த மன மாறுதலுக்கு யார் காரணம் என்று உனக்குத் தெரியுமா?'' என்று நாகநந்தி கேட்டபோது, ''சந்தேகம் என்ன சுவாமி! சகல கலைகளிலும் வல்ல மகா ரஸிகரான நாகநந்தியடிகள்தான்!'' என்று சிவகாமி பளிச்சென்று விடையளித்தாள்.

நாகநந்தியின் முகம் ஒன்பது வருஷத்துக்கு முன்பு நாம் பார்த்தபோதிருந்ததைக் காட்டிலும் இப்போது களை பொருந்தி விளங்கிற்று. முன்னே அந்த முகத்தில் நாம் கண்ட கொடூரம் இப்போது கிடையாது. சிவகாமியின் மறுமொழி அவருடைய முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கி, மேலும் களை பொருந்தியதாகச் செய்தது.

அத்தகைய முகமலர்ச்சியோடு கனிவு ததும்பிக் காந்த சக்தி வீசிய கண்களினால் சிவகாமியை அவர் நோக்கி, ''கலைவாணி! நீ கூறியது உண்மை. இரத்த தாகமும் யுத்த வெறியும் கொண்டிருந்த புலிகேசியைக் கலைமோகம் கொண்ட ரஸிகனாகச் செய்தது நான்தான். ஆனால், அதற்கு முன்னால், என்னை அத்தகைய கலைப் பித்தனாகப் பண்ணியது யார்? உன்னால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார் நாகநந்தியடிகள்.

பிக்ஷு குறிப்பிடுவது தன்னைத்தான் என்று சிவகாமி மனத்திற்குள் எண்ணிக் கொண்டாள். ஆயினும், வெளிப்படையாக "எனக்கு எப்படித் தெரியும் சுவாமி?" என்று கூறினாள்.

''ஆம், உனக்குத் தெரியாதுதான். இதுவரையில் உனக்கு நான் சொல்லவும் இல்லை. அஜந்தா





சங்கிராமத்துச் சுவர்களிலே எத்தனையோ அற்புதச் சித்திரங்கள் - அழியா வர்ணங்களில் தீட்டிய தெய்வீகச் சித்திரங்கள் - இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமல்லவா? அந்தச் சித்திரங்களிலே பரத நாட்டியம் ஆடும் பெண்ணின் சித்திரம் ஒன்றும் இருக்கிறது. அந்தச் சித்திரந்தான் முதன் முதலில் எனக்குக் கலை மோகத்தை உண்டாக்கிற்று. சிவகாமி! அந்த அற்புதச் சித்திரத்தை என்றைக்காவது ஒருநாள் நீ அவசியம் பார்க்க வேண்டும்...''

"வீண் ஆசை எதற்காக? அஜந்தா அதிசயங்களைப் பார்க்கும் பாக்கியம் இந்த ஜன்மத்தில் எனக்குக் கிட்டப் போவதில்லை!'' என்றாள் சிவகாமி.

''அப்படிச் சொல்லாதே! இந்தத் தடவை நீ எங்களுடன் வராததில் எனக்கு ஒருவிதத்தில் திருப்திதான். ஏனெனில் இந்தத் தடவை நீ எங்களுடன் வந்தாயானால், எனக்கும் மன நிம்மதியிராது; உனக்கும் மன நிம்மதியிராது. ஆனால் காலம் எப்போதும் இப்படியே இருந்து விடாது; சீக்கிரத்தில் மாறியே தீரும்.''

நாகநந்தி இவ்விதம் சொன்னபோது, சிவகாமியின் நெஞ்சில் 'சுரீர்' என்றது. நாகநந்தியை அவள் கூர்ந்து நோக்கி, ''காலம் எப்படி மாறும்?'' என்று கேட்டாள்.

"நீ இந்தக் கூண்டிலேயிருந்து விடுதலையடைந்து வானவெளியில் உல்லாசமாகப் பாடிக் கொண்டு சஞ்சரிக்கும் காலம் சீக்கிரத்தில் வரலாம்!''

"ஒருநாளும் வரப் போவதில்லை'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி.

"அப்படியானல், உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையே உனக்கு இல்லையா?'' என்று நாகநந்தி கேட்டார்.

சிவகாமி பல்லைக் கடித்துச் சமாளித்துக் கொண்டு, "இல்லை, அந்த நம்பிக்கையை நான் இழந்து எத்தனையோ நாளாயிற்று!" என்றாள். ஆனால், அவளுடைய மனத்தில் பெரும் பீதியும் கலக்கமும் குடி கொண்டன. இந்த வஞ்சகப் பிக்ஷு ஏதாவது சந்தேகிக்கிறாரா? ஒருவேளை குண்டோதரன் இவரிடம் சிக்கிக் கொண்டிருப்பானோ?

"சிவகாமி! உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை நீ இழந்துவிட்டாய்; ஆனால், சபதம் நிறைவேறாமல் நீ இந்த ஊரை விட்டுக் கிளம்பவும் மாட்டாய். அப்படித்தானே?''

"ஆம், சுவாமி! அப்படித்தான்!'' என்று சிவகாமி தயக்கமின்றி மறுமொழி கூறினாள். அப்போதுதான் குண்டோதரனுடைய எச்சரிக்கையை அவள் நன்றியுடன் நினைத்துக் கொண்டாள்.

''ஆகா! உன்னை இந்தக் கதிக்கு உள்ளாக்க ஒருநாளும் நான் உடன்படேன், சிவகாமி! நேற்றுச் சீனப் பெரியாரிடம் சொன்னது போலச் செய்ய வேண்டியதுதான். மாமல்லர் வந்து உன் சபதத்தை நிறைவேற்றி வைக்காவிடில், நானே நிறைவேற்றி வைக்கிறேன். இந்த நகருக்கு என் கையாலேயே நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுகிறேன்!''

''ஆ! இது என்ன பேச்சு? இந்தப் பைத்தியக்காரியின் பிடிவாதத்துக்காகத் தாங்கள் ஏன் அத்தகைய கொடிய காரியத்தைச் செய்ய வேண்டும்? வேண்டவே வேண்டாம்.''

"அப்படியானல் நீயாவது உன்னுடைய அர்த்தமற்ற சபதத்தை விட்டு விட வேண்டும்.''

பேச்சை மாற்றத் தீர்மானித்த சிவகாமி, ''சுவாமி! என்னைப் பற்றி இவ்வளவு பேசியது போதும். தங்களைப் பற்றிச் சொல்லுங்கள்; அஜந்தாவைப் பற்றிப் பேசுங்கள்!'' என்றாள்.

''ஆம்! முக்கியமாக என்னைப் பற்றிப் பேசுவதற்குத்தான் வந்தேன். அஜந்தாவில் நான் புனர்ஜென்மம் எடுக்கப் போகிறேன். திரும்பி வரும்போது காவி உடை தரித்த புத்த பிக்ஷுவாக வர மாட்டேன். பட்டுப் பீதாம்பரம் அணிந்த நீலகேசி மகாராஜாவாக வருவேன்!'' என்று நாகநந்தி கூறியதும், சிவகாமி வியப்புடனே அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

(தொடரும்)



"உன்ற நொள்ளிக் கண்ணுக்கு நல்லது!"

காய்கறிக் கடை.

"பெரியம்மணி வர்றாங்கோ. மொளைக் கீரையை எடுத்துக் கொடப்பா" - கடைக்காரர் பையனிடம் உத்தரவிடுகிறார்.

லொள்ளுக்கார பையனோ, கீரைக்கட்டுக்குப் பதிலாக கொத்துமல்லிக் கட்டை எடுத்துக் கொடுக்கிறான். ஆனால் அம்மணிக்கு வயசானால் என்ன? செம பாட்டியாச்சே! முகர்ந்து பார்த்து கண்டுபிடித்து விடுகிறார்.

''மொதல்லே கீரையை நீ ஆக்கித் தின்னு! அப்போதான் உன்ற நொள்ளிக் கண்ணுக்கு நல்லது!" - நக்கலாய் முளைக்கீரையை எடுத்துக் கொண்டு நகர்கிறார்.

"ஜோலியத்தக் கேணப்பயலுக"– போகிற போக்கில் ஒரு கமெண்ட் வேறு!

கடை முதலாளி, தொழிலாளி முகங்களில் அரை லிட்டர் அசடு!

கோவை மக்களின் குசும்பு, நக்கல், நையாண்டி எதுவாயினும் அவர்களது எல்லை இதுதான். கொங்கு மண்டலத்தில் அதிகபட்சமாய்த் திட்டும் கொச்சை வார்த்தை, "போடா கேணப் பயலே! கேணச் சிறுக்கி!" இவ்வளவுதான். தவிர நக்கலடிக்கும் எதிராளியை பார்த்து, ''ரொம்ப லொள்ளாக்கும்!'' ''உன்ற லொள் ளுக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்லே" என்று மென்மையாய் எதிர்ப்பு தெரிவிப்ப தோடு நக்கல் முடிந்து விடும்.

மற்றபடி ஆண்களை மரியாதையோடு, "அண்ணன், தம்பி" என்றும், பெண்களை "தாயி, அம்மணி" என்றும் அன்போடும் அழைத்துப் பழக்கப்பட்டவர்கள்!

விருந்தோம்பலில் கொங்கு மக்களை அடித்துக் கொள்ள முடியாது. வீட்டுக்கு வருபவர்களிடம், "தண்ணீர் குடிக்கிறீங்களா?" என்று கேட்டுக் கொண்டிருக்காமல் முதலில் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பார்கள். வந்தவர் விருந்தினர் அல்லாதவர் என்றாலும், "இருந்து சாப்பிட்டுப் போட்டுப் போங்கோ" என்பது எங்கும் இல்லாத வழக்கு.

"இங்கு பண்டிகை வருதா?" என்று கேட்பதற்குப் பதில் "நோம்பி (நோன்பு) வருதுங்களா?" என்று கேட்பர். இது இங்கே புதிதாக வருபவர்களுக்குப் புரியாது. சொந்தங்களை "உரம்பரை (உறவுமுறை) வூட்டுக்கு வந்திருக்குதா?" என்று கேட்பர்.

ஆமாங்கோ! நீங்க எப்போ கோயமுத்தூருக்கு வாரீங்கோ!



— ஆ. ஸ்டெல்லா மேரி,
கோவை - 44.



ஸ்டெல்லா மேரி குடும்பத்துடன்...

'தாலுகா ஆபீசில் ஏதாவது வேலை கிடைக்குமா?'' என்று தேடிக் கொண்டு போனேன். தாலுகா ஆபீசுக்குள் நான் பாட்டுக்கு நுழைந்து சுற்று முற்றும் பார்த்தேன். ஒரு நாற்காலி காலியாக இருந்தது. நான் அதில் போய் உட்கார்ந்து கொண்டேன். 'புதுசா இருக்கானே யார் இவன்? இவனுக்கு இங்கே என்ன வேலை? புதுசாய் வேலைக்குச் சேர்ந்திருக்கிறானா' என்றெல்லாம் அங்கிருந்த யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

கொஞ்ச நேரம் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்த பிறகு, டைப் செய்ய ஆரம்பித்தேன்.

''ஹலோ! மிஸ்டர்!' என்று ஒரு பெண் குரல் கேட்டு, நிமிர்ந்து பார்த்தேன். பார்க்க லட்சணமாக ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையில் சில பேப்பர்கள்.



நாகேஷ்

• படம்: யோகா

அவற்றை என்னிடம் நீட்டி, ''இதை டைப் செய்து கொடுங்கள்'' என்றாள் சற்று அதிகாரமான குரலில். என்னை அதிகாரம் செய்தால்தான் எனக்குப் பிடிக்காதே!

நான், பட்டென்று ''ஐயம் சாரி! நான் கொஞ்சம் பிஸி!'' என்றேன்.

''இது ரொம்ப அவசரம்! இதை டைப் செய்து தர முடியுமா? முடியாதா?''

''முடியாது!''

''நான் யார் தெரியுமா?''

''நீங்கள் யாராக இருந்தாலும் சரி! எனக்குக் கவலை இல்லை!''

அந்தப் பெண் கோபத்துடன் கிடுகிடுவென்று போய்விட்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் கண்ணியமான தோற்றம் கொண்ட ஒருவர் என்னை நோக்கி வந்தார். கூடவே என்னை மிரட்டிய பெண்.

''நான் யார் தெரியுமா? தாசில்தார்! என் பெண் ஏதோ டைப் செய்வதற்கு உன்னிடம் கொடுத்தாளாம். அதை 'டைப் செய்து தர முடியாது' என்று திமிருடன் பதில் சொன்னாயாமே!'' என்றார் அதிகாரமான தோரணையில்.

''உங்க பெண் டைப் செய்யச் சொன்னது ஏதோ அவங்களோட பர்சனல் மேட்டர் போலிருக்கு. அதை நான் ஏன் டைப் அடித்துத் தர வேண்டும்? அதனால்தான் மறுத்தேன்'' என்றேன்.

''உனக்கு ரொம்பத் திமிர்! உன் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறேன் பார்!'' என்றார்.


''நீங்கள் என்ன என் மீது நடவடிக்கை எடுப்பது?'' என்று கேட்டுவிட்டு, படபடவென்று டைப்ரைட்டரில் ஒரு காகிதத்தை வைத்து, நாலு வரிக் கடிதம் அடித்து,

சர்ரென்று உருவி, அவரிடம் நீட்டினேன்.

நான் கொடுத்தது என் ராஜினாமா கடிதம். தாசில்தார் ஆபிசில் எனக்கு வேலையே கிடையாது. ஆனால், நான் ஒரு ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தவுடன், தாசில்தார் உட்பட எல்லாரும் குழம்பிப் போனார்கள்.

ஆக, இல்லாத வேலைக்கு, ராஜினாமா கொடுத்த விசித்திரமான ஆசாமி நான் ஒருத்தனாகத்தான் இருப்பேன்!

என் அக்காவின் கணவருடைய சகோதரர் ஹைதராபாதில் நல்ல செல்வாக்குடன் இருந்தார்.



"பிடியுங்க ராஜினாமா!"

எனவே, நான் ஹைதராபாதுக்குப் போனேன். என் மீது பரிதாபப்பட்டு, எப்படியும் ஏதாவது ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்று அவர் சொன்னார். என் வயிற்றில் அவரது வார்த்தைகள் பால் வார்த்தன.

யாரிடமோ சொல்லி, ரேடியோக்கள் விற்பனை செய்கிற கடையில் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். வருகிற வாடிக்கையாளர்களுக்கு ரேடியோக்களைக் காட்ட வேண்டும். விலையைச் சொல்ல வேண்டும். உடனே, அவர்கள் விலையைக் கொஞ்சமாவது குறைக்க வேண்டும் என்பார்கள். நான், ''விற்பனை வரி போடாமல், பில் இல்லாமல் வாங்கிக் கொள்ள சம்மதமா?'' என்பேன். வரி இல்லாமல் சற்றே குறைந்த விலையில் ரேடியோவை விற்பனை செய்வேன்.

கஸ்டமர்கள் பலர் பணம் கொடுப்பதற்காக, பாக்கெட்டுக்குள் கையை விட்டு வெளியே எடுக்கும்போது, கையில் ஏராளமான பணம் இருக்கும். 'அட! இவர்களிடம் இவ்வளவு பணம் இருக்கிறதே! நமக்கு நாலு காசுக்கு நாய்ப் பிழைப்பாக இருக்கிறதே!' என்ற வருத்தம் ஏற்படும்.

கொஞ்ச நாள் ஆனது. ரேடியோ வியாபாரம் எனக்குப் போரடித்துவிட்டது. அந்த வேலையை விட்டு விட்டேன். இப்படியே சிறு சிறு வேலைகள் செய்தேன். எதிலும் நிரந்தரமில்லை.

யாரோ ஒருவர் வீட்டில் தங்கிச் சாப்பிட்டாலும், ஒவ்வொரு நாளும் சாப்பிடத் தட்டின் முன் உட்கார்ந்தால், என் அப்பா என் நினைவுக்கு வரத் தவற மாட்டார். இன்றைக்கும்கூட சாப்பிடுவதற்காக ஒரு பிடி எடுத்தால், என் அப்பாவின் நினைவு வருகிறது.

தட்டின் முன்னே நாம் உட்காரும்போது தட்டில் போடப்படும் சாதத்தில் ஒவ்வொரு பருக்கையும், நம்மைப் பார்த்துக் கேட்பது போல் தோன்றும். 'உனக்கு இந்தச் சாப்பாட்டைச் சாப்பிடுவதற்குத் தகுதி இருக்கிறதா? இந்த சாப்பாட்டை சன்மானமாகப் பெறுகிற அளவுக்கு, உருப்படியாக ஏதாவது இன்றைய தினம் நீ செய்திருக்கிறாயா?' என்பதே அந்தக் கேள்வி.

இந்தக் கேள்வியின் உறுத்தல்தான் என்னை ஒரு மில்லில் தினக்கூலியாக வேலை செய்ய வைத்தது. அந்த அனுபவம் எப்படி இருந்தது?

(தொடர்ந்து சிரிப்பேன்)

நீங்கள் கேட்டவை- தராசு

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? 'வீட்டை மெழுக பசுஞ் சாணியைத்தான் பயன் படுத்துகிறோமேயொழிய பன்றியின் கழிவையா பயன் படுத்துகிறோம்?' என்று பசுவின் புனிதத்துக்கு விளக்கம் தந்து வாதாடுகிறாரே ராம கோபாலன்...?

! வதைக்கப்படும்போது எல்லா பிராணிகளுக்கும் ஒரே வலிதான் ஏற்படும். நிற்க, இறைவன் வராகமாகவும் அவதாரமெடுத்தார் என்பதை ராம கோபாலன் மறந்தாலும் நாம் மறக்கலாமா....?



• மறந்த அவதாரம் !



• ஆலோசனை ஆசார்யர்!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? தராசுக்கு நியாயமாகப் படுவதெல்லாம் சோவுக்கு அநியாயமாகவும் சோவுக்கு நியாயமாகப்படுவதெல்லாம் தராசுக்கு அநியாயமாகவும் படுவது ஏன்...?

! தராசு தராசாகவும் சோ சோவாகவும் இருப்பதால்தான்.


● கே. பலராமன், கோவை - 11.

? 'நரேந்திரமோடி ஒரு 'மிலோசோவிக்,

• அவர் வருவாரா...!




கௌரவ ரேஷன் கார்டை என்ன செய்ய..?



• மரியாதைக்குரிய எதிரணி!



• மாடும் நாடும்!



• அயல்நாட்டு அவமானம்!

நவீன ஹிட்லர்' என்று லண்டன் 'தி கார்டியன்' பத்திரிகை கூறியுள்ளதே...?

! லண்டன் பயணத்தில் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்துத் திரும்பியிருக்கிறார் மோடி. அது குறித்து அவருக்கு எந்தக் கவலையும் இல்லை. அவருக்கு இங்கு வோட்டுதான் குறி. ஓர் இந்தியத் தலைவருக்கு இப்படி இழிபெயர் வந்ததே என்று நமக்குத் தான் அவமானமாய் இருக்கிறது.

● **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி.**

? கோலார் தங்கவயல் ஊழியர்களுக்குத் தமிழக முதல்வர், பிரதமரிடம் நிவாரணம் கோரியுள்ளாரே...?

! இதே தமிழக முதல்வர்தான் சாலைப் பணியாளர்கள் உட்பட நாற்பதாயிரம் கடைநிலை ஊழியர்களைப் பணி நீக்கம் செய்திருக்கிறார்.

● **தேவந்தி துரைராஜ், திருவண்ணாமலை.**

? காஞ்சி சங்கராச்சார்யாரின் கருத்துகளை முதல்வர் ஏற்றுக் கொள்வதில் தவறு என்ன இருக்கிறது...?

! தனி நபர் விஷயங்களில் கருத்து சொல்வதோ கேட்பதோ பிரச்னை விளைவிக்காது. சிரணி அரங்கம் தகர்ப்பு தொடங்கி அயோத்தி சிக்கல் வரை அனைத்திற்கும் மடாதிபதிகள் கருத்துச் சொல்வதும் அவற்றை அரசியல்வாதிகள் சாதகமாக்கிக் கொள்வதும் அபாயகரமானது. மதம் – உணர்ச்சி சார்ந்தது. அரசியல் - அறிவுத் தளத்திலிருந்து இயங்க வேண்டியது. இரண்டையும் குழப்புவது ஆபத்து.

● **வீ. உதயக்குமாரன், வீரன்வயல்.** ●

? மதுபான வகைகளிலும் பூச்சிக் கொல்லி மருந்து கலந்திருக்குமா...?

! இருக்கலாம்... அதெல்லாம் கலவாமலே போதுமான அளவு நஞ்சு அதிலே உண்டு!

● **ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**

? 'நாட்டுக்காக ஒன்றுபட்டிருக்கிறோம்; மாட்டுக்காக வேறுபடமாட்டோம் என்று வீரவசனம் பேசுகிறாரே இல. கணேசன்?

! மாட்டுக்காக வேறுபடாமல் பின் வாங்கிவிட்டு, மந்திருக்காக நாட்டையே காவு கொடுக்காமலிருந்தால் சரிதான்!

● **ஆர். கோபாலன், சென்னை - 33.** ❐

? அ.இ.அ.தி.மு.க. திராவிட சித்தாந்தத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாகக் கலைஞர் அடிக்கடி புலம்புகிறார். தெரியாமல் தான் கேட்கிறேன். திராவிட சித்தாந்தம் என்பது ஹிந்து கடவுளர்களை மட்டும் இழிப்பதும் பழிப்பதும், ஒரு சாராரை மட்டும் கிண்டலடித்து நோகப் பேசுவதும்தானா...?

! பெரியாரால் அறிமுகப்படுத்தப்பட்டு அண்ணாவால் தெளிவாக்கப்பட்ட

திராவிட சித்தாந்தம் என்பது நாலு வரிகளில் விளக்கிச் சொல்லக் கூடிய விஷயம் அல்ல. மூட நம்பிக்கைகளை ஒழிப்பது என்பது அதில் ஓர் அம்சம் மட்டுமே... அந்த அம்சத்தை வலியுறுத்தப் போக, பல அத்துமீறல்கள் நடைபெற்றன. இந்த அத்துமீறல்களின் பலனை இன்று தி.மு.க. அறுவடை செய்து கொண்டுதான் இருக்கிறது. அ.தி.மு.க. திராவிட சித்தாந்தத்தை ஒதுக்கி விட்டுச் செயல்படுகிறது. பெயரில் மட்டும் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கிறது.



• தமிழும் தனயனும்!

● கே.எம். ஸ்வீட்முருகன், கரடிகொல்லப்பட்டி.

? மனைவிக்கு நாம் தரும் மரியாதையை விட மனைவி நமக்குத் தரும் மரியாதை தானே உயர்வானது...?

! மரியாதை என்பது பரஸ்பரம் பரிமாற்றமாகும்போதுதான் அர்த்தமும் முழுமையும் பெறுகிறது. அல்லாதபோது அது வெறும் ஃபார்மாலிட்டி!

● த. பரதன், திருவாரூர்.

? கௌரவ ரேஷன் கார்டை வைத்துக் கொண்டு என்ன செய்வது...?

! கௌரவ டாக்டர் பட்டத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யலாமோ அதைச் செய்யலாம்; ஃபிரேம் போட்டு மாட்டலாம்!

● பொன்விழி, அன்னூர்.

? இனி கோக், பெப்சியை தராக குடிப்பீரா...?

! கோலா டேஸ்டை என்றைக்குமே நான் விரும்பியதில்லை. வாயு கலந்த மற்ற பானங்களும் உடல் நலம் கெடுப்பவை என்பதை இப்போது புரிந்து கொண்டிருக்கிறேன். இனி எப்பவுமே இளநீர் அல்லது தண்ணீர் (வெந்நீர்)தான்!

● உமரி பொ. கணேசன், மும்பை - 37.

? தற்போதைய திரைப்படங்களில் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் கலந்து, படத்தின் தரத்தையே கெடுத்துவிடுகிறார்களே...?

! எனக்கென்னவோ அப்படித் தெரியவில்லை. 'காதல் கொண்டேன்' படத்தில் ('தேவதையைக் கண்டேன்') ஊறுகாய் போல தொட்டுக் கொண்டாலும், 'ஹல்க்' ஹாலிவுட் படத்தில் முழுச் சாப்பாடாகவே இருந்த போதும், கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸின் சுவைக்காகவே படம் பார்க்க என்னைப் போல் பலர் தயார்.

● ஜி. ஜெயராகவன், கூந்தலூர்.

? தமிழக அரசின் நிதி நிலைமை இப்போது எப்படி இருக்கிறது....?

! Penny wise, pound foolish!

● உமா, சென்னை - 28.

? 'பாய்ஸி'ல் பின்லேடன் மாதிரி வர்றாராமே?

! படம் பார்க்க புஷ் வந்தாலும் வருவாரோ?

● டி. பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்ள எது முதலில் அவசியம்...?

! அதுதான் 'துணிச்சலுடன்' என்று நீங்களே சொல்லிவிட்டீர்களே!

● இ. கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி.

? 'ஜெ'யிஸம் பற்றிச் சொல்லியாகிவிட்டது; கலைஞரிஸம் என்பது என்ன...?

! 'தமிழர் நலன்; தமிழின் நலன்' இரண்டையும் கருதுவது; குடும்பத் தகராறுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பது!

● எஸ்.ஆர்.ஸ்வாமி, திருநெல்வேலி-11.

? நம் முதல்வருக்கு, நேருக்கு நேர் அறிவுரை சொல்லும் தகுதி யாருக்காவது உண்டா?


! பல பேருக்கு இருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் அவதூறு வழக்குப் போடாமல் இருந்தால் இன்னும் பல பேருக்குச் செயல்படும். அறிவுரை என்பது நட்பின் அடிப்படையில் வழங்கப்படுவது என்பதைப் புரிந்து கொள்ளாதபோதுதான் சிக்கல். விரோதத்தின் அடிப்படையில் விதண்டாவாதம் பிறக்கும்.

□ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

ஆர். கோபாலன்,
34, கிரி தெரு,
சென்னை - 33.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:

வி. உதயக்குமாரன்,
ஜாம்புவானோடை அஞ்சல்,
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 614 738.
வீரன்வயல்.







வெள்ளாட்டங்குட்டி

வாழைப் பழத் தோல் போல இருபுறமும் வழிந்து தொங்கும் காதுகள்... முகத்தின் இருபுறமும் வெள்ளைக் கோடுகள்.

எண்ணெய் தடவிய உளுத்தம் பயறைப் போல பளபளவென்ற கறுப்பு நிறத்தில் துள்ளிக் குதிக்கும் அந்த வெள்ளாட்டங்குட்டியின்மீது என் மகனுக்குப் பெரும் பேராசை.

வாங்கித் தரச் சொல்லி என் உயிரை வாங்கினான். விளாம்பட்டிச் சந்தையில், அம்மன் கோவில் வாசவில், கொங்கன்குளம் சின்ன முத்தையா அண்ணாச்சியிடம் பேரம் பேசாமல் வாங்கிக் கொடுத்தேன்.

குட்டியை வாங்கித் தனது சின்ன மார்போடு செல்லமாய் இறுக்கிக் கொண்டான்.

அந்த இறுக்கம் தாங்காமல் அந்த ஆட்டுக் குட்டி 'ம்மே' என்று கத்தியபோது அதன் கத்தலையும் ரசித்துச் சிரித்தான்.

ஏற்கெனவே வீட்டில் ஒரு கிளி. பூனை... நாய்... முயல் வளர்ந்து வருகின்றன.

ஐந்தாவதாய் இதையும் அள்ளிக் கொண்டான். சாவி கொடுத்து இயங்கும் பொம்மைகளை விட... தடவிக் கொடுத்து வளர்க்கும் இவற்றின் மீதுதான் என் மகனுக்கு எப்போதும் பிரியம்.

அந்த ஆட்டுக் குட்டியைத் தோளிலும் மார்பிலும் தலையிலுமாய்த் தூக்கிச் சுமந்தான். அதன் முகத்தில் முத்த மழை பொழிந்தான்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்ற உன் சொல் கேட்கும் பிள்ளையைப் பெற்றவன் நான். பெருமிதத்தில் சற்று நானும் முறுக்கிக் கொள்ள மீசை கொஞ்சம் கொடு பாரதி...

என்று படத்திலிருந்த பாரதியிடம் நான் கேட்டபோது... 'படவா ராஸ்கல்' என்று சிரித்தான் அந்த மகாகவி.

என் மடியில் என் பிள்ளை. அவன் மடியில் ஆட்டுக்குட்டி என்று எப்போதும் இருந்தோம்.

"என்ன பிள்ளைவாள்? மட்டன் போட்றலாமா?" என்று கிண்டலாய் கிட்டப்ப நாயுடு கேட்டபோது... "மட்டன்னா என்னப்பா?.." புரியாமல் கேட்டான் என் பிள்ளை. பொருள் சொன்னேன். பொட்டென்று சொட்டு விட்டன அவன் கண்கள்.

"அவங்க வளக்கிறதே அதுக்காக மட்டும்தான். பிள்ளை வளர்க்கிற மாதிரி நாமதான் வளர்க்கணும். அவங்க கேலி பண்ணுவாங்க. பரவாயில்லை. இந்தக் குட்டி வளந்து பெரிய ஆடானதுமே, தினமும் விலைக்குக் கேட்டு வருவாங்க. நாம தரவே கூடாது. கோயில் வாசல்ல வெட்டுப்படாம... கசாப்புக் கடையில அறுக்கப்படாம, நம்ம வீட்லயே வளந்து வயசாகி உடம்பு சுகமில்லாமப் படுத்து அதுவா சாகிற வரைக்கும்.."

நான் முடிப்பதற்குள் அவன் தொடர்ந்தான். "அப்பவும் சாக விடக்கூடாது. டாக்டரைக் கூட்டி வந்து ஊசிபோடணும். மருந்து கொடுக்கணும்.."

- என்று கண்டிப்பாய்ச் சொன்ன அவன் கருணையைக் கண்டு அப்படியே அவனை

வே.குருநாதன்



அள்ளிக் கொண்டேன்.

மறு வாரம் என் மகன், அவனின் ஆட்டுக்குட்டி, அவனின் அன்னையும் பிதாவுமாகிய என் மனைவி, நான் நால்வருமே இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பஸ் ஏறினோம்.

'நாலடி உயரமும் நாப்பது கிலோவுமாக' ஒரு கிடாயைப் பிடிச்சு, லாரியில ஏத்தி லாரி நிறைய சாதி சனங்களை அள்ளிக்கிட்டுப் போறது எப்படி?...

இது என்ன கேவலம்? நாலு கிலோ குட்டி. ஒரு தாய் தகப்பன். ஒரே ஒரு பிள்ளை. ரொம்ப அவசியம்தான்.. கடைவாய்க்குக் காணுமா கறி?

பஸ்ஸில் பின் இருக்கை செய்த கேலியைப் பொருட்படுத்தாமல் பயணித்த நாங்கள், இருக்கங்குடியில் இறங்கி கோயிலை நோக்கி நடந்தோம்.

குட்டி பெரிசாகட்டுமே. அதுக்குள்ள என்ன அவசரம்? நாலு பேருக்குக் கொடுத்துத் திங்கறதுக்குப் பத்துமா?

வழி நெடுகக் கேட்டதினால் ஏற்பட்ட எரிச்சலை அடக்கிக் கொண்டு, சிரமப்பட்டு செயற்கையாய் ஒரு சின்னப்புன்னகையை உதிர்த்துவிட்டு, குடும்பத்துடன் கோயிலை அடைந்தேன்.

கோயிலுக்குப் பின்னால் தலையில் முடி மட்டும் இல்லாமல் பக்தர்கள். பாவம் தலையே இல்லாமல் ஆடுகள்!

தலையைத் துண்டித்து, உடலை மட்டும் புழுதியில் துள்ளத் துடிக்க விட்டு... தூக்கிச் சென்று நறுக்கித் தின்னும் இந்தப் பாவிகளுக்கும் கூடவா அருள் வழங்குகிறாள் அந்த ஆயிரங்கண் மாரி?

அவளைக் கோபித்துக் கொண்டதோடு என் கண்ணீரையும் துடைத்துக் கொண்டு, வழிபடுவோர் வரிசையில் குட்டியுடன் நின்றேன்.

"குட்டியை வெட்டிட்டு வாங்க. வெட்டிட்டு வந்து சாமி கும்பிடுங்க. போங்க."

வரிசையில் நின்றவர்கள் என் கோபத்தைப் பற்ற வைத்தார்கள்.

"இந்த ஒரு குட்டி மட்டுமாவது கடைசி வரைக்கும் வெட்டப்படாம... நறுக்கப் படாம... தீர்க்காயுசா இருக்கணும்னுதான் சாமி கும்பிட வந்தேன்."

எனது வெப்பமான பதிலில் விக்கித்து வெலவெலத்துப் போய், என்னை விளங்காமல் வியப்போடு வேடிக்கை பார்த்தவர்கள் எத்தனை பேரென்று நான் எண்ணிப் பார்க்கவில்லை.

அம்மனின் முன்னால் என் குடும்பமும் ஓரிரு நிமிஷங்கள் நின்றது.

முதன்முதலாய் ஒரு பக்தனின் மடியில் பத்திரமாக, தலையோடு தன்னைத் தரிசிக்க வந்திருக்கும் ஆட்டுக்குட்டியைப் பார்த்ததுமே, அம்மனின் விரிந்த விழிகள் வியப்பினால் மேலும் விரிவது போலிருந்தது. மனசுக்குள் நான் வேண்டத் தொடங்கினேன்.

'நேர்த்திக் கடனில் ஒரு சின்ன மாற்றம் செய்யச் சொல் ஆத்தா... இவ்வளவு காலமும் தன் தலையில இருந்து வெறும் முடியை மட்டுமே வலியில்லாம கொடுத்துட்டு, அவனை நம்பிக் கூட வந்த அப்பாவி ஆடுகிட்ட இருந்து தலையையே பிடுங்கிக் கொடுத்த சண்டாள பக்தன் இனி உன் சன்னதிக்கு வந்தா, ஆட்டுக்கு மொட்டை போட்டு, அவன் தலையை வெட்டி பொங்கல் வைக்கச் சொல் ஆத்தா...

நீ இப்படியொரு புரட்சி செய்தாத்தான் ஆடுகளையும் நீ காப்பாத்த முடியும். இனி மேலாவது தன்னுடைய சமுதாயத்தை நீ காக்கணும்னுதான், அனைத்திந்திய ஆடுகள் சார்பா இந்த ஆட்டுக்குட்டி முதன் முதலா ஒரு மொட்டை போடப் போகுது. அருள் புரி ஆத்தா..!'

மனமுருக வேண்டிக் கொண்டு நகர்ந்து சென்ற நான் ஆட்டுக்குட்டிக்கும் ஒரு மொட்டை போட்டுவிட்டு, சந்தனம் தடவி சன்னதியைச் சுற்றிவிட்டு கோயிலை விட்டு வெளியில் வந்தேன்.

முதன் முதலாய் அந்தக் கோயிலிலிருந்து தலையை இழக்காமல் தலை முடியை மட்டுமே இழந்து, சந்தனம் பூசிக் கொண்டு சௌக்கியமாய்த் திரும்பிய ஆட்டுக்குட்டி எங்களுடையதுதான்.

இப்படிக் கோயிலில் இருந்துகூட குட்டியைக் காப்பாற்றிய என்னால் விதியிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை.

எங்கள் ஊர்ச் சாலையில் இது விளையாடிக் கொண்டிருந்தபோது டவுன் பஸ் வந்தது. சக்கரத்தில் சிக்கி உயிரை விட்டது.

சின்னா பின்னமாய்ச் சிதைந்து கிடந்த ஆட்டுக்குட்டி... தலை கவிழ்ந்து நிற்கும் டிரைவர். சரிக்கட்டிப் பார்க்கும் கண்டக்டர். சத்தம் போட்டுப் பேசும் தலையாரி. கறாராகக் கண்டிப்பாகப் பேசும் கருப்பையா. கோபப்பட்டுப் பேசும் குட்டி நாடார்... ஒரு கூட்டமே கூடியிருந்தது.

"நான் இப்போது நவீன இலக்கியவாதி!"

- ராஜேஷ்குமார்

க்ரைம் கதை மன்னர் ராஜேஷ்குமார் இப்போது கோவை மாநகரில் இல்லை. மருதமலை செல்லும் சாலையில் உள்ள வடவள்ளி என்ற ஜிலுஜிலு (வருடம் முழுவதும் இங்கே குளிர்காற்று வீசுகிறதாம்) கிராமத்துக்குக் குடி பெயர்ந்து விட்டார். இந்த வெகுஜன இலக்கியவாதியிடம், நவீன இலக்கியத்தின் பால் நாட்டம் உண்டா என்றோம். "நான் இப்போது எழுதி வருவதே நவீன இலக்கியம் தானே?" என்று சண்டைக்கு வந்துவிட்டார்.

"க்ரைம் கதை உலகில் கலக்கிக் கொண்டிருந்த தமிழ்வாணன் 1980ல் காலமானபோது, அவரது இடம் வெற்றிடமாக இருந்தது. எனக்கு க்ரைம் எழுத வரும் என்று முடிவு செய்த எஸ்.ஏ.பி. என்னைக் கூப்பிட்டு, "தமிழ்வாணனைப் போலவே க்ரைம் கதை எழுதிக் கொடு" என்று கேட்டார். க்ரைம் கதை எழுத வலுவில் தள்ளப்பட்டது அப்படித்தான்.

கோவைச் சிறப்பிதழ்

வெறும் கொலை, களவு, துப்பறிதலை மட்டுமே கொண்டு கதையெழுது வதை தொண்ணூறுகளின் தொடக்கத்திலேயே தலை முழுகிவிட்டேன். இப்போது நவீன அறிவியல் கலந்து கதை எழுதுகிறேன். ஹைடெக் விஷயங்களை, துறை சார்ந்த நிபுணர்களி டம் கேட்டு அறிந்து துல்லியமாக எழுதுகிறேன். பல்லியின் வால் அறுந்து போனால் அது மீண்டும் வளர்க்கிறது. அதுவே மனிதனின் கையோ, காலோ துண்டானால் ஏன் மீண்டும் வளர்வதில்லை. அது வளர்ந்தால் எப்படியிருக்கும் என்பது எனது சமீபத் திய நாவல் கரு. இதற்காக டி.என்.ஏ. விஞ்ஞானி களோடு இரண்டு மாதம் செலவிட்டேன். இப் போது எனதுநாவலை வாசிக்கிற யாரும் அவர்களது பொது அறிவில் புதிய விஷயமொன்றை நிரப்பிச் செல்வார்கள்'' என்கிறார் க்ரைம் கதை மன்னன் ராஜேஷ்குமார்.

இவரது மூத்த மகன் கார்த்திக்குமார் வங்கி அதிகாரி. இளைய மகன் ராம்பிரகாஷ் முதுகலை பொறியியல் பட்டதாரி. இருவருக்குமே கதை படிக்கிற பழக்கமோ, கதை எழுதுவதில் ஆர்வமோ துளியும் கிடையாதாம்.



* குடும்பத்தினருடன் ராஜேஷ்குமார்

துணைவியார் தனலட்சுமிதான் இவரது கதைக்கு ஹோம் சென்சார் அதிகாரி. பெண்களைப் பற்றி கொஞ்சம் வரம்பு மீறி இருந்தாலும் அடித்து, அழகாக எடிட் செய்துதான் கொடுப்பாராம். க்ரைம் கதை ஹீரோவுக்கு ஏற்ற கதைநாயகி!

முடிவாய் நானூறு ரூபாய் கேட்டார் நாட்டாண்மை. டிரைவர் கையைப் பிசைந் தார். கண்டக்டரின் முகத்தைப் பார்த்தார்.

''நானூறு ரொம்ப ஜாஸ்திங்கய்யா...!'' கண்டக்டர் பயம் கலந்த பணிவோடு சொன்னார்.

''என்ன ஜாஸ்திய்யா? இன்னைக்கு தோல் என்ன விலையா இருக்கு? ரத்தம் புழுதில போயிருச்சு... கறியே கிலோ நூத்தி இருபது ரூபா. தலைக்கறிக்கு என்ன விலை தெரியுமா?''

ரத்தத்தை... சதையை.. தோலை... தலையை... கால்களை...

துண்டு துண்டாய்த் துல்லியமாய் மதிப்பிட்டுச் சொல்ல, ஆட்டு வியாபாரி தோசை முத்துவையே கூட்டி வந்தார்கள்.

அவன் கூட்டத்தையே தனது இரு கைகளால் விலக்கிக் கொண்டு, அந்தத் துறையில் பல பட்டங்கள் பெற்று வந்த நிபுணனைப் போல...

முக இறுக்கமும் ஒரு தோரணையுமாய், இறந்து கிடந்த ஆட்டுக்குட்டியைக் காலால் புரட்டிக் கண்ணால் அளந்து...

சொல்வதற்காகத் தொண்டையைச் செருமியபோது...

நான் கை உயர்த்தினேன். ''எவனும் எதுவும் சொல்ல வேண்டாம். குட்டியோட உண்மையான மதிப்பு என் மகனுக்குத் தான்டா தெரியும். நீங்களெல்லாம் வெறும் சதைக்கும் தோலுக்கும் தான்டா மதிப்புப் போடுறீங்க... அங்க பாருங்கடா...!''

ஆவேசமாய்க் கத்தினேன்.

ஆட்டுக் குட்டியைத் தடவித் தடவித் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த என் பிள்ளையைப் பார்த்துப் பார்த்து, என் பெரு மிதத்தைக் கண்ணீரில் நனைய விட்டேன்.

இந்த அன்பும் கருணையும் அவனுக்குள் வாழ்ந்து வளர வேண்டும். எல்லோர் வாயிலும் ஈரம் கசிந்த அந்த இடத்தில், என் பிள்ளையிடம் மட்டுமே கண் ஈரம் கசிந்ததினால், அவனுக்காகவாவது இன் னொரு குட்டியை எடுத்து வளர்க்கும் முடிவோடு, என் மகனைத் தூக்கிக் கொண்டு, அந்தக் கும்பலை விலக்கியபடி வெளியில் வந்தேன்.

தோஷ நிவர்த்தி ஸ்தலமான இராமேஸ்வரத்தில் மஹாளயபக்ஷ அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

மூதாதையருக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும் திதி-தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ருகடன் நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாஸையே! மஹாளயபக்ஷ அமாவாஸையில் அன்னதானம் செய்வதால் பித்ருக்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டு அவர்கள் தம் சந்ததிகளுக்கு பூரண ஆயுள், நல்ல ஆரோக்கியம், தர்மசிந்தனையும் ஆரோக்கியமும் உள்ள சந்ததிகள், செல்வ வளம், நிம்மதி, குறைகளில்லாத வாழ்க்கை ஆகியவற்றை அளிக்கிறார்கள். பல பிறவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் வினைகளும் இப்பிறவியில் ஏற்பட்ட வினைகளும் விலகி ஆனந்தமும் நல்வாழ்வும் கிடைக்கின்றன. ஆகவே இராமேஸ்வரம் போன்ற புனித க்ஷேத்திரங்களில் அன்னதானம் செய்து மகத்தான பலனைப் பெறலாம்.

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் என்றென்றும் அழியாத பலனைக் கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் (அ) பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

இராமேஸ்வரத்தில் பிறந்தநாள், திருமணநாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்ய எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் நாளில் அந்தணர்கள், சாதுக்கள், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித சேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறோம்.



CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

கோவைச் சிறப்பிதழ்

ஜாலி ஜாலி!









பாதசாரிகளில் தொடங்கி பத்து லட்ச ரூபாய்க் காரில் செல்கிறவர்கள் வரை, பலரும் நாகலிங்கத்துக்குச் சிரித்துக் கொண்டே 'வணக்கம்' வைக்கிறார்கள்.

'புரட்சிப்புயல்', 'பால்கார அண்ணாமலை', 'நடன மேடை' என்று நாகலிங்கத்துக்கு கோவை வாசிகள் அரை டஜன் பட்டப் பெயர்களைச் சூட்டியிருக் கிறார்கள். யாரிந்த வி.ஐ.பி?

கோவை மாநகரப் போக்கு வரத்துக் காவல்துறையில் ஒரு சின்சியர் தலைமைக் காவலர் தான் இந்த நாகலிங்கம்.

நெருக்கடியான சாலை சந்திப்புகளில் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்துவதில் மகா கெட்டிக்காரர் இந்த நாகு. விஸ்க்...விஸ்க்கென்று காற்றில் ஒலியெழும்பும் அளவுக்கு கைகளை ஸ்டை லாக அசைத்து, உடம்பை வளைத்து இவர் பண்ணுகிற அசத்தல் சேஷ்டைகளை ரசிப்பதற்கென்றே, நிறுத்துக் கோட்டை யாரும் தாண்டு வதில்லையாம். முப்பத்து ஏழு வருடங்களாக, மன நிறை வோடு இந்தப் பணியை செய்துவரும் நாகலிங்கத்திடம் "மூட்டுக்கள் தேய்ந்துவிடும் இத்தனை வேகம் வேண்டாம்" என்று சகாக்கள் அறிவுறுத்தி யும், "எனது உயிர் போனால் இது போன்ற சாலை சந்திப்பு களிலேயே போகட்டும்" என்று பதிலுரைக்கும் நாகு, இராமநாதபுரம் மாவட்டம் உசிலங்கு கிராமத்தைச் சேர்ந் தவர். அன்னாருக்கு 'கைநீட் டாத போலீஸ்காரர்' என பொதுமக்களே சான்றிதழ் தருகிறார்கள்.

மாநகரின் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதில், நாகலிங்கம் போன்ற ஆண் காவலர்கள் கோவையில் மிகச்சிறுபான் மையாகவே பயன்படுத்தப் படுகிறார்கள். அப்புறம்!? இப்போது சாலை சந்திப்புகள் தோறும் கண்ணுக்கு லட்சணமான பெண் காவலர்கள் கலக்கிக் கொண்டிருப்பதில், விபத்துகள் சுத்தமாய் இல்லையாம்!

சென்னை போக்குவரத்துக் காவல்துறை கவனிக்க!



• சுவாமி சாந்தானந்த சரஸ்வதி

நோ பில்! நோ டிப்ஸ்!

ஒரு மல்டி க்யூஸின் ரெஸ்டாரெண்டுக்குள் நுழைந்து விலைப் பட்டியலைப் பார்த்தால் தலை சுற்றும். இதுதான் யதார்த்தம்! ஆனால் கோவை அன்னலட்சுமி ரெஸ்டாரெண்டில் நோ பில்! நோ டிப்ஸ்!

குளுகுளு ஏசி, மெத்து மெத்து நாற்காலிகள். தூய்மையோ தூய்மை என விரிந்திருக்கும் இந்த ஹோட்டலில் மதிய உணவு, இரவு சிற்றுண்டி இரண்டுமே உயர்தர சுவை. பஃபே முறை என்பதால் வேண்டியதை நாமே எடுத்துச் சாப்பிடலாம்.

சாப்பிட்டு முடித்ததும் உங்கள் மேசையைத் தேடி 'பில்' வரும் என்று நினைத்தால் ஏமாந்து போவீர்கள். மாறாக மற்ற ஹோட்டல்களில் சர்வர் பில் கொண்டு வந்து தரும் இரண்டாக மடக்கும் அட்டை வரும். ஆனால் அதில் பில் இருக்காது. அந்த அட்டையின் உள்ளே எழுதப்பட்டுள்ள வாசகங்கள் இவைதாம் :

"விருந்தாளி, கடவுளைப் போன்றவர் என்பது நமது தேசத்தின் பாரம்பரியம். வேண்டியதைச் சாப்பிடுங்கள் விரும்பியதைக் கொடுங்கள். இங்கே பரிமாறப்படும் உணவு ஒரு வர்த்தகப் பொருள் அல்ல. நமக்கிடையேயான உறவுப் பாலம்! எந்தவொரு எளியவரும் பணமில்லை என்பதற்காக உணவுக்குக் கஷ்டப்படக் கூடாது என்பதே அன்னலட்சுமியின் குறிக்கோள்!"

சாப்பிட்டு முடித்தவர்கள் ஐந்து ரூபாய் முதல் ஐம்பது ரூபாய் வரை அட்டையில் வைத்துச் செல்கிறார்கள். சப்பிட வருபவர் பணக்காரர், ஏழை எப்படியிருப்பினும் இன்முகத்துடன் இங்கே உபசரிக்கிறார்கள். இங்கே உணவு பரிமாறும் அனைவரும் தன்னார்வத் தொண்டர்கள்.



• வரிசையில் நின்று உணவைப் பெற்று...



• குளுகுளு குளிர்ச்சியில் சந்தோஷமாய்ச் சாப்பிட்டு....

கோவை வடவள்ளியில் உள்ள சிவாஞ்சலி அறக்கட்டளைதான் இந்த உணவகத்தை நடத்துகிறது. சுவாமி சிவானந்தரின் சீடரான சாந்தானந்த சரஸ்வதி சுவாமிகள் தொடங்கிய இந்த அறக்கட்டளையின் பல்துறைச் சேவையை நாடறியும் என்றாலும், பில் இல்லாத தரமான உணவகம் மிக உயர்ந்த விஷயம் என்று மகிழ்கிறார்கள் கோவை வாசிகள்.

தலைவனுக்காக

பூரணிக்குச் செய்தி காதில் விழுந்ததி லிருந்து, ஒரே கவலையாகிவிட்டது.

"நெசமா, நெசமா?" என்று அக்கம் பக்கத் தவர்களையெல்லாம் விசாரித்தாள்.

"ஆமாம் பூரணி. மத்தியான டி.வி. நியூஸ்ல காண்பிச்சாங்க.."

"என்னா வியாதி... எந்த ஆஸ்பத்திரி...?" தவிப்பாய்க் கேட்டாள்.

"பெரிய ஆஸ்பத்திரிலதான் சேர்த் திருக்கு. இன்ன நோய்னு சொல்லலே. திடீர் உடல் நலம் குறைவுன்னுதான் சொன்னாங்க. ஆமா... உம் புருஷன் எங்கே.. அதுக்குத் தெரி யுமே..."

"அது டவுனுக்கு வேலையா போயிருக்கு.."

"ஊருக்கு முன்ன ஒம்புருஷனுக்குச் சேதி தெரியுமே... இந்நேரம் ஆஸ்பத்திரி யண்ட ஓடியிருக்குமே...." என்றார்கள்.

அதை நினைக்கும் போது வயிறு சுருண் டது. அவள் புருஷன் - முத்துப் பாண்டி சொல்லியிருந்தது ஆணியடித்தது போல ஞாபகத்தில் இருக் கிறது.

"என் தலை வனுக்கு ஏதாவது ஒண்ணு ஆயி ருச்சுன்னா, நான் உசு ரோட இருக்க மாட்டேன். நானும் தூக்குப் போட்டுச் செத்துப் போவேன்."

அந்த வார்த்தை கள், மறுபடி மறு படி நினைவுக்கு வந்து இம்சை செய்தன.

குடிசைக்கு வந்து, இரண்டு குழந்தை களையும் வாரி அணைத்துக் கொண்டு,

'என்னடா செய்யப் போறோம் கட வுளே..' என்று திகைத்து உட்கார்ந்து விட் டாள்.

கிராமத்தில், நல்ல வளமையான குடும் பத்தைச் சேர்ந்தவள்தான் பூரணி. சாப்பாட் டுக் கஷ்டம், துணிக் கஷ்டம் தெரியாமல் வளர்ந்தவள். பெரிய இடமாகப் பார்த்துக் கல்யாணம் பண்



படுதலம் சுகுமாரன்

ணிக் கொடுக்க வேண்டும் என்று வரன் தேடிக் கொண்டிருந்தபோதுதான், முத்துப் பாண்டி பூரணியின் கண்ணில் பட்டான். அரும்பு மீசையும், தூக்கி வாரிய தலை முடியும், கூர் மூக்குமாய் அழகாய் இருந்தான்.

அது தேர்தல் நேரம்.

ஊருக்குள் கட்சி வேலை செய்ய வந்திருந்தான். மைக் வைத்துக் கொண்டு, அவன் கட்சித் தலைவனுக்காகப் பிரசாரம் பண்ணினான். அவன் வோட்டு கேட்டு வந்த 'ஆனா ஊனா' கட்சியின் பேரில், பூரணியின் அப்பா பெரியமருதுவுக்கு அபிமானம் உண்டு. நேரடியாகக் களத்தில் இறங்கி வேலை செய்ய மாட்டார் என்றாலும், அந்தக் கட்சிக்கு அவ்வப்போது நிதியுதவி, கட்சிப் பேர் சொல்லி வருகிறவர்களுக்கு ஒரு வேளைச் சாப்பாடு என்று உபசரிப்பார். அந்த வகையில் தங்கள் ஊருக்குப் பிரசாரம் பண்ண வந்த முத்துப் பாண்டியைக் கூட்டி வந்து, சாப்பாடு போட்டு அரசியல் பேசினார். தேர்தல் முடிவதற்குள் நான்கைந்து முறை, முத்துப் பாண்டி வீட்டுக்கு வந்து போக, பழக்கமாகி, பழக்கம் காதலாகி விட்டது.

அவள் ஆசைக்குக் குடும்பமே எதிர்ப்புச் சொன்னது.

"நீ, வேற சாதிப் பையன வேணும்னாலும் கட்டிக்க. ஆனால் இவன் வேண்டாம். இரண்டுங்கெட்டான் பையன். இவனை மாதிரி ஆளுங்க அரசியல்லயும் முன்னுக்கு வர மாட்டாங்க. குடும்பத்தை

அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை

யும் கவனிக்க மாட்டாங்க. இது ஒரு தினுசான கிறுக்கு.." என்றார் பெரியமருது. பூரணிக்குக் காதல் கிறுக்கு வந்து விட்டதால், அப்பா சொன்னது காதில் ஏறவில்லை.

"அவர் ரொம்ப நல்லவர். என்னால் அவரைத் திருத்தி பெரிய ஆளாக்க முடியும். கட்டினால் அவரைத்தான்..." என்று பிடிவாதம் பிடித்து, வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்.



சென்னைக்கு ஓடி வந்தாகிவிட்டது.

வரும் வழியெல்லாம் முத்துப் பாண்டியை மடியில் போட்டுக் கொண்டு உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தாள்.

"உன்னைத் திருத்தி பெரிய ஆளா மாத்திக் காட்டறேன்னு சவால் போட்டு

வீட்டுப்படி தாண்டியிருக்கேன். என்னையும், என் நம்பிக்கையையும் காப்பாத்து. இனி இந்த அரசியல் பக்கம் போகாதே. கட்சி, கொடி, தலைவன்னெல்லாம் பேசாதே. எல்லாம் தலையச்சுத்தி விட்டெறிஞ்சுட்டு, ஒழுங்கு மரியாதையா என்னை வைச்சுக் குடும்பம் பண்ணு. இல்லன்னா, நான் செத்துருவேன்..."

"அப்படிச் சொல்லாதே. இனிமே குடும்பம்தான் கட்சி. மனைவிதான் தலைவி. நீ சொல்றதுதான் கொள்கை" என்றான்.

ஓடிவரும்போது, அவள் போட்டு வந்திருந்த நகைகள், வாழ்க்கையைத் துவங்க போதுமானதாக இருந்தன. நகையை அடகு வைத்து பணம் வாங்கி, வாடகைக்கு வீடு பிடித்து, பண்ட பாத்திரம், பாய், தலையணை வாங்கும் முன் அவன் செய்த முதல் காரியம், போட்டோ கடைக்குப் போய் அவன் சார்ந்த கட்சித் தலைவனின் போட்டோ - பெரியது - வாங்கியதுதான்.

அப்போதே பூரணிக்கு மளுக்கென்று உடைந்து விட்டது மனசு.

"சேச்சே...! காந்தி, நேரு, லெனின், பாரதினு பிடிச்சவங்க படத்தை வீட்ல வைச்சிக்கறதில்லையா? அது மாதிரிதான் இதுவும்" என்று சமாதானப்படுத்தியவன், அன்று இரவு சட்டை, பனியனைக் கழற்றும் போது அதிரவும் வைத்தான்.

செந்நிறமான அவன் உடம்பெங்கும் கருந்தேள் போல பச்சைக் குத்தியிருந்தது.

"எந்த என்ஜினீயரிங் காலேஜிலும் என் பையனுக்கு சீட் கிடைக்கலை..."

"ஆச்சரியமா இருக்கே?"

"பிளஸ் டூ பாஸ் பண்ணி இருக்கணுமாமே!"

- எஸ். மோகன்.



இடது மார்பில் தலைவன் உருவம். வலது மார்பில் கட்சிப் பெயர். ஒரு புஜத்தில் கட்சிக் கொடி. இன்னொரு புஜத்தில் தலைவன் பெயர்.

"எல்லாத்தையும் அழிச்சிடலாம் விடு" என்றான். அவளுக்கு நம்பிக்கை போயிற்று. ஆனால் ஒரு வாரம் அலைந்து திரிந்து ஒரு வேலையைச் சம்பாதித்துக் கொண்டு பொறுப்பாக வேலைக்குப் போய் வரத் துவங்கியதும், பூரணிக்கு நிம்மதியாயிற்று.

சினிமா பைத்தியம், சிகரெட் பைத்தியம் மாதிரி இதுவும் ஒன்று. பொறுப்பு வந்ததும் தானாக மறந்து விட்டது என்று நினைத்தாள். இப்படியாகக் கொஞ்சம் நாள் போனது. அவள் நிம்மதியாய் இருப்பது பொறுக்காதது போல ஒரு காரியம் பண்ணி வைத்தான் முத்துப்பாண்டி.

வேலை பார்த்த இடத்தில் அவன் தலைவனைப் பற்றி முதலாளி ஏதோ விமர்சனம் செய்து விட்டாரென்று, வேலையைக் கடாசிவிட்டு வந்து விட்டான்.

அது நாள் வரை நீறுபூத்த நெருப்பாய் உறங்கிக் கொண்டிருந்த கட்சி அபிமானமும், தலைவர் பக்தியும் விழித்துக் கொண்டது. அப்போது பார்த்து உள்ளாட்சித் தேர்தல் வரவே கட்சிப் பணியில் இறங்கிவிட்டான். கவுன்ஸிலராக நிற்பவரை ஆதரித்து, களப் பணியில் இறங்கினான். கொடிகட்டினான்; போஸ்டர் ஒட்டினான். இரவெல்லாம் விழித்து சுவர் விளம்பரம் எழுதிவிட்டு வந்தான். ஏரியாவில் நடந்த மீட்டிங்குக்குப் பந்தல் போட்டான். ஆட்டோவில் மைக் கட்டி, தெருத் தெருவாய் பிரசாரம் செய்தான். எல்லாம் அவன் பணம். ஒவ்வொரு காரியத்துக்கும், வீட்டிலிருந்து ஒவ்வொரு பொருள் காணாமல் போயிற்று.

வீட்டில் சாப்பாட்டிற்கே கஷ்டம் வந்து விட்டது.

விதியை நொந்து கொண்டு, வயிற்றைச் சாய்த்தபடி, வீட்டு வேலைக்குப் போனாள். பார்சல் கம்பெனியில் பகுதி நேர வேலை பார்த்து அரை வயிற்றுக் கஞ்சி குடித்தாள்.

பிரசவமாயிற்று.

ஒன்றுக்கு இரண்டாய், இரட்டைப் பிள்ளை!

ஆஸ்பத்திரி வந்து குழந்தை முகத்தைப பார்க்காமல், தலைவருக்குப் பிறந்த நாள் பொன்னாடைக்கும், பூமாலைக்கும் என்ன செய்வது என்று அலைந்து கொண்டிருந்

''திருடன் உன் வீடு புகுந்து திருடினதும் இல்லாம குறிப்பு வேற எழுதி வைச்சுட்டுப் போயிருக்கானா...! என்னன்னு?''

''பெட்டர் 'லாக்' நெக்ஸ்ட் டைம்!''

- வசந்தி வள்ளுவன்.



தான். பிறகு வந்த நாளில் அவனுக்குக் குடும்பமே மறந்து விட்டது.

தன் வாழ்க்கைக்கு ஓர் அரசியல் தலைவன் வில்லனாய் வருவான் என்று கொஞ்சமும் எதிர்பாராத பூரணி, புருஷனைத் திட்டித் தீர்த்தாள்.

"அட சண்டாளா... இப்படி அரசியல் பித்துப் பிடிச்சு அலையற உனக்கெல்லாம் எதுக்கு ஒரு குடும்பம், பொண்டாட்டி, புள்ளை...? எல்லாரையும் பட்டினிப் போட்டு பணம், வியர்வை, ரத்தம்னு வீணாக்கி அழியறவன்தான் தொண்டனா? தொண்டனின் குடும்பத்தை அழிச்சு, அவங்க ரத்தத்தைக் குடிச்சுத்தான் கட்சியும்; தலைவனும் வாழனும்னா அந்தக் கட்சி என்னாத்துக்கு, தலைவன் என்னாத்துக்கு? அவனவன் வாழ்க்கையைப் பறிச்சு வாயில போட்டுக்கறதுதான் அரசியலா...? இப்படியாப்பட்ட தலைவன் இருந்தா என்ன... செத்தா என்ன?" என்ற போதுதான்,

"அப்படிச் சொல்லாதடி.. என் தலைவன் செத்தால் நானும் செத்துருவேன்" என்றான் முத்துப்பாண்டி.

''ஏன் அதுவரைக்கும் காத்திருக்க? இப்பவே செத்துப் போ. உன் தலைவன் உனக்கு உசுரக் கொடுக்கறானா... வேறெதனா கொடுக்கறானான்னு பார்க்கலாம்..!'' என்று கத்தி விட்டாளே தவிர,

உள்ளுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

சொன்னபடி செய்யக்கூடியவன், முத்துப்பாண்டி.

இப்படித்தான் ஒருமுறை, இடைத்தேர்தலில் தலைவன் ஜெயித்து விட்டால், வேல் குத்தி தேர் இழுப்பதாய் வேண்டிக் கொண்டான். தலைவர் கள்ள வோட்டில் கன ஜோராய் ஜெயித்து விட,

சொன்னது போல வேல் குத்தி தேர் இழுத்தான் - சொந்தச் செலவில்.

'தலைவருக்கு ரத்தத் திலகம் வைச்சேன்' என்று பிளேடால் அறுத்துக் கொண்ட கையைப் பெருமையாக வந்து காட்டினான்.

''பார்த்துடி... தலைவன், கட்சி பத்தி எதுவும் சொல்லி வைச்சிராதே. உன்னையும் கொழந்தையும் கொன்னுறப் போறான்'' என்றார்கள் அக்கம் பக்கத்தினர்.

அவனை மன்றாடுவது, நயந்து கேட்பதைக் கூட விட்டு விட்டாள். எப்படியோ ஒழியட்டும்,

பேருக்குப் புருஷனாய் இருந்துட்டு போகட்டும். பூவுக்கும், பொட்டுக்குமாவது பங்கம் வராமல் இருந்தால் சரி என்று மனத்தைத் தேற்றிக் கொண்டிருக்கும் வேளையில் இடியாய் இந்தச் செய்தி,

'ஆனா ஊனா' கட்சித் தலைவர், கவலைக்கிடம்!

எதிர்பார்த்தது போல் அன்றிரவு, முத்துப்பாண்டி வீடு திரும்பவில்லை. இரவெல்லாம் விழித்திருந்த பூரணி, ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதிகாலையில் எழுந்து உச்சந்தலையில் தண்ணீர் கொட்டிக் கொண்டு, ஈரச் சேலையுடன் மாரியாத்தா கோவிலுக்குப் போய் அங்கப்பிரதட்சணம், அடிப்பிரதட்சணம் செய்தாள். மண் சோறு சாப்பிட்டாள். மொட்டை போட்டு, தீமிதி பண்ணுவதாகப் பல்வேறு விதமாய் வேண்டிக் கொண்டாள்.

எல்லாம், "தன் புருஷனுக்கு நல்ல புத்தி கொடு தாயே" என்பதற்காக அல்ல. அது அந்தக் கடவுளாலும் முடியாத காரியம் என்று அவளுக்குத் தெரியும்.

அவள் வேண்டுதல் எல்லாம், அந்தத் தலைவன் உயிர் பிழைத்து எழுந்து தீர்காயுசாக இருக்க வேண்டும் என்பதுதான்.


பாவம்... பூரணியால் வேறென்ன செய்ய முடியும்?

9 வணக்கத்துக்குரிய வயிறே...

"'கல்கி' சக வாசகர்களுக்கு... டாக்டர் எஸ். அஷோக் சென்ற இதழில் குறிப்பிட்ட வினோத கேஸுக்குரிய நபர் நான்தான்... எனக்கு ஏற்பட்ட பிரச்னையை டாக்டர் அனுமதியுடன் நானே சொல்கிறேன்.

"என் பெயர் கே.எஸ். விஸ்வநாதன். வயது ஐம்பது கல்பாக்கம் இந்திராகாந்தி அணுமின் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியாளராகப் பணி புரிகிறேன்.

சாதாரணமாகவே நல்ல ஆரோக்கியம் கொண்டவன். சுத்த சைவம்! புகை பிடிப்பதோ, மது அருந்துவதோ இல்லை. ஓய்வு நேரங்களில் டென்னிஸ், கிரிக்கெட் என்று ஃபிட்டாக இருப்பவன்.





• விஸ்வநாதன்

மூன்று வருடங்களுக்கு முன் ஒரு நாள்... ஒருநாள் என்று குத்து மதிப்பாகச் சொல்ல வேண்டியதில்லை... தேதியும் வருஷமும் நன்றாகவே ஞாபகமிருக்கிறது! பிப்ரவரி 15, 2000! காலையிலிருந்தே ரொம்ப டல்லாக இருந்தது. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல், அலுவலகத்துக்குக் கிளம்பிப் போய்விட்டேன். பத்து மணியளவில் இலேசாக ஆரம்பித்த வயிற்று வலி, மதியவேளை நெருங்க நெருங்க, குத்தி எடுத்துக் குடைய ஆரம்பித்தது. சிறிது நேரத்துக்குள் தாங்க முடியாத அளவுக்குப் போகவே, கல்பாக்கம் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

அங்கே அடிப்படை பரிசோதனைகளெல்லாம் செய்த மருத்துவர்கள், என்னுடைய இரத்த அழுத்தமும், நாடித் துடிப்பும் குறைந்து கொண்டே வருவதைக் கண்காணித்து, உடனே சென்னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

நல்லவேளையாக டாக்டர் எஸ். அஷோக் இருந்தார். பி.பி.யும் பல்ஸும் விழுந்து கொண்டேயிருப்பதைப் பார்த்த உடனேயே உஷாராகிவிட்டார்.

"உடனடியாக ஆபரேஷன் செய்தாகணும்... யூ ஹேவ் கம் ஜஸ்ட் இன் டைம்" என்று சர்ஜரிக்கான ஆயத்தங்களில் இறங்கினார்.

"ஐ.சி.யுவில் சேர்க்கப்பட்டேன். மேஜர் பிராப்ளம். பல மணி நேர ஆபரேஷன் நடந்தது.

புடைவையும் கைக்குட்டையும்!



டாக்டர் எஸ். அஷோக்

கிட்டத்தட்ட ஐந்தரை மீட்டர் நீளம் இருக்கக் கூடிய சிறு குடலின் தொண்ணூறு சதவிகிதம் அழுகிப் போயிருக்க, அதை அப்படியே வெட்டி எடுத்து விட்டார்கள். அதாவது ஒரு புடைவையின் நீளம் இருக்க வேண்டிய உறுப்பு, கைக்குட்டை அளவே இருக்கிறது! மிச்சமிருந்த சிறு துண்டை இரைப்பையுடன் இணைத்து பழையபடி தைத்து விட்டார்கள். மறுபடி ஐ.சி.யூவில் வைக்கப்பட்டேன். பின் உடல்நலம் தேறி வர ஒரு மாசமாச்சு...

"ஐயோ டாக்டர்! சிறுகுடலே இல்லைன்னா ஜீரணம் எப்படி ஆகும்? அவர் பிழைப்பாரா?" என்று கலங்கிய என் மனைவியிடம் டாக்டர் அஷோக் சொன்ன வார்த்தைகள் இவைதாம்:

"டோண்ட் வொர்ரி. ஹி வில் சர்வைவ். ஆனால் உணவுப் பழக்கம் எல்லாம் கம்ப்ளீட்டா மாற வேண்டியிருக்கும். திரவ ஆகாரம் மட்டுமே சாப்பிட வேண்டியிருக்கலாம். அவரது சிறுகுடல் எப்படி அட்ஜெஸ்ட் பண்ணுது என்று பார்க்கலாம்" என்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

ஆனால்... இந்த மூன்று வருஷமாக எனக்கு எந்தத் தொல்லையும் இல்லை. (டச் வுட்) தயிர்சாதம் முதல் பீட்ஸா வரை வழக்கம் போலச் சாப்பிடுகிறேன். டென்னிஸ், கிரிக்கெட் விளையாடுவது தொடர்கிறது.



'ஸார், நீங்கதான் என்னை வாழ வைத்த தெய்வம். கண் கண்ட தெய்வம். குல விளக்கு. உங்கள் சேவை... நாட்டுக்கு தேவை..' என்றெல்லாம் மெகா சீரியல் டயலாக் அடிக்க ஆசை! மரணத்தின் விளிம்பில் இருந்த என்னைக் காப்பாற்றியவர் டாக்டர் அஷோக்தான் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

இனி ஓவர் டு டாக்டர் எஸ். அஷோக்.

"விஸ்வநாதன் என்னிடம் வந்தபோதே, 'எமர்ஜென்ஸி' என்று தெரிந்துவிட்டது. ஆனால் கூட வந்தவர்களோ, "டயரியா ஸார்" என்றார்கள். சிறு குடலுக்குப் பாயும் இரத்த நாளத்தில் இரத்தம் கட்டி, அடைப்பு ஏற்பட்டதால் சிறு குடல் அழுகி, 'பவல் கேங்கரின்' ஆகியிருந்தது. இன்னும் அரைநாள் தாமதித்திருந்தாலும், காப்பாற்றியிருக்க முடியாது. இருதய அடைப்பு, மூளை அடைப்பு போல, குடல் அடைப்பு ஏற்பட்டு, திடீரென அழுகிப் போவதும் ரொம்ப சீரியஸான விஷயம். அதிலும் நாற்பது ப்ளஸ் வயதுடையவர்கள், மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.."

'குடல் பிதுக்க (ஹெர்னியா) ஏன் ஏற்படுகிறது? அறுவை சிகிச்சை இல்லாமல் நிவாரணம் பெற முடியாதா?' என்று ஆதங்கத்துடன் விசாரித்திருக்கிறார் தஞ்சாவூர் எஸ். ஜெயராமன்.

ஓர் உறுப்பு முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ வலுக் குறைந்த பகுதி வழியாக நீட்டிக் கொண்டிருத்தல் அல்லது வெளித் தள்ளப்படுதல்தான் ஹெர்னியா!

வயிற்றுப் பகுதியில் பிதுக்கம், தொடை, தொப்புள் முதலிய இடங்களில் பெரும்பாலாகத் தோன்றும். பிறவிக் கோளாறு, அதிக பளு தூக்குதல், தீராத இருமல், நாள்பட்ட காசநோய், மலச்சிக்கல் ஆகியவை குடல் பிதுக்கத்தை ஏற்படுத்தும்.

'தடைப்பட்ட குடல் பிதுக்கம்' 'உட்புகாத பிதுக்கம்' போன்றவற்றில் இரத்த ஓட்டம் தடையில்லாது இருக்கும். அதன் அறிகுறிகளாக, ஆரம்பத்தில் வலி மிதமாக ஆரம்பித்து, சிறுகச் சிறுக அதிகரிக்கும். இதுவே இரத்த ஓட்டத் தடைப்பட்ட பிதுக்கமாக மாறினால் குடல் அழுகிவிடும்.

பொது அறுவைச் சிகிச்சை அல்லது லேப்ரோஸ்கோப்பி மூலம் 'குடல் பிதுக்கம்' அறுவை மருத்துவம் நடைபெறும்போது, குடல் இறக்கத்தைத் தவிர்ப்பதற்காக 'prolene mesh' பொருத்தும் முறை நடைமுறையிலிருக்கிறது. இதன் மூலம் தசைக் கவர்களும் உறுதியடைகின்றன.

'ஹெர்னியா' என்பது சட்டை கிழிந்து விடுவது போன்றது. இதற்குத் தையல் போட்டுத்தான் சரி செய்ய முடியும். மெக்கானிக்கல் டிஃபெக்ட்க்கு மருந்து கொடுத்து குணப்படுத்த முடியாது. அறுவை சிகிச்சைதான் ஒரே வழி.

அடுத்த வாரம் கணையம் விசிட்!



அந்தரத்தில் தொங்குது பங்குச் சந்தை!



• அண்ணாமலை

இந்தியாவில் இருந்த இருபத்து மூன்று பங்குச் சந்தைகளில் மும்பை, சென்னைக்கு அடுத்த நிலையில் பரபரப்பாகக் கோலோச்சியது கோவைதான். இப்போது எப்படியிருக்கிறது? எட்டிப் பார்த்த போது பேரதிர்ச்சி. பங்கு வர்த்தகம் நடைபெற வேண்டிய டிரேட் ஹால் ஒட்டடை படிந்து இருண்டு கிடக்கிறது.

"பங்குச் சந்தைக் கட்டடம், மிக பிரமாண்டமாக இருக்க வேண்டும் என்பதற்காக, சிங்கப்பூர் பங்குச் சந்தை கட்டடத்தைப் பார்த்து விட்டு வந்து அச்சு அசலாக அதே போன்று ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் சதுர அடியில் கட்டப்பட்டது. இதில் இன்று ஒரு இலட்சம் சதுர அடியை வாடகைக்கு விட்டு விட்டோம்" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொல்கிறார் கோவைப் பங்குச் சந்தையின் முன்னாள் தலைவரும், டி.எஸ்.ஜே. ஸ்டாக் அண்ட் ஷேர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனருமான கே. அண்ணாமலை.

ஹர்ஷத் மேத்தா ஊழலுக்குப் பிறகு, பங்குச் சந்தை வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த, செபி கொண்டு வந்த பல்வேறு புதிய நடைமுறைகள் காரணமாக, பங்குத் தரகர்களுக்குப் பல வழிகளில் கடிவாளம் போடப்பட்டது. அதன் பிறகு 1995ல் தேசிய பங்குச் சந்தை அறிமுகப்படுத்தப்பட்டு, 'ஆன்லைன் டிரேடிங்' முறை வந்ததும், சென்னை, கோவை போன்ற நடுத்தரமான பங்குச் சந்தைகள் முற்றாக விழுந்து விட்டன. காரணம் இந்தச் சந்தைகளின் இரண்டாம் நிலை மார்க்கெட்டில் விற்கப்படும், வாங்கப்படும் பங்குகளுக்கான பணப்பட்டுவாடா முறை வெவ்வேறு கால அளவுகளில் இருந்ததால் பங்குகளின் விலையிலும் வித்தியாசம் இருந்து வந்தது. இதனால் முதலீட்டாளர்கள் அவ்வப்போது வாங்கி விற்று லாபம் பார்த்து வந்த பழைய முறை 'ஆன்லைன்' விற்பனையால் அடியோடு மறைந்துவிட்டது.

இப்போது பங்குசந்தையின் டிரேடு காலுக்குத் தரகரோ, முதலீட்டாளரோ வர வேண்டிய அவசியமில்லை. பங்கு விற்பனை அத்தனையும் கணிப்பொறி வழியேதான் என்றாலும் இப்போது தேசிய பங்குச் சந்தையும், மும்பை பங்குச் சந்தையும்தான் இந்தியப் பொருளாதாரத்தின் குறியீடுகளில் இடம் பெற்று வருகின்றன'' என்கிறார் அண்ணாமலை.

கோவைச் சிறப்பிதழ்



ஹோம தரிசனம் செய்யுங்கள்! யோக புருஷர்களாகுங்கள் !!

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும் ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும், அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு !

பேரன்புடையீர், வணக்கம் ! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சங்கடங்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, குதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொருவருக்காகவும், **மாதா மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல நல்வரங்களும் கிடைக்கவேண்டி, காலை 06.00 முதல் 10.00 வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ்** சார்பாக கீழ் கண்ட விவரப்படி சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்

ஜுரம், வியாதி மற்றும் துன்பங்களிலிருந்து நிவாரணம் அளித்து காப்பாற்றும் தன்வந்திரி பகவானை பிரார்த்தனை செய்து கொண்டால், நோய் நொடிகளிலிருந்து நிச்சயமாக நிவாரணம் பெறலாம். பயங்களை நீக்கி மன அமைதியையும், நிம்மதியையும நீண்ட ஆயுளும் பெறலாம். இத்தகைய பேராற்றல் மிக்கவரும், ஸ்ரீ விஷ்ணு பகவானின் அம்சமானவருமான ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கான **ஸ்ரீ தன்வந்திரி ஹோமத்தில்** கலந்து கொண்டு அனைத்து விதமான நன்மைகளையும் அடையலாம். தீராத வியாதிகள் நீங்கி திடமான உடல் உறுதியையும், தீர்க்க ஆயுளையும், ஸ்ரீ தன்வந்திரி பகவானின் அருளையும் பெற்று மகிழலாம்.

ஆவணி	10.09.03	புதன்	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	10.10.03	வெள்ளி	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	08.11.03	சனி	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	08.12.03	திங்கள்	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்
மார்கழி	07.01.04	புதன்	சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக	ஸ்ரீ மஹாமேரு பூஜையும், வாயு ஸுக்த ஹோமமும்
தை	06.02.04	வெள்ளி	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வரகலா பார்வதி ஹோமம்
மாசி	06.03.04	சனி	வீடு அலுவலகம் வாஸ்து தோஷங்கள் விலக	ஸ்ரீ வாஸ்து ஹோமம்
பங்குனி	05.04.04	திங்கள்	வழக்கு வியாஜ்யங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸுக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	சித்ரா பௌர்ணமியன்று		செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்
வைகாசி	வைகாசி விசாக பௌர்ணமியன்று		கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்
ஆனி	ஆனி பௌர்ணமியன்று		தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்
ஆடி	ஆடி பௌர்ணமியன்று		நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸுக்த - பஞ்ச ஸுக்த ஹோமம்

ஜோதிட சாஸ்திரசிம்மம், வாஸ்து சாஸ்திர விற்பன்னர், யோக ஆஞ்சனேய சக்தி பீடாதிபதி பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சக்தி பீடம், 177 / 84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5ல் சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ. 500- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ. 4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், இராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன பரிகாரத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும். பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீசீ ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான 'ஸ்ரீ விகனச மகரிஷி' யின் அபூர்வ புகைப்படத்துடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம், ஹோம பஸ்மம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான யந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகனச மகரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.



எடுத்த முயற்சிகளில் வெற்றிகளை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500, - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்


எண் 13, பொன்னம்பல வாத்தியார் தெரு, (ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 4.

Tel & Fax : 2461 6466, E-mail:siva siva @ vsnl.net



ஹோமத்தின் மூலம் தெய்வத்தை ப்ரீதி செய்து வேண்டியதைத் நிறைவேற்றிக் கொள்வதும் ஒரு சிறந்த வழி !

நாளெல்லாம் அலைந்து கால் வலி எடுத்திருந்தும் அன்று இரவு ஜக்குவுக்குத் தூக்கம் வரவில்லை. மகாபலிபுரத்தில் கண்ட அதிசயங்களெல்லாம், இரண்டாம்பட்ச மாகிவிட்டன. இந்தக் குட்டிக்கு என்ன ஆகிவிட்டது? திரும்ப வரும்போது என் னவோ கேட்டாளே? அது



என்ன? எப்படி என் மனக்குழப்பத்தை அவள் கண்டுபிடித்தாள்?

இதுதான், இந்தக் கேள்விதான் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

"ஜக்கு, நீ என் நிஜமான ஃப்ரெண்டுன்னா சொல்லிடு. என்னத்தை நினைச்சுண்டு கவலைப்பட்டுண்டிருக்கே? உன்னைப் பார்த்தாலே எனக்குப் பாவம் பாவமா இருக்கு..."

அதோடு அவள் நிறுத்திக் கொண்டிருந் தால் கூடப் பரவாயில்லை. எதையாவது சொல்லி சமாளித்து இருக்கலாம். ஆனால் தான் குரங்குடன் பேசிக் கொண்டிருந்ததை வேறு கேட்டிருக்கிறாள். அவள் வந்ததை எப்படி கவனிக்கத் தவறினோம்?

அவனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. "நீ சொல்லமாட்டேன்னா சரி. நீ இந்த மாதிரி நடந்துக்கறேன்னு நான் எங்கம்மா கிட்ட சொல்லி, உங்கம்மாவைக் கேக்கச் சொல்லுவேன்" என்று வேறு பயமுறுத்தி யிருந்தாள் குட்டி.

அவனுக்கு ஒரே சங்கடமாகப் போய் விட்டது. "நீ ட்ரு ஃப்ரெண்டுன்னா இதை உங்கம்மாகிட்ட சொல்லமாட்டே. இது காட் ப்ராமிஸ்'' என்று சொல்லி குட்டியின் வாயைக் கட்ட முடிந்துவிட்டாலும் அநா வசியமாக அவன் மனத்தில் சில சலனங்

11

மெல்லினம்

பா. ராகவன்

களை உண்டாக்கிவிட்டது குறித்து அவனுக்கு உண்மையிலேயே கவலையாகத்தான் இருந்தது.

ஒரு வேளை குட்டியைப் பொருட்படுத்தி எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் தன் பளு குறைந்துவிடக் கூடும். அவளும் சந்தேகங்களின்றி தனக்கு ஆறுதலாக இருக்கத் தொடங்கிவிடுவாள். ஆனால் எதை, எங்கிருந்து தொடங்கிச் சொல்லுவது?

அதுதான் அவனுக்குப் புரியவில்லை. வாயைத் திறக்கவே செய்யாமல் தன் மனத்திலிருப்பதை ஒரு பொட்டலமாகக் கட்டி எடுத்து அவள் மனத்துக்குள் வைத்துவிட முடியுமானால் மிகவும் நன்றாக இருக்கும். முடிந்த நேரத்தில் அவள் பிரித்து எடுத்துப் புரிந்து கொள்ளட்டும்.



அவன் மகாபலிபுரத்திலிருந்து புறப்படுகிறவரை அந்தக் குரங்கு அவன் கூடவே தான் வந்தது. போகும் வழியெல்லாம் அதுவும் ஒரு ஓரமாக, தான் பாட்டுக்குத்தன் பாதையில் போய்க் கொண்டிருப்பது போல.

அர்ச்சுனன் தவத்தைப் பார்க்க எல்லாரும் அந்த இருட்டுக் குகைக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது அவன் சற்றே தங்கி அதனைப் பார்த்துக் கேட்டான். "நான் கேக்கற எதுக்கும் பதில் சொல்ல மாட்டேங்கறே? அப்புறம் எதுக்கு என் கூட வரே?"

அது சிரித்தது. 'ஹ்ர்ர்ரும்... ருஹ்ம்ம்" என்று சொன்னது.

"என்னது? சமஸ்கிருதத்துல நீ சொல்ற பதில் எனக்குப் புரியலையா? இந்தக் கதையெல்லாம் வேணாம். தமிழ்ல சொல்லு. உனக்குத் தமிழ் தெரியும்னு எனக்குத் தெரியும். நீ இங்கிலீஷ்ல சொன்னாலும் எனக்குப் புரியும். உனக்கு இங்கிலீஷ் தெரியுமா?" என்று கேட்டான்.

அது மீண்டும் சிரித்தது. பிறகு பேச்சைக் கத்தரித்துவிட்டு, தானும் ஒரு சுற்றுலாப் பயணி மாதிரி சிற்பங்களைப் பார்க்கத் தொடங்கியது.

அவனுக்கு என்ன தோன்றியது என்றால்,

ஏதோ ஒரு காரணத்துக்காகக் கடவுளே அந்தக் குரங்கை அவனிடம் அனுப்பியிருக்கிறார். தெய்வீகக் குரங்குதான் அது; சந்தேகமில்லை. இல்லாவிட்டால் மகாபலிபுரத்தின் நூற்றுக்கணக்கான குரங்குகளில் எதுவொன்றுக்கும் இல்லாத அக்கறை இந்தக் குரங்குக்கு மட்டும் ஏன் உண்டானது? என்னத்துக்காக அது தன்னருகே அமர்ந்து, தன்னைப் பேசத் தூண்டியிருக்க வேண்டும்?

அது வம்புக்கு அலையும் குரங்கு அல்ல என்று அவனுக்கு உறுதியாகத் தோன்றியது. தன்னைப் பேசவிட்டு, பேசவிட்டு மனத்தைச் சுத்திகரிக்க அது திட்டமிட்டு செயல்படுவதாகவே நினைத்தான்.

ஒரு சாதாரண குரங்குக்கு இந்த புத்திசாலித்தனம் சாத்தியமில்லை. அது தெய்வீகக் குரங்காக இருப்பதானால்தான் முடிகிறது.

பஸ் ஏறும்போது ஜன்னலுக்கு வெளியே ஒரு டீக்கடைக் கூரையின்மீது உட்கார்ந்து இருந்த அந்தக் குரங்கைப் பார்த்து மானசீகமாகக் கேட்டான். "பேசாம என்கூட மெட்ராஸ் வந்துடேன்?"

ஹ்ர்ர்ர்ரும்... பாக்கலாம்" என்றது அது.

"அட சனியனே? தமிழ்தான் தெரியறதே. இன்னிக்கெல்லாம் ஏன் பின்ன என் உயிரை வாங்கினே?"

இப்போதும் அது சிரித்தது. பஸ் புறப்பட்டுவிட்டது. ஏனோ அது வராது என்று அவனுக்குத் தோன்றியது. ஒரு வகையில் அதுவும் நல்லதுதான். அது மட்டும் வந்து விட்டால் பிறகு குட்டியுடனோ, வெங்கடாஜலபதியுடனோ, தாத்தா பாட்டியுடனோ தன்னால் நேரம் செலவழிக்கவே முடியாமல் போய்விடும். வெங்கடாஜலபதி முறைக்கும். மம்மு சாப்பிடப்படுத்தும். இந்தக் குட்டிக் கடங்காரி "ஏன காய்விட்டுட்டே என்று கேட்டே கொல்லுவாள். தாத்தாவின் முட்டிவலி வாதவேங்கைத்தைலத்தை மீறிப் பெருகும்.

வேண்டாம். எல்லா உயிர்களையும், வலிக்க கிள்ளுவது தன் நோக்கமில்லை. ஆனால், தன் வலிக்குத்தான் ஒரு நிவாரணம் இல்லாமல் ஆகிவிட்டது. வயலட் புடைவை அணிந்த நிர்மலா. அவள் ஏன் செத்துப் போயிருக்கக் கூடாது? ஒரு வேளை செத்துப் போனவளின் உயிரைத்தான் அப்பா தன் டைரிக்குள் மயிலிறகு போல் எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாரோ?

தூங்கியது தெரியாமல் தூங்கி, விடிந்தது தெரியாமல் விழித்தபோது, ஹாலில் முற்றிலும் புதிதாகவும், அதே சமயம் நன்கு அறிமுகமானது போலவும் தோன்றிய ஒரு குரல் கேட்டது.

"ஜக்கு மாதிரி ஒரு ப்ரில்லியண்ட் பாய் திடீர்னு இப்படி சைலண்டா ஆயிடறதும் க்ளாஸ்ல எப்பப்பார் விட்டத்தைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்கறதும் சந்தேகத்துக்குரிய விஷயங்கள் மிஸ்டர் குமார். வீட்ல எதனா பிரச்னையா? திட்டினீங்களா? அடிச்சீங்களா? ஒண்ணுமில்லாம அவன் அப்படி ஆக முடியாது. சம்திங் ஷுட் பி தேர். முதல்ல அவனை நார்மலா ஆக்கப் பாருங்க. மகாபலிபுரம் கூட்டிக்கிட்டு போனீங்களா? குட். வெரி குட். ஒரு சேஞ்ச் இருக்கிறது நல்லதுதான். இந்தப் பக்கம் எங்க அங்கிள் வீட்டுக்குப் போயிட்டிருந்தேன். சட்டுனு மாலா மேடத்தை வாசல்ல பார்த்ததும் வந்து சொல்லிட்டுப் போயிடணும்னு தோணிச்சு. அதான். தேங்க்ஸ் ஃபார் யுவர் நைஸ் காப்பி. நான் வரட்டுமா?"

கடவுளே, சந்திரா டீச்சர் குரல்! ஐயோ! எதற்கு வந்தாள்?

குப்பென்று தூக்கம் ஒழிந்து, அடிவயிற்றில் பயம் பற்றிக் கொண்டது. டீச்சர் எதற்குத் தன் வீட்டுக்கு வர வேண்டும். தன்னைப் பற்றித்தான் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

வந்தது தெரியாமல் இப்படித் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறோமே? க்ளாஸில்

"எங்க புராடக்ட் ஒண்ணு வாங்கிப் பாருங்க மேடம்."

"இப்பல்லாம் இது மாதிரி பொருட்கள் கடையிலேயே ரொம்ப சீப்பா கிடைக்குதே...!"

"நேற்று எங்க கடையில பார்த்தப்போ வீட்டுக்கு வீடு வந்து சீப்பா விக்கிறாங்கன்னு சொன்னீங்களே?"

- தேனேரிப்பட்டி ஜெயச்சந்திரன்



அடிப்பாளோ? ஐயோ. சட்டென்று எழுந்து போய் குட் மார்னிங் டீச்சர் சொல்ல வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. உடனே வேண்டாம் என்றும் நினைத்தான்.

தனக்கு என்னவோ ஆகிவிட்டதாக குட்டி நினைக்கிறான். இப்போது டீச்சருக்கும் தெரிந்துவிட்டது. நாளை எல்லாருக்குமே தெரிந்துவிடப் போகிறது. எல்லாரும் கேட்கும்போது என்ன சொல்லுவது? எல்லாரிடமும் அப்பாவின் டைரியைப் பற்றியா சொல்ல முடியும்?

அன்று பார்த்த டைரி. படித்த டைரி. அதன்பிறகு வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தன்னையறியாமல் வேறு ஏதேனும் கிடைக்குமா என்று அவன் தேடிக் கொண்டே தான் இருக்கிறான். எதுவும் கிடைக்கக் கூடாது என்கிற பிரார்த்தனை உள்மனத்தில் இருந்தாலும் ஏதாவது அகப்படாதா என்கிற ஏக்கமும் இருந்தது. தனக்கு என்ன ஆகிவிட்டது என்று தன்னையே பலமுறை கேட்டுக் கொண்டான். எதுவுமே ஆகவில்லை என்று மேல் மனசு பதில் சொன்னாலும் உள் மனம் அதை ஆமோதிக்க மறுத்துக் கொண்டே இருந்தது.

ஒரே தீர்வுதான். அந்த டைரியை எடுத்துக் கொண்டு போய் அப்பாவிடம் காட்டி, இதான் விஷயம், இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டுவிடலாம் என்று தோன்றியது.

தள்ளிப் போடுவதில் ஒரு அர்த்தமும் இல்லை. இதோ, இப்போதே கேட்டுவிடலாம் என்று முடிவு செய்தான். அந்தக் கணம் அம்மா, தாத்தா, பாட்டி, வீடு, அதன் அமைதி எல்லாம் மறந்து, உடனடியாகத் தீர்த்துவிட வேண்டும் என்கிற எண்ணம் மட்டுமே அவன் மனமெங்கும் வியாபித்திருந்தது.

துள்ளி எழுந்து பாத்ரூமுக்குப் போனான். அவசர அவசரமாகப் பல் தேய்த்துத் துப்பி, முகம் கழுவிக் கொண்டான்.

சப்தம் கேட்டு, "எழுந்தாச்சா?" என்றபடி அம்மா சமையலறைக்குள் நுழைந்தாள். 'உம்' என்றபடி முகம் துடைக்கத் துண்டை எடுக்க அவன் புறக்கடைக் கதவைத் திறந்து கொடியை நாடிப் போனபோது 'ஹ்ர்ரும்" என்கிற குரல் கேட்டது.

'நீயா? வந்துட்டியா? எப்போ வந்தே?" அவனுக்கு ஒரே ஆச்சர்யமாகப் போய் விட்டது.

"நான் வந்து ஒன் அவர் ஆறது. காத்தால ஃபர்ஸ்ட் பஸ் ஏறி வரேன்" என்றது அது.



''ஊர்வலத்துல தலைவர் இந்திய மேப்பை அணைச்சுப் பிடிச்சபடி வர்றாரே ஏன்?''

''நாடு தழுவிய போராட்டமாம்!''

- வசந்தி வள்ளுவன்

"நான் டிசைட் பண்ணிட்டேன்!"

''தெரியும். அதுக்கு முன்னாடி ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திடணும்னுதான் ஓடி வரேன்.''

"என்னது?"

"இன்னிக்கு என்ன கிழமை?''

"இன்னிக்கு? மண்டே. ஏன் கேக்கறே?''

''சொல்லு. மண்டேவும் அதுவுமா உங்கம்மா இத்தனை சாவகாசமா வீட்டுல இருந்து என்னிக்கானா பார்த்திருக்கியா? புதுப்புடவை கட்டிண்டிருக்காளே, அதையாவது கவனிச்சியா?'

அவன் குழம்பினான். "இல்லையே? ஏன் இன்னிக்கு என்னது?''

"மக்கு" என்றது அது.

''ஞாபகமில்லையா? உங்கப்பா, அம்மாவோட வெட்டிங்டே இன்னிக்கு. எங்கியாவது டைரி அது இதுன்னு உளறிவைக்காதே. இதைச் சொல்லணும்னுதான் ஃபர்ஸ்ட் பஸ் பிடிச்சி ஓடி வரேன். இன்னும் நான் ப்ரேக் ஃபாஸ்ட் கூட சாப்டலை. ஒரே பசி.''

"ஓ" என்றான் ஜக்கு. தன்னையறியாமல் தன் வேகம் மட்டுப்படுவதையும் உணர்ந்தான். மனத்துக்குள் ஓய்ந்து போய் தளர்ந்து நடந்து உள்ளே போனான். அம்மா கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்துவிட்டு ஹோம் ஒர்க் நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு வாசலுக்குப் போய் உட்கார்ந்தான்.

"இங்கவாடா செல்லம்" என்று தாத்தா ஈசிசேரிலிருந்து கூப்பிட்டார். வெங்கடாஜலபதி அபூர்வமாக அப்போது தாத்தாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது



அமரர் கல்கி பிறந்த நாள் விழா

09.09.2003

(செவ்வாய்க்கிழமை)

மயிலை, பாரதிய வித்யாபவன் அரங்கம்

மாலை 6:00 மணி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுப் பரிசும் விருதும் பெறுவோர்:

இளம் இசைக் கலைஞர்கள்

காயத்ரி வேங்கடராகவன், எஸ். கார்த்திக்

தலைமை:

ஸ்ரீமதி வைஜயந்திமாலா பாலி

மாலை 6:45 மணி : **இன்னிசைக் கச்சேரி**

காயத்ரி வேங்கடராகவன்	:	பாட்டு
எஸ். வரதராஜன்	:	வயலின்
மனோஜ் சிவா	:	மிருதங்கம்
எஸ். கார்த்திக்	:	கடம்

அனைவரும் வருக!




தூள் கிளப்பறாங்க கொங்கு வாசகர்கள்!

பறந்து வா ஈயே!

கோவையில் ஒரு குட்டி சூதாட்டம். ஒரு சிறிய வட்டம் போட்டு விளையாடு பவர்கள் அனைவரும் அந்த வட்டத்திற்குள் ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை வைத்து விடுவார்கள். வெளியில் இருந்து பறந்து வரும் ஈ அந்த வட்டத்திற்குள் உள்ள யார் வைத்த நாணயத்தின் மீது முதலில் அமர்கிறதோ அவரே வெற்றி பெற்றவர். இதுதான் 'ஈக்காத விளையாட்டு'.

- கந்தர் கந்தரி, கோவை - 2.

அபூர்வ அழகி!



* காயத்ரி தேவி

விசுவாமித்திர மகா முனிவருக்கு அருள் புரிந்த ஒளி பொருந்திய காயத்ரி தேவிக்கு என்றே பிரத்யேகமாக உள்ள கோயில்கள் மிக மிக அபூர்வம். கோவை வடவள்ளியிலிருந்து பேரூர் செல்லும் சாலையில் (அஜ்ஜனூர் ரோடு) காயத்ரி தேவியின் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ காயத்ரிதேவி, ஐந்து திருமுகங்களுடன் அழகுற வீற்றிருக்கிறாள்.

இத்தகைய அற்புதமான ஒரு கோயில் இருப்பது கோவையிலேயே பலருக்குத் தெரியாது. - எம். சங்கரி, கோவை.

மலரும் காதல் பூக்கள்!

தைத்திரு நாளில் தமிழகத்தின் பல மாவட்டங்களில் 'ஜல்லிக்கட்டு' விளையாட்டு நடைபெறும். இது ஆபத்தும்கூட. ஆனால் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த நாளை ஓர் இனிய நாளாகக் கொண்டாடுகிறார்கள். இந்த நிகழ்ச்சி 'பூக் கொய்தல்' எனப்படும்.

மார்கழி மாதம் முழுதும் வாசலில் நீர் தெளித்துக் கோலமிட்டு சாணத்தில் பிள்ளையார் பிடித்து அதில் பூசணிப் பூ வைப்பார்கள் பெண்கள். அந்த சாணிப் பிள்ளையார்களை மாலைவேளைகளில் எடுத்து



வரட்டியாய்த் தட்டி வைப்பர். இந்த வரட்டிகளை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு வயற்காடுகளில் உரமாகப் போட்டுவிட்டு காட்டு மலர்களைப் பறித்துக் கூடைகளில் நிரப்பி வந்து முறைப்பையன்கள் மீது கொட்டி, சீண்டி விளையாடுவது உண்டு. ஒரு காதல் விளையாட்டாகவே நடைபெறும் 'பூக் கொய்தல்' கோவை மாவட்டத்தில் மட்டுமே மலரும் நிகழ்ச்சியாகும்.

புதிய யுக்தி!


கோவையில் உள்ள சில தியேட்டர்களில் பிற மொழி சினிமாக்களைத் திரையிடும்போது, திரைக்கதையைத் தமிழ் மொழியில் எழுதி வைக்கிறார்கள். சினிமா டிக்கெட்டுகளின் பின்புறம் விளம்பரங்களும் வெளியிடப்படுகின்றன.



உப்பு ஜவுளி

கோவை மாவட்டத்தில் திருமணத்துக்கு முன்பாக நடைபெறும் நிகழ்ச்சி 'உப்பு ஜவுளி'. திருமண வீட்டார் முதலில் கடைவீதி சென்று உப்பு வாங்கி, கூடைகளில் எடுத்துக் கொள்வர். அதனை பிள்ளையார் கோவிலில் வைத்து, திருமணம் நலமுடன் நடக்க வேண்டி பூசைகள் செய்வர். பின் அனைவரும் கடைவீதி சென்று கல்யாண ஜவுளி எடுப்பர். மதியம் சுற்றம் சூழ இனிய விருந்து உண்டு மகிழ்வர். இந்த இனிய நிகழ்ச்சிதான் 'உப்பு ஜவுளி'!


- சேலம் கே. வெங்கடேசன்



பக்தி நாயகி!

கோயம்புத்தூர் இராம்நகர் ஞானானந்த சத்குரு மகளிர் பஜன் மண்டலியை நடத்தி வரும் கோதை நாயகி, ஆன்மிகச் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். ஆண்டாள் திருக்கல்யாணம், ராதா கல்யாணம், திவ்ய நாம பஜன் சமயங்களில் கோதை நாயகியின் அபிநயமும், அவரது குழுவின் கோலாட்டமும், கும்மிப் பாடலும் காண்போரைப் பக்தி வயப்படுத்தும். இவர் 'பஜனாவளி' புத்தகமும் வெளியிட்டுள்ளார். - கோவை எஸ். திருமலை.

* கோதைநாயகி குழுவுடன்...



ஆழியாறு அணைக்கட்டு, அமராவதி அணைக்கட்டு, சிறுவாணி அணைக்கட்டு, பரம்பிக்குளம் அணைக்கட்டு போன்றவை கோவை மாவட்டத்தில் உள்ளன. இதில் சிறுவாணி அணைக்கட்டு மட்டும் குடிநீருக்குப் பயன்படுத்தப்படுகிறது. மற்றவை விவசாயத்திற்குப் பயன்படுகின்றன.

- எஸ். கபிலன், திருப்பூர்.

அவினாசி லிங்கேஸ்வரர் திருக்கோயில், பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம், ஈச்சனாரி பிள்ளையார் கோயில், வனபத்ர காளியம்மன் கோயில், காரமடை ரங்கநாதர் ஆலயம், மருதமலை, மாசாணியம்மன் கோயில் என கோவை மாவட்டத்திலுள்ள திருத்தலங்கள் மிகப் பிரபலம்.

- எம். வனிதா, திருப்பூர்.

கோவை சோமனூர் பகுதியில் மட்டும் ஒன்றே கால் இலட்சம் நெசவுத் தறிகள் செயல்படுகின்றன. இவ்வளவு அதிகமான தறிகள் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை.

- கே. சேகர், திருப்பூர்.

பாயா? கேர்ளா?



''நடிகை நளினாஸ்ரீ ரொம்ப வித்தியாசமானவங்கதான்.''

''எப்படி சொல்றீங்க?''

''டைவர்ஸ் நல்லபடியா முடிந்ததுக்காக திருப்பதி போய் சாமி கும்பிட்டுட்டு வந்திருக்காங்களே!''

- சீர்காழி விரேவதி

''டாக்டர் உங்க நர்ஸ் ஊசி போடும்போது ஊசி என் உடலுக்கு உள்ளேயே போயிடுச்சு...!''

''கவலைப்படாதீங்க! இந்த மாசம் அவங்க சம்பளத்துல பத்து ரூபாய் பிடிச்சுடறேன்...!

- வி. சாரதி டேச்சு



''நீங்க தயாரிக்கிற மெகா சீரியல்லே நிறைய கேரக்டரை திடீர் திடீர்னு சாகடிக்கிறீங்களே... ஏன்...?''

''சம்பள பாக்கி கேட்டா அப்படித்தான்!''

- தஞ்சை தாமு




''இருந்தாலும் உங்க பையனுக்குக் குறும்பு ஜாஸ்தி தான்!''

''என்ன செஞ்சான்?''

''உன் பிரண்ட் பத்தி காம்போஸிஷன் எழுதுடான்னா, பாய் பிரண்ட் பத்தியா, கேர்ள் பிரண்ட் பத்தியான்னு கேக்குறான்...!''

- தேவந்தி துரைராஜ்



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தனையொன்றுமில்லை

வேதவான்மயமானது பரமாத்மாவை எண்களின் மூலம் காட்டித் தருகிறது.

தேவதைகளுடைய சந்தஸ்ஸாக விளங்கக் கூடியது ஏக சந்தஸ் - ஒற்றைப் படை எழுத்துக்களைக் கொண்டது. மனுஷ்ய சந்தஸ் என்பதில் இரட்டைப் படை எழுத்துக்கள் அமைந்திருக்கும்.

வேத பாஷ்ய அதிகாரி வித்யாரண்ய சுவாமி சொல்கிறார், இதற்கெல்லாம் சாமான்யமான - கேவலம் ஒரு மனுஷனுக்கிருக்கிற புத்தியினாலே அர்த்தம் சொல்லிவிட முடியாது என்கிறார். எவ்வளவுதான் சாஸ்திர பாண்டித்யம் இருந்தாலும் கூட, வேத பாஷ்யங்களுக்கு அர்த்தம் சொல்ல வேண்டுமானால் ஈச்வர அனுக்கிரஹம் வேண்டும்.

அதனால்தான் வேத பாஷ்யத்தை ஆரம்பிக்கிறபோதே வித்யாரண்ய சுவாமி லக்ஷ்மி நரசிம்மரை தியானம் பண்ணுகிறார். அவன் அருள் இருந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்று பிரார்த்திக்கிறார்.

அந்த வேத பாஷ்யத்தை வாசிக்கச் சொல்லி இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

வேதம் என்றால் என்ன? வேதத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் யார்?... வேதத்தில் சொல்லப்படும் விஷயம் என்ன என்று கேள்வி கேட்டுக் கொண்டு, "நமக்கு இஷ்டத்தை உண்டு பண்ணுவதிலேயும் அனிஷ்டத்தை நிவர்த்தி பண்ணுவதிலேயும் அலௌகிகமான - நம்மால் பார்த்து உணர முடியாத - பரோக்ஷமான, கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களை வேதம் சொல்வதனால் அதற்கு வேதம் என்று பெயர்" என்று ஆரம்பித்து, விசேஷமான பாஷ்யம் ஒவ்வொரு மந்திரத்துக்கும் இயற்றுகிறார் வித்யாரண்ய சுவாமி.

எம்பெருமான் அருள் இல்லாவிட்டால் வேதத்துக்குப் பொருள் காண்பது அரிது

'ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்' இருக்கிறான் பரமாத்மா என்று மூன்று தடவை சொல்கிறார். இதிலே ஒவ்வொரு ஐந்தும் ஒன்றைக் குறிக்கிறது. முதல் ஐந்து என்ன...?

விசேஷமான வேத யக்ஞங்கள், பூத யக்ஞங்கள், பித்ரு யக்ஞங்கள், மனுஷ்ய யக்ஞங்கள், பிரும்ம யக்ஞங்கள் என பஞ்சமஹா யக்ஞங்களைக் குறித்து விசேஷமாக விவரிக்கிறது.


இந்த பஞ்ச மஹா யக்ஞங்கள் மிக முக்கியம். இவற்றைப் பண்ணாமல் இருக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். ஏனென்றால் இன்னொரு இடத்தில் வேதம் சொல்கிறபோது,

என்பதைத்தான் திருமழிசை ஆழ்வாரும் சொல்கிறார். பரமாத்மா அவன் என்பதைச் சொல்வதற்கு.

பூ நிலாய ஐந்துமாய், புனற்கண் நின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய், சிறந்த கால் இரண்டுமாய்
மீ நிலாயது ஒன்றும் ஆகி வேறு வேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே?

'மனிதன் பிறக்கும்போதே மூன்று கடன்களோடு பிறக்கிறான்' என்கிறது. பிறந்த பிறகு பூலோகத்தில் வைத்துக் கொள்ளும் கடன்களெல்லாம் வேறு...!

மூன்று பேருக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம்: ரிஷிகளுக்குக் கடன்பட்டிருக்கிறோம். அதே மாதிரி, தேவதைகளுக்குக் கடன்பட்டிருக்கிறோம்; பித்ரு தேவதைகளுடைய பிரபாவத்தைச் சொன்னேன்



அல்லவா.. அந்த பித்ரு தேவதைகளுக்கும் நாம் கடன்பட்டிருக்கிறோம்.

பிரும்மசாரியாக இருந்து கசடற வேதங்களை ஆசார்யரிடத்திலே கற்று, இந்திந்த மந்திரங்களுக்கு இவரிவர் மஹரிஷி, இது இந்த சந்தஸ்ஸிலே இருக்கிறது; இது இந்த மந்திரத்திலே விநியோகம் என்று மந்திரார்த்த ஞானம் தெளிந்து நிற்க வேண்டும்.

அந்த மாதிரி மந்திரம் சித்தி பெற்றால், ரிஷிகளுடைய கடனைத் தீர்த்தவனாவான். விச்வாமித்ரர், ஜமதக்னி என்று வேதத்தில் வராத மஹரிஷிகளே கிடையாது. வேதம் முன்பு தோன்றியதா, இல்லை ரிஷிகள் முன்னதாகத் தோன்றினார்களா என்று சந்தேகம் வரும்... வரப் போகிற ரிஷிகளைப் பற்றி வேதம் முன்பே சொல்கிறது. வருங் காலத்தில் என்ன நடக்கும் என்று வேதங்களெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆதலால், 'இப்படிப்பட்ட மஹரிஷிகளெல்லாம் இந்த வேதத்தைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள்; ரொம்ப சிரமப்பட்டு மந்திரங்களைக் காண்பார்கள்' என்று வேதம் முன் கூட்டியே சொல்லி வைத்து விட்டது.

நமக்கோ, ஒரு சிரமமும் கிடையாது. ரிஷிகள் அத்தனையையும் கண்டு எடுத்துக் கொடுத்து விட்டார்கள். அப்படி அவர்கள் செய்த பிறகு, இருக்கிற மந்திரத்தைச் சொல்வதற்கே நாம் சிரமப்படுகிறோம்! ஆனால் ரிஷிகள் சிரமப்பட்டு தபஸ் பண்ணி, அந்த மந்திரங்களை அனவரதமும் தியானம் பண்ணி, பல தடவை ஆவ்ருத்தி பண்ணி, ஆவ்ருத்தி ரஹிதமான மோக்ஷத்தை அடைவதற்காகத் திருப்பித் திருப்பிப் பண்ணிக் கொண்டேயிருந்தார்கள். மந்திரங்களுக்கு உள்ளீடான தேவதையினிடத்திலே அவர்களுக்கு விசேஷ அன்பு, பக்தி.

இன்னொரு இடத்தில் சாஸ்திரம் சொல்கிறபோது, ஒரு மந்திரத்தில் நாம் சித்தி அடைய வேண்டுமானால், அந்த மந்திரம் நமக்குப் பலனைக் கொடுக்க வேண்டுமானால், அந்த மந்திரம் லோகத்துக்கு க்ஷேமத்தைக் கொடுக்க வேண்டுமானால், அந்த மந்திரத்தைச் சொல்லக் கூடியவர் மூன்று விஷயங்களை கவனிக்க வேண்டும் என்கிறது.

மந்திரத்தினிடத்திலே ரொம்ப பக்தி, பகுமானம் இருக்க வேண்டும். ஓர் ஆசார்யரிடத்திலே நிற்கிறபோது எப்படி பக்தியோடு நிற்கிறோமோ, பவ்யமாக பகவானுக்கெதிரிலே நின்றால் எப்படி நிற்கிறோமோ, அந்த மாதிரி மந்திரோச்சாரண சமயத்திலே

அருள்வாக்கு

மஹான்கள் வைராக்யத்தின் மேல் ராஜ கௌரவத்தைப் புறக்கணித்தார்கள். கவிகளாகவே இருந்தவர்கள் மான உணர்ச்சியின் மேல் இப்படிப் பண்ணியிருக்கிறார்கள்.

மஹான்கள் மான உணர்ச்சிக்கு மேலே போனதால் மானாபிமானங்களை விட்டு விட்டவர்கள். மஹான்களாக இல்லாத மற்ற ஜனங்கள் மானத்தை விட்டு ஹீனமாகப் பிழைப்பதை அதோடு சேர்த்து நினைப்பதற்கில்லை. என்ன அவமானம் வேண்டுமானாலும் பட்டுக் கொண்டு ஆஸ்தான கவி

– 'இப்படிப்பட்ட உயர்ந்த மந்திரத்தை நாம் சொல்கிறோம். அதை ஆசார்ய முகமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம்' என்று ரொம்ப பக்தியோடு இருக்க வேண்டும்.

– இதைத்தான் சொல்கிறது சாஸ்திரம் முதலில்.

'மந்திரம்' என்பதற்கு என்ன பொருள் என்றால், யார் அதை சுஸ்வரமாக, நல்ல முறையிலே உச்சரிக்கிறார்களோ, அவர்களை அது ரக்ஷிப்பதனாலே மந்த்ரம் என்று பெயர்.

அதற்கு மேலே போய், அந்த மந்திரத்துக்கு உள்ளீடான தேவதை – அதில் எந்த தேவதை சொல்லப்படுகிறதோ அந்த தேவதையிடத்திலே விச்வாசம் இருக்க வேண்டும். 'ஒரு நாளைக்குப் பதினொரு தடவை சொல்லச் சொன்னார், சொல்கிறேன்' என்று ஏதோ சொல்லிவிட்டு, 'நாற்பத்தெட்டு நாட்களாக இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், பலனையே காணோமே..!' என்று ஒருத்தர் சொன்னால் அதற்குப் பலன் ஏற்படுமா என்ன!

அப்படி இருக்கக் கூடாது. மந்திரத்துக்கு உள்ளீடான தேவதையினிடத்திலே விசேஷ விச்வாசம், பக்தி நமக்கு ஏற்பட வேண்டும்.

ஆசார்யரிடத்தில் பக்தி இல்லாமல், அவர் சொல்லிக் கொடுத்ததை மாத்திரம் கேட்டுக் கொண்ட பிறகு, 'எங்கள் வம்சமே பண்டித வம்சம்; இவர் என்ன எனக்குச் சொல்லிக் கொடுத்து விட்டார்...!' என்ற எண்ணம் வரக் கூடாது; அகங்காரம் கூடாது.

ஆகையினாலே, ஆசார்ய பக்தியோடு,

என்ற பெரிய பெயரில் இருந்துவிட்டால் போதும் என்று புகழ், ஸன்மானம் முதலியவற்றுக்காக மானத்தை விட்டால் அது ரொம்பவும் குறைவு. அப்படியில்லாமல் தீரத்துடன், துணிச்சலுடன் 'இன்டிபென்டென்டா'க (ஸ்வதந்த்ரமாக) ஒரு கவி இருந்தானென்றால் அதை அவனுடைய ஸ்டேஜை வைத்துப் பார்க்கும்போது விசேஷமாகப் போற்றிக் கொண்டாடத்தான் வேண்டும். நாம் இருக்கிற ஸ்டேஜில் நாமும் ஸ்வய லாபத்துக்காக மானத்தை விடாமல் அவர்களைப் போலத்தான் இருக்கணும் என்று பாடம் பெறவேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



மந்திரத்தினிடத்திலே பக்தியோடு, மந்திரத்துக்கு உள்ளீடான தேவதையினிடத்திலே பக்தியோடு யார் பூரண விச்வாசத்துடன் சொல்கிறார்களோ, அவர்களுக்குத்தான் மந்திர பலன் விளையும்.

இவ்வாறு நாம் மந்திர ஞானமும் மந்திரார்த்த ஞானமும் அடைந்தோமானால் ரிஷிகளிடத்தில் பட்ட கடனைத் தீர்த்துக் கொள்ளலாம்.

பிரும்மசாரியாக இருக்கிறபோதே இந்தக் கடன் தீர்ந்து போய்விடுகிறது.

பிரும்மசர்ய விரதத்தையே இரண்டாகப் பிரித்திருக்கிறது சாஸ்திரம். கல்யாணம் ஆகிற வரை பிரம்மசாரியாக இருத்தல் ஒரு வகை. நைஷ்டிக பிரம்மசாரி இன்னொரு வகை...

நைஷ்டிக பிரம்மசாரி என்றால் கல்யாணம் இல்லாமல் அப்படியே இருந்து விடுதல். பீஷ்மாச்சார்யார் அப்படியே இருந்து விட்டார்.

ஒருவன் கல்யாணம் பண்ணிக் கொள்கிறான்; ஒரு கன்னிகையைக் கைப்பிடித்து கிரஹஸ்தாசிரமம் என்கிற உயர்ந்த இல்லறத்தைக் கைப்பற்றுகிறான்.

இந்த இல்லறத்திலே இரண்டு கடன்கள் தீருகின்றன. தனக்கு விதிக்கப்பட்ட மஹா யக்ஞங்களெல்லாம் பண்ணி, 'எங்களுக்கு க்ஷேமம் ஏற்படட்டும் என்று வேண்டி இந்திரனை உத்தேசித்துப் பண்ணக் கூடிய யக்ஞம். – இந்திரன் என்றால், இந்திரனுக்கு அந்தர்யாமியான பகவான்தான் சந்துஷ்டி அடைகிறான். தேவதைகளுக்கு நாம் பட்ட கடன் தீர்கிறது. நமக்கு விசேஷ பலனை பகவான் தருகிறான்.

வம்சோத்தாரகனான உத்தம பிள்ளை பிறந்தானானால், பித்ரு தேவதைகளெல்லாம் சந்தோஷப்படுகிறார்கள்.

வம்சம் விளங்க குழந்தை பிறந்தது என்று கேட்டவுடனேயே அந்த தந்தை இருக்கிறானே.... அவன் கிடுகிடுவென்று ஓடி ஒரு நீர் நிலையிலே போய்த் தடாலென்று சந்தோஷத்தில் குதிக்கிறான். அவன் குதித்த வேகத்தில் தீர்த்தம் மேலே எழுகிறது. அதைப் பித்ரு தேவதைகள் அர்க்கியமாக ஏற்றுக் கொள்கிறார்கள். 'இந்த வம்சத்திலே ஓர் உத்தமமான பிள்ளை பிறந்தான்' என்று மகிழ்ச்சி கொள்கிறார்கள்.

அதனால்தான் 'சுமங்கலீர்யம்' என்று ஆரம்பித்துச் சொல்லும் ஆசீர்வாத மந்திரம் ஸ்த்ரீகளுக்கான மந்திரம் இது... அது என்ன சொல்கிறது?... நீ தீர்க சுமங்கலியாக இருக்க வேண்டும். அது மட்டுமில்லை, பத்து பிள்ளைகள் பெற்று, பதினொராவது பிள்ளையாக உன் பார்த்தாவை நீ நினைக்க வேண்டும்' என்கிறது. ஏனென்றால், கடைசி பிள்ளையினிடத்திலேதான் அம்மாவுக்கு ஆசை அதிகமாக இருக்குமாம். அதனால் கணவனை பதினொராவது பிள்ளையாக நினைக்க வேண்டும் என்றது.

நிஸ்சயதார்த்தத்தன்று ஒரு மந்திரம் இன்றைக்கும் சொல்லப்படுகிறது. பெண்ணுக்குப் புடைவையைக் கொடுக்கிற போது சொல்கிற மந்திரம். என்ன சொல்லியிருக்கிறது அந்த மந்திரத்திலே...?

(வளரும்)



காக்க... காக்க...


(ஓட்டுக் கேட்க... கேட்க...)

கல்யாண மஹால் - முகூர்த்த நேரம்

"போலீஸ் நமஹா! என்கௌண்டர் நமஹா! ஹீரோயிசம் நமஹா! இரத்த ஆறு நமஹா! தாதாக்கள் நமஹா! ஜோதிகா இளைச் சுட்டாங்க நமஹா!"

"ஐயா! புரோகிதரே மந்திரத்தை மாத்திச் சொல்றீரே!"

"மன்னிச்சிடுங்கோ! கண் விழிச்சு 'காக்க காக்க' நைட் ஷோ பார்த்தேன்! படம் பாதிச் சுடுத்து!"



காவல் பயிற்சிக் கல்லூரி - அணிவகுப்பு

"பரேட்! அட்டேன்ஷன்!"

"டேய் இளங்கோ! நம்மள மாதிரி ஐ.பி.எஸ். டிரைனிங் முடிச்சுட்டு ஃபிரெஷ்ஷா வேலைக்குச் சேர்ற இளம் அதிகாரிகளை என்கௌண்டருக்குத்தான் பயன்படுத்துவாங்கன்னு இயக்குனர் அவரா ஒரு முடிவுக்கு வந்துருக்காரே கவனிச்சியா?"

"தமிழ் சினிமாலே இதெல்லாம் சகஜமப்பா! என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்ட்டா வர்ற வெற்றிச் செல்வன் (சூர்யா) தம் சகாக்களோடு சேர்ந்துகிட்டு 'டப்பு, டுப்பு'ன்னு சுட்டுத் தள்றார். ஆனால்





கடற்கரை - படகுமறைவில் காதலர்கள்

"என்னங்க ஜோதிகாவை இப்படி அநியாயமா கொன்னிருக்கணுமா?"

"படத்துலே பளிச்சுன்னு போல்டா தெரியுற விஷயமே அதான்! ஜோதிகாவை மட்டும் டைரக்டர் கொல்லாமல் விட்டிருந்தார்ன்னு வைச்சுக்கோ வழக்கமான சினிமா ஆயிருக்கும்!"

"ஒரு உயிரோட மதிப்பு தெரியாமல் பேசறீங்களே!"

"நீ வேற! நாம இரண்டு பேரும் ஜோடியாகப் போய் எத்தனை அறுவைப்படம் பார்த்திருக்கோம். இது எத்தனையோ மடங்கு மேல்!?"



என்கௌண்டருக்கு முன்னாடி இட்டமிடுறதுதான் ரொம்ப சுவாரஸ்யமான விஷயமே! அதை ஒரு என்கௌண்டருக்காவது பயன்படுத்தி இருந்தா இன்னும் அசத்தலா இருந்திருக்கும்."

"சரியாச் சொன்னடா! அந்த சுபாரி கில்லிங் தாதா, பாண்டியா பய ('யுனிவர்சிட்டி' ஜீவன்) கூட என்னமா திட்டம் போடுறான். அவனைப் பார்த்தாலே கட்டுக் கொன்னுடலாம்னு நம்ம கை துறுதுறுக்குதுப்பா."

"ஸ்டாண்ட் அட் ஈஸ்!"

"ஹாரிஸ் ஜெயராஜ் பாட்டெல்லாம் கேட்டுக்கிட்டே இருக்கலாம் போலிருக்கு."

"கவிஞர் தாமரைக்கு நல்ல பிரேக் கிடைச்சுடுச்சுப்பா."

"சூர்யா மட்டும் என்ன! ரொம்ப டெடிகேட்டடா போலீஸ் ஹேர்கட் வெட்டிக்கிட்டு, புஜத்தைச் செதுக்கிக்கிட்டு பிஸ்டலோட பாயறப்போ டாம் குருஸ் ஞாபகம் வருதே!"

"பரேட்! அபவ்ட்டர்ன்!"

"போலீஸ்காரன் குடும்பத்துக்கு எத்தனை ரிஸ்க் இருக்குன்றதைப் இயக்குநர் பொட்டுல அடிச்ச மாதிரி சொல்லியிருக்கார் பார்த்தியா!"

"எஸ்!எஸ்! சூர்யாவாலே நிம்மதியா லவ் பண்ணக்கூட முடியலே! அதுக்காக தலை, முண்டம், கட்டை விரலையெல்லாம் டாகுமெண்டரி லெவலுக்குக் காட்டறது குரூரம்."

"பரேட்! டிஸ்பர்ஸ்."

— விஷ்ணுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

வே. முத்துக்குமார்




தேர்...

தலைப்பாகை சுழற்றி
தர்மகர்த்தா சுற்றியவுடன்
வடம் பிடித்து இழுக்கப்படும்
தேர்.
எலுமிச்சம்பழங்கள் நசுக்கி
மெல்ல நகரும்
உபயதாரர் பெயர் பொறித்த
சக்கரங்கள்.
திண்ணையில் நின்றுகொண்டு
கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள்
வடம் பிடிக்க முடியாத
பெரிசுகள்.
தன் வயதொத்த பெண்களிடம்
தங்களை வீரர்களாகக்
காட்டிக் கொள்ள முனைந்து
தடிபோடுவார்கள் இளசுகள்.
''அனாதரக்ஷகா...
ஆபத்பாந்தவா..''
தேரின் மேலமர்ந்து கொண்டு
மைக்கில் கோஷங்கள் எழுப்பி
புல்லரிக்க வைப்பான் பூசாரி.
தோரணங்கள் ஊஞ்சலாட,
விசாலமான வீதிகளில்
அசைந்தாடி வருகிற தேர்
அற்புதமாய்த் தானிருந்தது
பின் சக்கரத்தில் சிறுவனொருவன்
மாட்டிக்கொண்டு
உயிரிழக்கின்ற வரையில்...



மேஷம்:

* பண நடமாட்டம் தாராளம்.
* எடுத்தக் காரியத்தில் வெற்றியுண்டு.
* கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு ஏற்படும்.
* பெண்களுக்கு உற்சாக வாரம்.




ரிஷபம்:

* தைரியம் அதிகரிக்கும்.
* புதுமுயற்சிகள் இப்போது வேண்டாம்.
* கூட்டுத் தொழில் அமோகம்.
* சொத்து விவகாரத்தில் திருப்பம் வரும்.



மிதுனம்:

* பயணங்களால் நன்மை உண்டு.
* எதிர்பார்க்கும் நல்ல செய்தி வந்து சேரும்.
* வரவேண்டிய தொகை வந்து சேரும்
* குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.




துலாம்:

* உடல் நலத்துல கவனம் தேவை.
* வேலை விஷயமா வெளியூர் / வெளிநாடு பயணம் போக வாய்ப்பிருக்கு.
* கணவன் மனைவி உறவு நிலை இனிக்கும்.
* கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும்.



விருச்சிகம்:


* எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயம்.
* இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் விலகும்.
* கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும்.
* சிலர் புதுவீடு வாங்க, கட்ட வாய்ப்பிருக்கு.



தனுசு:

* பொருளாதார நெருக்கடி விலகும்.
* எதிர்ப்புகள் மறையும்.
* புதிய வேலை முயற்சிகள் கைகொடுக்கும்.
* குடும்பத்தில் உற்சாகம் கரை புரளும்.

நடக்குமென்பார்; நடக்கும்!



கடகம்:

* இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் விலகும்
* ஊதிய உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும்.
* எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.
* குடும்பத்திலும் சுமுகமான உறவு ஏற்படும்.




சிம்மம்:

* சிக்கலான சூழ்நிலையையும் வெற்றிகரமா மாற்றுவீங்க.
* கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும்
* புதிய சொத்து சேர்க்கை நிகழும்
* உடல் ஆரோக்கியம் மேம்படும்.




கன்னி:

* பண வசதிக்குப் பஞ்சமில்லை.
* அலுவலக விஷயத்தில் கவனம் அவசியம்.
* புதியவங்ககிட்ட பழகும்போது எச்சரிக்கை அவசியம்.
* செலவு கட்டுக்கடங்காது, சிக்கனம் அவசியம்.



மகரம்:

* மனசுல துணிவு கூடும்
* அலுவலகத்தில் மேலதிகாரி பாராட்டுக் கிடைக்கும்.
* கடன் தொல்லை விலகும்.
* பெண்களுக்கு உற்சாகமான வாரம்.



கும்பம்:

* எல்லோரிடமும் சுமுகமாகப் பேசுவது நல்லது.
* புதிய பொறுப்புகள் வந்து சேரும்
* எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.
* குலதெய்வப் பிரார்த்தனை நிறைவேறும்.



மீனம்:

* புதிய முயற்சிகள் வெற்றி தரும்.
* சின்ன சின்ன பிரச்னைகள் வந்தாலும் பெரிசா கவலைப்படத் தேவை யில்லை.
* கொடுக்கல் வாங்கல் உதவும்.
* எதிலும் நிதானம் அவசியம்.

செப்டெம்பர் 3 முதல் 9 வரை



6 கிராமம் நகரம் மாநகரம்



நா. முத்துக்குமார்

அப்போது தான் தலைக் குளித்த ஓர் இளம் பெண்ணின் கூந்தல் வகிட்டைப் போல கிராமங்களிலிருந்து ஒற்றைய டிப் பாதைகள் பிரிகின்றன. கொஞ்சம் கூட அகலமின்றி... நீளமாக உடல் சிறுத்து... ஒல்லியாக இருப்பது குறித்து ஒற்றையடிப்பாதைகள் வருத்தப்படும் போதெல்லாம் இருபுறமும் உள்ள தும்பைச் செடிகளும் காட்டுப் பூக்களும் அவற்றுக்கு ஆறுதல் சொல் கின்றன.

ஒவ்வொரு இரவும் நில வொளியில் கிராமம் தூங்கி விட்ட பிறகு ஒற்றையடிப் பாதைகள் விழித்துக் கொள் கின்றன. அவற்றின் அருகே உள்ள புற்கள் பகலெல்லாம் காட்டிய கரும்பச்சை வண் ணங்களை இழந்து விட்டு இரவையும் நிலவையும் குழைத்து வேறு வண்ணத்திற்கு மாறிவிடுகின்றன.

ஒற்றையடிப் பாதைகளில் கணக்கற்ற கால்தடங்கள்

தினந்தோறும் பதிந்து கொண்டே இருக்கின்றன. ஒரு காலடிச் சுவடு கூட இன்னொன்று மாதிரி இருப்பதில்லை. தனக்கு மிகவும் பிடித்தமான காலடிச்சுவடுகளை மட்டும் அவை மண்ணின் இதயத்தில் சேமித்து வைத்துக் கொள்கின்றன.

காலங்களுக்கும் முன்பு தன்னை உருவாக்கிய முதல் காட்டுமிராண்டியின் காலடியை மட்டும் அவை பூக்களால் வேலி கட்டி கவனமாக பத்திரப்படுத்தி வருகின்றன. இடம் பெயர்தலின் பரவசமும் பயணம் குறித்த அச்சமும் பிரபஞ்சத்திற்கு எதிரான தேடலும் கொண்டு முன் பின்னாக நடந்து சென்ற அந்த காலடிச் சுவடு இன்னமும் ரேகை அழியாமல் உறைந்து போயிருக்கிறது. தன்னுள் பதியும் ஒவ்வொரு சுவட்டையும் அந்த மூலச் சுவட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதே ஒற்றையடிப் பாதையின் ஒரே பொழுது போக்கு.

நடை வண்டியின் உதவியுடன் பூமியை உதைத்துக் கொண்ட... எழுந்து, விழுந்து, நடந்து செல்லும் குழந்தைகளின் காலடித் தடங்களை ஒற்றையடிப் பாதைகள் மலரச்சியுடன் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்கின்றன. தன்னை கண்டுபிடித்த முதல் காட்டுமிராண்டியின் சுவடுகளில் உள்ள உணர்ச்சிகள் இந்த பிஞ்சுக் கால் தடங்களிலும் இருப்பது குறித்து இரவெல்லாம் அவை ஆச்சரியப்பட்டுக் கொண்டே இருக்கும்.

கிராமத்திலிருந்து கிளை பிரிந்து செல்லும் ஒவ்வொரு ஒற்றையடிப் பாதையும் தன்னுள் ஒரு பிரத்யேக இரகசியத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆற்றை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் நனைந்த காலடிச் சுவடுகளில் நீர்த்தாவரங்களின் பச்சையம்.

சுடுகாட்டை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் தளர்ந்த காலடிச் சுடுகளில், உதிர்ந்த பூக்களின் கண்ணீர்த் துளிகள்.

கருவேலங்காட்டை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் கனத்த காலடிச் சுவடுகளில் சமையலுக்கான விறகு பொறுக்கப் போகும் கர்ப்பிணிப் பெண்களின் பெரும் வலி.

தென்னந்தோப்பை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் பயந்த காலடிச் சுவடுகளில், காதலும் களவும் நிரம்பிய ஆண் பெண் இருவரின் ஏகாந்தச் சிதறல்கள்.

புதர் மறைவுகளை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் அழிந்த காலடிச் சுவடுகளில் வண்டுகள் மிதக்கும் கள்ளுப் பானைகளின் தளும்பல்.

களத்து மேட்டை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையின் பசித்த காலடிச் சுவடுகளில் சிட்டுக் குருவிகள் கொத்திப் போகும் நெல் மணிகள்.

ஒற்றையடிப் பாதைகளின் சகோதரனாகத் தானிருப்பது குறித்து செம்மண் சாலைகளுக்கு உள்ளூர கொஞ்சம் பெருமிதம் உண்டு. வாடம் கட்டிய காலடித் தடத்துடன் மாடுகள் பாய்ந்து செல்லும் கட்டை வண்டிகள், செம்மண் சாலைகளில் புழுதி கிளம்பி பறக்கும் போது மாடுகளின் கழுத்துச் சங்கிலி ஓசையிடத்தில் தங்கள் பெருமிதத்தை அவை பகிர்ந்து கொள்ளும்.

தன்னுள் கலக்கும் ஒற்றையடிப் பாதைகளின் இரகசியங்களை செம்மண் சாலைகள்




பொறுமையாகக் கேட்டு ஆற்றுப்படுத்துகின்றன.

ஒற்றையடிப் பாதைகளின் வருத்தம், சஞ்சலம், வெட்கம், கோபம், அச்சம், ஆனந்தம் என அனைத்து உணர்ச்சிகளையும் உள்வாங்கி, செம்மண் சாலைகள் மேலும் சிவக்கின்றன. செம்புலப் பெயல் நீர்ப்போல அவற்றின் அன்புடை நெஞ்சம் புழுதிகளைப் பரிமாறிக் கொண்டு ஒற்றையடிப் பாதைகளை வரவேற்கின்றன.

செம்மண் சாலைகளின் கனவில் அவை ஆற்று மணலைப் போல வெண்மையாய் இருந்த காலம் வந்து வந்து போகும். கூர் வாளுக்கும், கேடயத்திற்கும், முற்பட்ட காலமது. துரோகமும், வன்மும், சொற்களாக மாறி... சொற்களுக்கு அர்த்தம் கூடி.... அகராதியில் நுழையாத காலம்.

முதல் ரத்தத்துளிகள் கீழே சிந்தியபோது சாலையின் மணல்துகள் கள் அந்த உயிரின் அடர்த்தியையும் ஏதோ சொல்லத் துடிக்கும் வெப்பங்களின் பிசுபிசுப்பையும் ஏந்திக் கொண்டு சிவந்தன. அந்த ரத்தம் உலர்ந்த பிறகும் மணல்துகள்கள் குற்ற உணர்ச்சி மேலோங்க பனித்துளிகளால் இரவெல்லாம் தங்களைக் கழுவிக் கொண்டிருந்தன.



''நான் எடுத்த படத்துக்கு 'சேற்று நிலம்'னு பேர் வச்சிருந்தா பொருத்தமா இருந்திருக்கும்னு விமர்சனம் செய்திருக்கிறீர்களே, ஏன்?''

''சொதப்பலா இருக்கே!''

— தஞ்சை தாமு

அடுத்தடுத்த யுத்தங்களின் ரத்தத்துளிகள் அந்த மணல்துகள்களை நிரந்தரச் சிவப்பாக மாற்றிவிட்டன. ஆடு, மாடு, கோழி, மனிதன், வண்டிகள் என தன்னைக் கடக்கும் ஒவ்வொன்றின் மீதும் செம்மண் சாலைகள் தன் குற்ற உணர்ச்சியின் புழுதியை வாரி இறைக்கின்றது.

நூற்றாண்டுகளின் புழுதியைத் தாங்க முடியாத மனிதன் அதை தார்ச்சாலைகளால் மூடுகிறான். தார்ச்சாலைகள் காட்டுமிராண்டிகளை மாநகரத்திற்கு அழைக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகளின் வழியாக மாநகரம், நகரம் மற்றும் கிராமங்களுக்கு நீட்டும் கறுப்புக் கொடிகளாக, தார்ச்சாலைகள் நீள்கின்றன.

மாநகரங்களின் தார்ச்சாலைகளின் கீழே செம்மண் சாலைகளின் சமாதிகள். அதற்கும் கீழே சேர்த்து வைக்கப்பட்டுள்ள காலடித் தடங்களுடன் ஒற்றையடிப் பாதைகள். செம்மண் சாலைகளையும், ஒற்றையடிப் பாதைகளையும், தோண்டிப் பார்க்கும் உக்ரத்துடன் மாநகரத்துச் சூரியன் தார்ச்சாலைகளை உருக்கிக் கொண்டிருக்கிறது.

தார்ச்சாலைகளில் கால் தடங்கள் பதிவதில்லை. செருப்பில்லாதவர்களையும் கனத்த பூட்ஸ் இல்லாதவர்களையும் அவை அனுமதிப்பதில்லை. சிவப்பு, மஞ்சள், பச்சை என அவை விளக்குகளால் வழி காட்டுகின்றன.

மாநகரத்தின் தார்ச்சாலைகள் பாம்புகளைப் போல் வளைந்து வளைந்து நகரம் தாண்டி கிராமங்களுக்குள்ளும் நுழைந்து விடுகின்றன. களத்து மேடுகளில் பன்னாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகளில் இரும்புக் குழாய்கள் மேகம் நோக்கி கரும்புகை கக்கிக் கொண்டிருக்கின்றன. முன்பு நெல் தூற்றிக் கொண்டிருந்த வயல்களின் மேல் எழுப்பப் பட்டுள்ள கட்டடங்களை நோக்கி தார்ச் சாலைகள் படையெடுக்கின்றன.

தூரத்திலிருக்கும் வயல்வெளிகளில் இருந்து கறுத்து, உடல் சுருங்கிய விவசாயிகள் நெற்தாள்களை சுமந்து கொண்டு தேசிய நெடுஞ்சாலைக்கு வருகிறார்கள். தார்ச்சாலைகளில் நெற்கதிர்கள் பரப்பி வைக்கப்படுகின்றன. யானை கட்டி போர் அடிக்கையில் நெல் தூற்றிய முறங்கள் சாலையோர புளியமரத்தில் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு விவசாயி நெற்தாள்களை அள்ளி எடுத்து மாநகரத்தின் மீதிருக்கும் தன் கோபங்களையெல்லாம் ஒன்று சேர்த்து தார்ச் சாலையின் மேல் சன்னதம் கொண்டு உக்கிரமாக அடிக்கிறான். மாநகரம், அவன் மேலிருக்கும் வன்மத்தை வாரிச் சக்கரங்களின் வழியாக நெற்கதிர்களின் மேல் ஏற்றிவிட்டுச் செல்கிறது.

(சந்திப்பேன்)



கலாசாரம் காக்கும் கோலா!

சுஷ்மாவா சும்மாவா! பெப்ஸி கோக் ஜோடிக்கு எப்படி வரிந்து கட்டிக் கொண்டு நற்சான்றிதழ் தந்திருக்கிறார் பாருங்கள். மைசூர் விஞ்ஞான - சுற்றுச் சூழல் ஆய்வு மைய இயக்குனர் சுனிதா நாராயண் சுஷ்மாவுக்குச் சளைக்காமல் பதில் சொல்லியிருக்கிறார். தங்கள் ஆய்வும் முடிவும் சரியே என்றும், குடிநீர் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம், கோலா நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதில்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். சட்டத்தின் அனுமதி, அங்கீகாரத்தோடு அந்நிறுவனங்கள் பூச்சிகொல்லி கலந்த நீரைப் பயன்படுத்தி பானங்கள் உற்பத்தி செய்கின்றன என்று அடித்துச் சொல்லியிருப்பது திருப்தியாயிருக்கிறது.

இங்கே நமது கிரிக்கெட் வீரர்கள் அரவணைப்பில் அன்னிய பானங்கள் அமோகமாய் வெற்றி பெற, துருக்கியில் மாற்றுப் பானம் தயாரித்து நடிகர் ஷெவி சேஸைக் கொண்டு விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். பானத்தின் பெயர் கோலா டர்கா. சேஸ் அதைக் குடித்ததுமே தாடி மீசை முளைத்த தூய துருக்கியனாக மாறுவது போல் காட்சிஅமைப்பு!...கோலா பானங்கள் உள்நாட்டுக் கலாசாரத்தைக் கெடுக்கும் என்று கருதுவதால் இந்த மாற்றுப் பிரசாரமாம்!



• சுஷ்மா சுவராஜ்

குத்புத்தின் அன்ஸாரி யாரென்று தெரியுமா...?

"தெரியாது" என்று சொல்லும் அத்தனை பேருக்கும் தெரியும். குஜராத் கலவரம் நடந்த போது பீதியும் துயரமும் ததும்பும் அவர் முகத்தைப் புகைப்படம் எடுத்துப் போட்டு பத்திரிகைகள் அதிர்ச்சி அலைகள் எழுப்பின.

இன்று குத்புத்தின் அன்ஸாரி ஒரு வேலையில்லா இளைஞன். வயிற்றுப் பிழைப்புக்கே கஷ்டப்படுகிறார். முதலில் பணியிலிருந்த இடத்தில் குரோதம் பாராட்டி வந்து 'எதிரிகள்' இவரை மிரட்டியிருக்கிறார்கள். இந்தப் போக்குத் தொடரவே, இவருக்கு வேலை பறிபோயிற்று.

'உலகப் புகழ்' பெற்று விட்ட அவர் முகத்தை செல்லும் இடங்களிலெல்லாம் அடையாளம் தெரிந்து கொண்டு விடுகிறார்களாம். இவருக்கு வேலை கொடுத்தால் வம்பு என்று விரட்டி விடுகிறார்களாம்.

போதாக் குறைக்கு, ஆரம்பப் பள்ளியில் பயிலும் இவருடைய குழந்தையின் வகுப்புத் தோழர்கள், "உன் அப்பா ஒரு அழுமூஞ்சி சுப்பன்" என்று கிண்டல் பேசி நோகடித்திருக்கிறார்கள்.




• சுனிதா நாராயண்

இது போன்ற தனி நபர் படங்களைத் திரும்பத் திரும்ப வெளியிட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்துவது பத்திரிகை தர்மம் ஆகுமா என்று 'தி ஹிந்து'வில் நியாயமான கேள்வி எழுப்பியிருக்கிறார் பத்திரிகையாளர் கல்பனா ஷர்மா.

மன்ற உறுப்பினர்களின் பதில்கள் அறிய ஆவல்.

— சுமி


ஜில்லு மல்லு
—கதிர்
ஏய்.... என்ன? யானை விழற அளவுக்குப் பெரிய குழியை வாசல்ல வெட்டி வெச்சிருக்கீங்க...
விடு... அதான் நீ தப்பிச்சு வந்துட்டியே!
ரெயின் ஹார்வெஸ்ட்க்குத்தானே?
ஆமா! முன்னெல்லாம் எங்க வீட்டுக் கிணத்துல எக்கியே தண்ணி எடுத்துடலாம்... இப்ப கிணத்துல ஒரு கல்லைப் போட்டா ஒரு மணி நேரம் கழிச்சுதான் அது தண்ணியில விழற சத்தமே கேக்குது.
இதுக்கெல்லாம் என்னடா காரணம்?
வேறென்ன? அடுக்குமாடி கட்டடங்கள்தான்!
ஆனா, இன்னிக்கு மழை நிச்சயம்டா!
ஏன்?
உன் சின்ன மூளையையும் தாண்டி பெருசா ஒரு மெசேஜ் சொல்லிட்டியே!
எல்லாம் மினரல் வாட்டர் வித்த லாபத்துல கட்டினது...



சூரியனை தைரியமாக எதிர்கொள்ளுங்கள்.
சூரியனின் தீங்கு விளைவிக்கும் UV கதிர்களால் உங்கள் மேனிக்கு ஏற்படும் பாதிப்பு, சருமத்தை நிறம் குறைந்தும், ஜீவனில்லாமலும் காணச் செய்யலாம். புதிய பாண்ட்ஸ் ஸாண்டல் டால்க். இதிலுள்ள நேச்சுரல் சன்ஸ்க்ரீன் தீங்கு விளைவிக்கும் சூரிய கதிர்களிலிருந்து உங்கள் மேனியை பாதுகாக்கிறது. இதன் சந்தனம் உங்கள் மேனிக்கு இதமளித்து அதை ஒளிமயமாகவும் இயற்கை அழகுடனும் திகழச் செய்கிறது.
POND'S
Sandal
NATURAL SUNSCREEN
PURE SANDAL TALC

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka